# தாயகம்

கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழ்



80/=

செப்டம்பர் - ஒக்டோபர் - 2013

# நல்ல நாட்கள் வருகின்றன

எல்லாமே மாறுகின்றன
அந்த விதியின் சக்கரம் நில்லாமல்
உருண்டு கொண்டே செல்கிறது



பெருமழையின் பின் சிறப்பான காலநிலை
கண்ணிமைக்கும் பொழுதில்
இந்தப் பூமி தன்னுடைய சேற்றிலான
ஆடையை வீசி எறிகின்றது
பத்தாயிரம் மைல்கள் தூரத்திற்கு
அழகான பொன் நகை போல்
மலர்த் தோட்டங்கள் விரிகின்றன.
மேன்மையான சூரிய ஒளி
இதமான மெல்லிய காற்று
மரங்களிலே
மின்னுகின்ற இலைகள் ஊடாக
பூத்துக் குலுங்கிச் சிரிக்கும் மலர்கள்
புறவைகள் ஒருங்கே பாடுகின்றன
மனிதர்களும் மிருகங்களும் மீண்டும்
உயிர் பெற்றாற் போல் எழுகின்றன
இதைவிட இயற்கையில் வேறு என்ன வேண்டும்?
துன்பத்தின் பின் இருக்கிறது மகிழ்ச்சி

- ஹோசி மின்

புதிய ஜனநாயகம் புதிய வாழ்வு புதியபண்பாடு

# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

செப்டம்பர்– ஒக்ரோபர் 2013

இதழ் 83



**பிரதம ஆசிரியர்:**

க.தணிகாசலம் தொ.பே. 021-2223629

**ஆசிரியர் குழு:**

சி.சிவசேகரம்

குழந்தை ம. சண்முகலிங்கம்

கல்வயல் வே. குமாரசாமி

சோ.தேவராஜா

அழ. பகீரதன்

ஜெ.சற்குருநாதன்

சி. இதயராஜா

த. கோபாலகிருஷ்ணன்

**பக்க வடிவமைப்பு:**

சிவ. பரதன்

**ஓவியங்கள்:**

முன்னட்டை-யோகி



**தொடர்பு:**

ஆசிரியர்,ஆடியபாதம் வீதி

கொக்குவில்

மின்னஞ்சல்: thayakam_1@yahoo.com



அச்சுப் பதிவு: ஜே.எஸ். பிறிண்டேர்ஸ்,

சில்லாலை வீதி

பண்டத்தரிப்பு

வெளியீடு:

தேசிய கலை இலக்கியப் பேரவை

**நிதி அனுப்பல்களுக்கு :**

'தாயகம் ஆசிரியர் குழு' editorial board of thayakam சேமிப்பு கணக்கு இல 72361444

இலங்கை வங்கி, சங்கானை கிளை

swift code no BCEYLKLX 7010-792


## உள்ளே...

### கவிதைகள்


குழந்தை ம .சண்முகலிங்கம்

கல்வயல் வே. குமாரசாமி

த.ஜெயசீலன்

எஸ். யாதவன்

மு.மயூரன்

வே.ஐ. வரதராஜன்

அழ. பகீரதன்

மீநிலங்கோ

மாக்ஸ் பிரபாகர்

ப.சத்யவதனி


### சிறுகதைகள்


ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்

ஸ்ரீ

அநாதரட்சகன்

சுடர்விழி

துலங்கன்


### கட்டுரைகள்


சி.சிவசேகரம்

ஞா. மீநிலங்கோ

தி. அனோஜன்

பவித்ரா கைலாசபதி

ஞா.சிறிமனோகரன்

க. ஆதித்தன்

தாயகம்
கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

புதிய ஜனநாயகம்
புதிய வாழ்வு
புதிய பண்பாடு

இதழ் 83 செப்டம்பர்-ஒக்டோபர் 2013

# மாகாணசபைத் தேர்தலும் வெலிவேரியாவின் கவன ஈர்ப்பும்

மாகாணசபைகளுக்கான தேர்தல் வருகிறது. இம்மாகாண சபைகளுக்கு ஆட்சி அதிகாரங்கள் உண்டா இல்லையா என்ற சர்ச்சைகள் ஓய்ந்துள்ளன. மக்களிடம் வாக்குக்களைப் பெற்றுத் தத்தமது அரசில் அதிகார பலத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக அரசியற் கட்சிகள் மக்களிடம் வருகின்றன. போர் நடந்த மண்ணில் அதன் பாதிப்புக்களிலிருந்து மக்கள் விடுபடுவதற்கும் பொருளாதார, வாழ்வாதார மீள்கட்டுமானங்களை முன்னெடுக்கும் பணியில் ஈடுபடவும் இத்தகைய அரசியல் பலம் சிறிது உதவக்கூடும்.

ஆனால் இந்த அரசியல் அதிகார பலத்தைப் பெறுவதற்காக தேர்தல் காலங்களில் மட்டும் மக்களை அணுகி அரசியல் பேசும் இவர்கள் எத்தகைய அரசியல் கண்ணோட்டத்தை மக்கள் மனங்களில் திணித்து வாக்குகளைப்பெற முனைகிறார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். கொலனித்துவவாதிகளால் கையளிக்கப்பட்ட பிரதிநிதித்துவ ஜனநாயக வழிமுறை இலங்கையில் இனமையப் பிரதிநிதித்துவத் தேர்வு முறையாகவே தொடர்ந்தும் இருந்து வருகிறது. அது போட்டியின் வலுவுக்கு ஏற்ப மேலும் சாதி, மத, பிரதேசவாதங்களாக குறுகி வலுக்கொண்டு மக்களைப் பிரித்து அரசின் அதிகாரத்தைப் பலப்படுத்தி வருகிறது. பாராளுமன்றத் தேர்தலாக இருந்தாலும், மாகாணசபை, பிரதேச சபைகளுக்கான தேர்தலாக இருந்தாலும் தேர்தல் பிரசாரங்களின் பேசுபொருள் இனவாதத்தை மையப்படுத்தி இவைகளையும் வளர்த்துச் செல்வதாவே இருக்கும்.

மக்கள் எதிர்நோக்கும் அனைத்து ஒடுக்குமுறைகளையும் கவனத்திற் கொள்ளாது, தெற்கிலிருந்து அரச அதிகாரக் கட்டமைப்பின் ஆதரவுடன் பெருந்தேசிய இனவாதமும் அதற்கு எதிராக வடக்கிலிருந்து இந்தியாவினதும் மேற்கு நாடுகளினதும் அதிகாரத்தை நம்பி நிற்கும் குறுந்தேசிய இனவாதமும் உரத்துப் பேசப்படும். அறுபத்தைந்து ஆண்டுகளுக்குமேலாகத் தொடரும் இத்தகைய இனமையவாத அரசியல் மக்களைக் கொன்றழிக்கும் போராக வெடித்துப் பெரும் அழிவைத் தந்த பின்னரும் அவற்றிலிருந்து பாடம் எதனையும் கற்காமல் அதே அரசியல் வழிமுறையிலேயே இலங்கையின் அரசியல் இன்றும் பயணித்து வருகிறது. ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகும் மக்களது உண்மையான நண்பர்கள் யார், எதிரிகள் யார் என்பது அழிவுகளின் அனுபவங்களிலிருந்தும் அறியப்படவில்லை. தேர்தல் காலங்களிலாவது மக்கள் இவைபற்றிய அறிவியல் அடிப்படையிலான அரசியல் பண்பாட்டு விழிப்புணர்வைப் பெற உதவுவதற்குப் பதிலாக அவர்களை இன, மத, சாதிவாத உணர்வுகளுக்குள் பின்தள்ளி இலகுவாக வாக்குகளைப் பெறும் வழமையான வழிமுறையே இன்றும் தொடர்கிறது.

இனமையவாத அரசியல் அதிகாரத்துக்காகத் தேர்தலில் நிற்கும் அரசியல்வாதிகள் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பொருளாதார வாழ்வியல் பிரச்சனைகள் பற்றி அக்கறை கொள்வதில்லை. அவற்றைப் பெறுவது மக்களின் வாழ்வாதார உரிமை என்பதை ஏற்பதில்லை. ஆனால் தமிழ் மக்கள் உட்பட ஏனைய இனங்களைச் சேர்ந்த மக்கள் அனைவரும் இன முரண்பாட்டால் மட்டும் பாதிக்கப்படவில்லை என்பது எல்லோரும் அறிந்த உண்மை. சமூக ஏற்றத்தாழ்வுகளாலும் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளாலும் இலங்கையின் பெரும்பான்மையினரான உழைக்கும் மக்கள் - தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், அரச தனியார் ஊழியர்கள் - நாளாந்தம் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகள், விலைவாசி ஏற்றம்,

வாழ்க்கைச் செலவின் உயர்வு, சம்பள உயர்வின்மை என்பவற்றாலும் மக்கள் அவதிப்படுகின்றனர். இவற்றைத் தாங்கும் வலுவின்றி வறுமை, கடன் தொல்லைகளால் தற்கொலை செய்யும் நிலை அதிகரித்துச் செல்கிறது. அரசு ஏற்று நடைமுறைப்படுத்தும் உலகமய பொருளாதார நடவடிக்கைகளால் தனியார்மயமாகும் கல்வி, மருத்துவம் போன்றவற்றால் பணம் உள்ளவர்களுக்கே கல்வி, மருத்துவம், வளமான வாழ்வு என்ற நிலை வளர்ந்து வருகிறது. மக்கள் மீது திணிக்கப்படும் நுகர்வுப் பண்பாட்டின் தாக்கத்தினால் மனித உறவுகள் சீரழிக்கப்படுவதுடன், கடின உழைப்பு, சேமிப்பு, எளிமையான வாழ்வு என வாழ்ந்த மக்கள் இன்று வங்கிகள் முன் கடனாளிகளாக நிறுத்தப்பட்டுள்ளனர். இதுபோன்ற பலவேறு பிரச்சினைகளுக்கு மக்கள் தமது நாளாந்த வாழ்வில் முகம் கொடுத்து வருகின்றனர்.

ஆனால் இவற்றை அரசியலாகப் பார்த்து இவைகளுக்குத் தீர்வைக் காண்பதை இன்றைய அரசியல்வாதிகள் விரும்புவதில்லை. இவை யாவும் இனமத வேறுபாடுகள் கடந்து இலங்கை மக்களிற் பெரும்பான்மையோர் நாளாந்தம் எதிர்நோக்கித் துயர்ப்படும் பொதுவான பிரச்சினைகள். இவைகளுக்காக இலங்கை மக்கள் இன மத பேதமற்று ஒன்றுபடுவதுடன், ஒடுக்கப்படும் தேசிய இனங்களும் இனவாதத்துக்குப் பதில் இனவாதம் என்ற நிலையை மாற்றி முற்போக்குத் தேசிய நிலைப்பாட்டை முன்னெடுக்க முனைந்தால் பேரினவாத ஆட்சி தானாகவே படுத்துவிடும். இதனை உணர்ந்தே இனப் பிரச்சினைக்கான நீதியான தீர்வை மறுப்பதுடன், முஸ்லிம் மக்களுக்கெதிரான வன்முறைகளையும் தூண்டிப் பேரினவாத அரசியலைக் கொதிநிலையில் வைத்துவருகிறது அரசு. பேரினவாதத்துக்கெதிராகக் குறுந்தேசியவாத அரசியலைத் தொடரும் தமிழர் தரப்பும் அரசு நாடும் கொதி நிலைக்கு உதவத் தீமூட்டித் தானும் குளிர் காய்ந்து வருகிறது.

அடிப்படை வாழ்வாதார உரிமைகள் மறுக்கப்பட்டுப் பாதிக்கப்படும் பெரும் எண்ணிக்கையான தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையக மக்கள் பொதுப் போரட்டங்களில் ஒன்றிணைவதன் மூலம் இறுகிப் போயுள்ள இனப் பிரச்சினைக்ககான தீர்வை மக்களின் ஆதரவுடன் இலகுவாக்க முடியும். சுயநிர்ணய உரிமைக்கான மக்கள் போராட்ட வழிமுறையும் இதுவே. ஆனால் வழமைபோல மாகாண சபைத் தேர்தல் முடிவுகளையும் இந்தியாவும் மேற்குலகும் பார்த்துக் கொண்டிருக்கின்றன என்பதுதான் இவர்களின் அரசியல் நம்பிக் கையும் நிலைப்பாடுமாக உள்ளது. இதுபோன்ற குறுந்தேசியவாத நிலைப்பாடுகளே பேரினவாதத்தை தொடர்ந்து பலப்படுத்தியும் தேசிய இன உரிமைகளைப் பெறுவதற்கான வழிமுறைகளை திசை திருப்பியும் வந்துள்ளன.

இத்தகைய சூழலில் வெலிவேரியாவில் நடைபெற்ற சுத்தமான குடிநீருக்கான சிங்கள மக்களின் கவனயீர்ப்புப் போராட்டம் பேரினவாத அரசின் முகத்திரையைக் கிழித்து அதன் மக்கட்சார்பற்ற அதிகார வர்க்க நிலைப்பாட்டையும், வெறித்தனத்தையும் மீண்டும் ஒருமுறை அம்பலப்படுத்தி உள்ளது. அரசை மாற்றுவதற்காக அல்லாது தாகத்துக்கு அருந்தும் நீரில் ஏற்பட்ட மாசுத்தன்மையை அகற்றிச் சுத்தமான நீரைத் தரும்படி கேட்டு நடந்த கவனயீர்ப்புப் போராட்டத்தை பொலிசாரையும் இராணுவத்தினரையும் ஏவி இரு மாணவர்கள் உட்பட மூவரைக் கொலை செய்தும் நாற்பதுக்கு மேற்பட்டவர்களைக் காயப்படுத்தியும் மிக மோசமான முறையில் அரசு ஒடுக்கியுள்ளது. இங்கு மட்டுமல்லாது சிலாபம் மீனவர்களின் ஆர்ப்பாட்டத்தின் போதும், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்திலும் இதுபோன்ற அடக்குமுறைகளும் கொலைகளும் நடந்துள்ளன. *1971*லும் அதற்குப் பின்னரும் நடந்த இளைஞர் கிளர்ச்சிகளின் போதும் பெரும் எண்ணிக்கையான சிங்கள மக்கள் தமிழர்களைப் போலவே படுகொலை செய்யப்பட்டனர்.

பேரினவாத அரசு சிங்கள மக்கள் மத்தியிலுள்ள அதிகார வர்க்கத்தினரின் நலன்களைக் காக்கும் அரசாகவே என்றும் இருந்து வருகிறது. சிங்கள மக்கள் மீதான சுரண்டலையும் ஒடுக்கு முறையையும் மூடி மறைப்பதற்காகவே பேரினவாதத்தை முன்னிலைப்படுத்தி அவர்களை ஏமாற்றி வருகிறது. எனவே பல்வேறு ஒடுக்கு முறைகளாலும் பாதிக்கப்படும் சிங்கள மக்களின் இத்தகைய ஆர்ப்பாட்டங்களும் கவன ஈர்ப்புப் போராட்டங்க்ளும் கூட ஜனநாயக வழிமுறைகளில் ஒன்றுதான். இது மக்களின் பங்கேற்கும் ஜனநாயகம். ஒரு பிரதிநிதியை தேர்ந்து விட்டு தமக்கான ஜனநாயகக் கடமை முடிந்தது என்று அடுத்த தேர்தல்வரை ஓய்ந்து விடுவது பிரதிநிதித்துவ

ஜனநாயகம். இது ஒரு பக்கத்தில் இருந்தாலும் மக்கள் அரசியலைப் பற்றிச் சிறிதளவாவது அக்கறை கொள்ளும் தேர்தல் காலங்களில் சமூக விஞ்ஞான அடிப்படையில் மாற்றுச் சிந்தனைக்கான அரசியல் வழிமுறைகள் முன்வைக்கப்பட வேண்டும். மக்களிடையே அரசியல் விழிப்புணர்வையும், அதன் மூலம் பங்கேற்கும் ஜனநாயகத்துக்கான அவசிமும் வலியுறுத்தப்பட வேண்டும். அரசு இந்த நாட்டு மக்களையும், தேசிய இனங்களையும் பிளவுபடுத்தி தனது அதிகாரத்தை நிலைநிறுத்த எண்ணும்போது விடுதலையை விரும்பும் மக்கள் யாவரும் மக்களின் ஐக்கியத்தையும், தேசிய இனங்களின் ஒருமைப்பாட்டையும் வலியுறுத்த வேண்டும். எனவே சாதி, இன, மதவாத எல்லைகள் கடந்த அரசியல் விழிப்புணர்வோடு அடிப்படையான அரசியல் மாற்றத்ததை மனதில் கொண்டு மக்கள் தேர்தல்களை எதிர்கொள்வது பயனுள்ளதாகும்.

ஆசிரியர் குழு

# கண்காணிப்பு அரசுகள்

ஒரு நாடு இன்னொரு நாட்டில் அரசியல், ராணுவ உளவுவேலைகளை நடத்தப் பகைமை மட்டும் காரணமல்ல. வணிக, தொழிற்றுறை உளவும் நடக்கிறது. உளவு, பலவேளைகளில் ஆட்சிக் கவிழ்ப்பு வரை போகலாம்.

ஆளும் வர்க்கம் தன் ஆட்சியை மிரட்டலின்றித் தொடர்வதற்கான ஒரு இயந்திரமே அரசு. ஜனநாயக அரசெனப் படுவதன் கீழ், கருத்துச் சுதந்திரத்தையும் தடையின்றித் தகவல்களைப் பெறும் சுதந்திரத்தையும் அரச குறுக்கீடற்ற அந்தரங்க வாழ்விற்கான உரிமையையும் மக்கள் எதிர்பார்ப்பர். கம்யூனிசம் அத்தகைய சுதந்திரங்களை மறுக்கிறது என்போர் இன்னமும் உளர். கம்யூனிச எதிரியும் பிற்கால சி.ஐ.ஏ. முகவருமான ஜோஜ் ஓர்வெல் எழுதிய *'1984'* என்ற நாவல் குறித்துநின்ற கண்காணிப்பு அரசாக அவர்கள் சோவியத் ஒன்றியத்தையும் சோஷலிச சீனாவையும் காட்டிவந்துள்ளனர். ஆனால் அமெரிக்க மனித உரிமை மீறல்களையும் போர்க் குற்றங்களையும் விக்கிலீக்ஸ் அம்பலமாக்கிய பின்பு அமெரிக்க அரசைப் போற் கருத்துச் சுதந்திரத்தை மறுக்கும் வல்லரசு சமகால வரலாற்றில் இல்லை எனத் தெளிவாகியுள்ளது.

அவ்வுண்மைகள் பகிரங்கமான பின், குற்றவாளிகளைத் தண்டிப்பதை விடுத்துக் கடுந் தீவிரத்துடன் விக்கிலீக்ஸ் பொறுப்பாளர் அஸாஞ்ஜைச் சிறைப்பிடித்துத் தண்டிக்க முயன்று ஏமாந்த அமெ ெரிக்கா, இப்போது அவருக்குத் தகவல் வழங்கிய பிரட்லி மனிங் என்ற படைவீரரைக் கைதுசெய்து வதைத்துத் தேசத்துரோகக் குற்றஞ்சாட்டி நீதிமன்றில் நிறுத்தியுள்ளது. மனிங், தனது செயல்களின் ஜனநாயக, தேச நலன்சார்ந்த நோக்கங்களை முன்னிறுத்தி நீதிமன்றை எதிர்கொள்கிறார். இந்நிலையில், நாட்டைவிட்டு வெளியேறிய தேசிய பாதுகாப்பு முகவகத்தினதும் சி.ஐ.ஏ.யினதும் முன்னாள் தொழில்நுட்ப ஆலோசகரான எட்வட்ஸ்னோடன், சிறப்பான சூழ்நிலைகளில் அந்நியர்களின் தொலைபேசி, மின்னூடக உரையாடல்களைக் ஒட்டுக்கேட்க அமெரிக்க அரசு பெற்ற உரிமையை அது துஷ்பிரயோகித்து அமெரிக்கக் குடிகளின் தொலைபேசி, மின் ஊடக உரையாடல் விவரங்களைப் பெற்று வருகின்மையை ஆதாரங்களுடன் வெளிப்படுத்தி, அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றார்.

அஸாஞ்ஜ், மனிங், ஸ்னோடன் ஆகியோர், நாட்டின் பாதுகாப்பின் பெயரில் இரகசியத் தன்மையான கண்காணிப்பு அரசு ஒன்று இயங்குவதை அம்பலப்படுத்தினர். எனினும், சட்டவிரோதமாய் நடந்து நாட்டின் நற்பெயரைக் கெடுத்தோரைத் தண்டிக்காமல், குற்றங்களை அம்பலப்படுத்தியோரை அரசு வேட்டையாடுகிறது. 1950களின் முற்பகுதியில் செனெற்றர் மக்கார்த்தியின் கம்யூனிஸ்ற் வேட்டையைக் கண்ட நாடு அமெரிக்கா என்பதை அறிவோருக்கு அமெரிக்கா 2001இல் நடந்த 9/11 தாக்குதலைச் சாட்டாக்கி மக்கார்த்தி யுகத்திற்கு மீளுவது

விளங்கும். பிரித்தானிய அரசு (முக்கியமாக அதன் உளவு நிறுவனமான ஜி.சி.எச்.கியூ. மூலம்) சிலவகைகளில் அமெரிக்காவை விட மோசமான கண்காணிப்பு அரசாக இயங்குவதையும் ஸ்னோடன் வெளிப்படுத்தியுள்ளார்.

ஒரு முதலாளிய நாட்டின் பாதுகாப்பு என்றுமே மக்களின் பாதுகாப்பல்ல. அது அரசினதும் அதிகார வர்க்கத்தினதும் பாதுகாப்பு மட்டுமே. முக்கியமாகப் பிற நாடுகளைத் தன் ஆதிக்கத்துக்குட்படுத்த முனையும் ஒரு அரசு அந்நிய எதிரிகளை மட்டும் குறிவைக்காது. ஆக்கிரமிப்பு நோக்கம் அதன் பாதுகாப்பின்மையை அதிகரிக்கிறது. எனவே தன்னுடைய மக்களைக் கண்காணித்துக் கட்டுப்படுத்தல் தவிர்க்கவியலாதது. அப் பணி மிகத் தந்திரமாக நடக்கிறது. மக்களிடம் பாதுகாப்பின்மை உணர்வை உண்டாக்கி, அவர்களை அவர்களின் பாதுகாப்பின் பெயரில் கண்காணிப்பதை அவர்கள் ஏற்கிறார்கள். தொடர்பாடலிற் பெருமளவு நவீன தொழில் நுட்பத்திற் தங்கியுள்ள நிலையில்; ஏகாதிபத்தியத்தின் நாடுகளில் ஓர்வெல் எதிர்வுகூறிய '*1984*' நாவலின் 'கண்காணிப்பு அரசு' நிலைபெற்றுவிட்டது.

இந்தியாவும் இப்போது தன் கண்காணிப்பு இயந்திரத்தை வலுப்படுத்த நிறுவியுள்ள 'மத்தியப்பட்ட தெரிவிப்பி முறைகள்' என்ற அமைப்பின் செயற்பாடுகள் அமெரிக்காவினதைப் போன்று தொலைபேசி வலையமைப்புக்கள் முதல் மின் தகவற் பரிமாற்றம் வரை விரிவன. அவை இந்திய அரசியற் சூழலில் சட்டவிரோதமான அரச நடவடிக்கைகட்கும் பாரிய துஷ்பிரயோகங்கட்கும் பயன்படலாம் என்பதால், பல கோணங்களிலுமிருந்து எதிர்ப்பு எழுந்துள்ளது. எனினும் நாட்டிற்கெதிரான உள்நாட்டு, அந்நிய மிரட்டல்களின் நீண்ட பட்டியல் இந்திய அரசிடம் உள்ளது. எனவே, ஆட்சித் தலைவர்கள் மாறினும் அரசாங்கங்கள் மாறினும், குடிகள் மீதான கண்காணிப்பை அரசு வலுப்படுத்திக் கொண்டே போகும்.

இலங்கை அரசு இப்போது அச்சு, மின் ஊடகங்கள் மீது கட்டுப்பாடுகளைத் திணிப்பதை, இப் பின்னணியிலும் ஏலவே வலுப்பெற்றுள்ள அரச அடக்குமுறையுடனும் சேர்த்தே கவனிக்கவேண்டும். அத்துடன் அமெரிக்க, இந்தியக் கண்காணிப்பு வலைகளையொத்த தொழில்நுட்ப வாய்ப்பு வசதிகளற்ற இலங்கை அரசு அவ் வலைகளால் தானும் பயன்பெற முனையுமாயின் இலங்கை மக்களும் (அரசுங் கூட) ஏகாதிபத்திய, மேலாதிக்கக் கண்காணிப்பு வலைகட்குள் விழும் அபாயம் பற்றி நாம் விழிப்புடன் இருக்கவேண்டும்.

ஆசிரியர்.

## உண்மை

வரவர ராவ்

தொழிலாளியின் வேர்வை என்றுமே சொல்லாத உண்மையை
அவனுடைய வெறுவயிறு என்றுமே சொல்லாத உண்மையை
அவனுடைய கண்ணீர் என்றுமே சொல்லாத உண்மையை
அவனுடைய உழைக்கும் முஷ்டிகள் என்றுமே சொல்லாத உண்மையை
ஒரு கவிஞனின் பேனாவிலிருந்து ஒரு துளி மை
என்றேனுஞ் சொல்லுமா?

# புத்தகம்

கே.ஏ.சீவரத்தினம்

ஒரு நல்ல புத்தகம் இருந்துவிட்டால் பாலைவனம் என்ன? நரகம் கூட சொர்க்கமாகி விடும். ஒரு புத்தகத்தை திறப்பவன் ஒரு புதையல் குகையின் வாசலைத் திறக்கிறான்.

'ஒரு மனிதன் எத்தனை புத்தகங்கள் படித்தான் என்பதை வைத்துத்தான் அவன் வாழ்ந்த நாட்கள் கணிக்கப்படும்' என்கிறார் ஹென்றி டேவிட்.

வாசிக்காத நாட்களெல்லாம் சுவாசிக்காத நாட்கள். உயிர் வாழ்வதற்கு காற்றைச் சுவாசிக்கிறோம். ஆதைப்போல முறையாக வாழ்வதற்கு நல்ல புத்தகங்களை வாசிக்க வேண்டும்.

புத்தகங்கள் ஞானம் தரும் போதி மரங்கள். புத்தகங்கள் கருத்துக்கள் பிரசவிக்கும் பிரசவ அறை. வரலாறு உதித்தெழும் உன்னத இடம். இவற்றோடு புத்தகங்கள் கலங்கரை விளக்கங்கள். ஆம்! இருட்டில் பயணிப்பவர்களுக்கு வெளிச்சம் காட்டும். வேளிச்சத்தின் வழி திசை காட்டும்.

கார்ல் மாக்சின் 23 ஆண்டு கால உழைப்பில் உருவான 'மூலதனம்' உழைக்கும் வர்க்கத்தை விழிப்புற வைத்து மானுட விடுதலைக்கு வழி திறந்தது.

ரூஸோவின் புத்தகங்கள்தான் லியோ டால்ஸ்டாயின் உள்ளத்தில் ஞானியாகும் எண்ணங்களை உருவாக்கின.

'அங்கிள் டாம்' என்ற புத்தகம்தான் கறுப்பின மக்களுக்கு விடிவைப் பெற்றுத் தந்தது.

'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்ற புத்தகம்தான் மோகனதாஸ் காந்தியை மகாத்மா ஆக்கியது.

தியேடர் ரூஸ்வெல்ற் இறந்த பின்னர் அவரது தலையணை அடியில் ஒரு புத்தகம் இருந்தது. கடைசிவரை பிறரது கருத்துக்களை உள்வாங்கியவாறே அவர் இறந்துள்ளார்.

'வாளின் வலிமையாலும் ஹோமர்காவியத்தின் துணையாலும் இந்த உலகத்தை வெல்வேன்' என்று கூறினான் மாவீரன் நெப்போலியன். அது போலவே வென்றான்.

'ஒரு நூல் நாட்டை ஆக்கவும், அழிக்கவும், மாற்றவும் வல்லமை படைத்தது ' என்றார் லெனின்.

இறந்த காலத்தை நிகழ்காலமாக மாற்றும் சக்தி புத்தகங்களுக்கே உண்டு. மோசம் செய்யாத நல்ல நண்பன் புத்தகம் என்பதை மறந்து விடாதீர்கள். வாசிப்பு என்பது ஓடும் நதியைப்போல. ஒரு புத்தகம் இன்னொரு புத்தகத்துக்கு அழைத்துச் செல்லும். முடிவில்லாத அந்த நதியில் மூழ்கி சுகங்கள் அனுபவிக்கலாம். நல்ல புத்தகங்களை நாளும் வாசிப்போம். வாழ்க்கையை நேசிப்போம்.


'எனக்கு நல்ல நூல்களைத் தேடித் தருபவர்களே நல்ல நண்பர்கள்' என்றார் சோக் கிரட்டிஸ்.

'தோழனே இது
புத்தகம் அல்ல
இதைத் தொடுபவன்
மனதைத் தொடுகிறான்
நீயும் நானும்
நெருக்கமாகின்றோம்
இதோ!
இதன் பக்கங்களிலிருந்து
நான் உன் கைகளுக்குத்
தாவுகிறேன்
-வால்ட் விட்மன்
(புதுக் கவிதையின் பிதாமகன்)

புத்தகம் இல்லாத வீடு ஜன்னல் இல்லாத வீடு போன்றது. புத்தகம் இல்லாத வீடு ஆத்மா இல்லாத உடலைப் போன்றது.

கவிதை

# பொன் வேய்ந்த கவிகை மாடக் கோயில்



வங்கக்கவி ரவீந்திரநாத் தாகூர்
செவிநுகர தந்த ஒன்று

தமிழில் : குழந்தை ம.சண்முகலிங்கம்

"மன்னவா,
தங்களது அரச குடும்ப ஆலயத்தினுள்
வந்தருள் புரிய
புனிதப் பெருந்தகை நரொத்தம் ஞானி
முற்றிலுமாக மறுத்து விட்டார்",
என்ற செய்தியை
அரச சேவகன் அரசற்கு அறிவித்தான்.

"பரந்த சாலையின் மருங்கில் உள்ள
பெருமரங்களின் நிழலில் அமர்ந்தபடி
அன்னவர்,
இறைபுகழ் பாடி வீற்றிருக்கின்றார்.
வழிபடுவோர்கள் எவரும் இன்றி
வறிதாய் ஆலயம் வெறித்துக் கிடக்கிறது.

நறுந்தேன் நிறைந்த தங்கக் கலசத்தில்
சிறிதளவேனும் நாட்டம் கொள்ளாது,
வெண்டாமரையை வட்டமிட்டு மொய்க்கும்
தேனீக்கள் போலந்த அடியவர் கூட்டம்
நரொத்தம் ஞானியைச் சூழ்ந்தமர்ந்துள்ளனர்."

மனம் சலித்த மன்னவன் விரைந்தெழுந்தான்,
நரொத்தம் ஞானி அமர்ந்திருக்கும் அந்தப்
புற்தரையை நாடி விரைந்து சென்றான்.

அன்னவரை நோக்கி அரசன் கேட்டான்:
"தந்தையே! தங்கள்..
ஆண்டவன் அருளினைப் போதித்து அருளப்
பொன்வேய்ந்த கவிகை மாடம் கொண்ட
என் கோயில் தனை விடுத்து,
இப்புழுதி வெளியில் ஏன் வந்தமர்ந்தீர்?"
"ஏனெனில் மன்னா,
உனது ஆலயத்தினுள் ஆண்டவன் இல்லை,"
என்று கூறினார் நரொத்தம் ஞானி.
முகம் சுழித்த கடுநோக்கொடு மன்னன்
சொன்னான்:

"கலையின் வியத்தகு அற்புதம் என அமைந்த
அந்தக் கோயிலை அமைத்திட எனக்கு
இலட்சம் இருநூறு பொன் செலவானதும்,
பெரும் பொருட் செலவில் கிரியைகள்
இயற்றிப்
பெருமான் தன்னை எழுந்தருள வைத்ததும்,
ஆனமுப் பெருமைகள் அனைத்தையும் நீர்
நன்கறிவீரோ?

"ஆமாம், அதைநான் முற்றும் அறிவேன்,"
என்று கூறிய ஞானி நரொத்தம்,
மன்னனை நோக்கி மேலும் கூறுவார்:

ஆலயம் தன்னை எந்த ஆண்டில்
நீர் அமைத்தீரோ,
அதே அந்த ஆண்டு தன்னில்,
பற்றிப் பரவிய பெருந் தீயினுக்குத்


தம்மனை அனைத்தையும் பலிகொடுத்து நின்ற
உமது மக்களில் பல்லாயிரவர்,
உமது அரண்மனை வாயிலில் கூடி,
உதவி வேண்டி இரந்து நின்றனர்;
எதுவும் பெறாது வெறுங்கையோடகன்றனர்.

"தன் சோதரர் தமக்கு
வீடொன்று அமைக்க மாட்டாத அற்பன்,
கட்டித் தருகிறான் வீடொன்று எனக்கு!"
என்றந்தக் கடவுள் அன்று மனம் சலித்தார்.

தெருமருங்கிருந்த மரங்களின் அடியில்.
உறையுள் இழந்த மக்களின் மத்தியில்
தானிருக்க இடமெடுத்தான் அந்த இறைவன்.
பொன்வேயந்த அந்தக் கவிகைமாட நீர்க்குமிழி
அகம்பாவம் என்னும் வெப்ப ஆவி
ஒன்று மட்டுமே நிறைந்த ஒன்றாக,
வேறேதுவும் அற்றதாய், வெறுமையாய்க்
கிடக்கிறது,"
என்று விளக்கி நின்றார் ஞானி.

"எனது நாட்டை விட்டு வெளியேறு!" என்று
சீறிச் சினந்து கத்தினான் அரசன்.

"ஆம், மன்னனே,
எனது இறைவனை நீ
எங்கு நாடுகடத்தி விட்டாயோ
அங்கு என்னையும் கடத்திவிடு"
என்று ஞானி அமைதியோடு கூறினார்.



## நான் ஒரு கவிதையை உணருகிறேன்

டொான் மற்றோ

ஆழ ஆழமாக இடித்தபடி
ஏன் ஆன்மாவின் மென்சவ்வினுள் நெளிந்தபடி
ஒரு கவிதையை உள்ளே உணருகிறேன்-

சின்னஞ்சிறு முஷ்டிகள் அடித்தபடி
தொப்புள்கொடியை ஒடிக்க முயன்றவாறு
எனது இருப்பினை அடித்தபடி

தாள் மீது பிறப்பதற்காக
அழுது அலறியபடி.

இடித்தபடி
ஆழமாக, அத்தனை ஆழமாக
உள்ளே
ஒரு கவிதையை உணருகிறேன்.

சிறுகதை

# அப்பம்



ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்

பார்வதி ஓரமாக கிழிந்த பாயில் கண்ணயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். உதயசூரியனின் வரவிற்கான நேரம் அண்மித்துக் கொண்டிருந்தது. கிழக்கே, பிள்ளையார் கோயில் மணி ஐந்து தடவைகள் அடித்து ஓய்ந்தது. பார்வதி மெல்லக் கண்விழித்துப் பார்த்தாள். கண்ணாடி ஓட்டின் ஊடாக மெல்ல வெளிச்சம் பரவியிருந்தது. படுத்திருந் தவாறே கைகளை கூப்பி, "பிள்ளை யாரப்பா... நீதான் துணை.!" வேண்டிக் கொண்டே, பாயினை விட்டு எழுந்து கீழேயிருந்த போர்வையை எடுத்து உடலைச் சுற்றிக் கொண்டாள். தலையணையை பாயினுள் வைத்துச் சுற்றி எடுத்து, சுவரோரமாக இருந்த பெட்டகத்தின் மேல் வைத்துவிட்டு அடுப்படிப் பக்கமாக நகர்ந்தாள். இடுப்பில் சொருகியிருந்த தீப்பெட்டியை எடுத்து அடுப்பின் மேலிருந்த விளக்கைப் பற்ற வைத்து, மீண்டும் இடுப்பில் தீப்பெட்டியைச் சொருகிக் கொண்டாள்.

அந்தச் சிறிய விளக்கின் வெளிச்சம் சூழலை இனங்காண வைக்க அடுப்பின் மேல் மூடிவைத்த பாத்திரத்தை திறந்து பார்த்தாள். மா நன்றாகப் புளித்திருந்தது. திருப்தியோடு அதனை மூடிவிட்டு, இடது பக்கமாக இருந்த கடகத்திலிருந்த தேங்காயில் ஒன்றை எடுத்துக் கொண்டு முற்றத்திற்கு வந்து நிலத்தில் இருந்த கல்லில் அடித்தாள். அது வெண்பற்கள் தெரியச் சிரிப்பது போல் சரிசமமாக பிரிந்தது.

பார்வதியின் அயல்வீட்டு சரஸ்வதி ரீச்சர் அடிக்கடி சொல்லுவார்: "பார்வதி ஆச்சி... நீங்கள் உடைக்கிற தேங்காயின்ர சத்தத் திலை... நான் எழும்பிறதே..."

அது நினைவுக்கு வர வலது வேலிக் கப்பால் தெரிந்த ரீச்சரின் கம்பீரமான வீட்டைப் பார்த்துச் சிரித்துக்கொண்டாள்.

"இப்ப... ரீச்சர் எழும்புவா" என முணுமுணுத்தபடி வீட்டிற்குள் நுழைந்தாள். அடுப்படியில் இருந்த விளக்கொளி சுவரில் பட்டு, ஆங்காங்கே பூச்சுக்கள் விழுந்து, சுண்ணாம்புக் கலவைகளும் கண்ட கற்களும் தெரிந்தது. இதே வீட்டில் பிறந்து வளர்ந்த, பசுமையான நினைவுகளோடு, திருவலையை எடுத்து வைத்து விட்டு, கழுவி வைத்திருந்த எவர்சில்வர் தட்டொன்றை எடுத்து வைத்தாள்.

வெடித்திருந்த நிலத்தினூடாக எறும்புகள் வரிசையாக நகர்ந்து கொண்டிருந்தன. அவற்றுக்கு இடையூறு கொடுக்காமல் திருவலையை நகர்த்தி விட்டு தேங்காயை துருவ ஆரம்பித்தாள். மல்லிகை மலர்கள் உதிர்ந்து வீழ்வது போல தேங்காய்த் துருவல்கள் வீழ்ந்து தட்டை நிறைத்தன.

விசாலாட்சி, கதிர்காமப்பிள்ளை இருவருக்கும் பிறந்த ஒரேமகள் பார்வதி. இதனால் சிறிய வயதிலிருந்தே செல்லமாக வளர்ந்

தாள். பருவ மங்கை வயதை எய்திய பொழுது வந்த வரன்களை எல்லாம் நடை சரியில்லை, நிறங்காணாது, மூக்கு கொஞ்சம் பெரிசாக் கிடக்கு. கண் சின்னதாக்கிடக்கு என்று குறை சொல்லிச் சொல்லியே தட்டிக் கழித்ததால் இறுதியில் யாரையாவது திருமணம் செய்து விட வேண்டும் என எண்ணிய பொழுது பார்வதியின் வயது திருமணவயதின் எல்லையைத் தாண்டியது. கதிர்காமபிள்ளை ஆரோக்கியமாக இருக்கும் வரை தோட்டம் செய்தார். பிறகு நோய் வாய்ப்பட்டு படுத்த படுக்கையான போது தோட்டக் காணியை விற்று வைத்தியம் பார்த்ததுடன் மிகுதி வீட்டுச் செலவுக்குக் கரைந்தது. பின் விசாலாட்சி அப்பம் சுட்டு விற்க ஆரம்பித்தாள். கூடவே பார்வதியும் சேர்ந்து கொண்டாள். பார்வதிக்கு ஐம்பது வயது வரைக்கும் கூடவே இருந்த பெற்றோர் அடுத்தடுத்து இறந்தபோது, உறவினர்களும், அயலவர்களும் வந்து உதவினர். நெருங்கிய உறவுகள் தம்மோடு பார்வதியை வருமாறு அழைத்த போது, பிடிவாதமாக மறுத்து விட்டாள்.

இன்று தாம் தொடங்கிய தொழிலை பார்வதி ஆரம்பித்து இருபது வருடங்களாகியது. காலையில் எழுந்து சுட்டெரிக்கும் அப்பங்களை சிறிய பெட்டியில் அடுக்கி, பிள்ளையார் கோயில் ஆலமரத்திற்கு கீழே இருந்து விற்றுவிட்டு வருவாள். அதில் கிடைக்கும் பணம் சேமிப்புக்குப் போதாத போதும் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்தது.

பார்வதி துருவிய தேங்காய் துருவலை எடுத்துக் கொண்டு நிமிர்ந்த போது, நாரி வலித்தது. இரண்டு கைகளினாலும் நாரியை இறுக அழுத்திவிட்டு, "கடவுளே... கொஞ்ச நாளா, இருந்தா எழும்பேலாமல் கிடக்குது...!" தனக்குத்தானே கூறிக் கொண்டு தட்டிலிருந்த தேங்காய்த் துருவல்களை அலுமினியப் பாத்திரத்தில் இட்டு. இன்னும் இருசிறிய பாத்திரங்களை எடுத்துக் கொண்டு தண்ணீர் குடத்திற்கு அருகே அமர்ந்தாள். குடத்தை மெல்லச் சரித்து செம்பில் தண்ணீரை எடுத்து பக்கத்திலிருந்த பழைய பாத்திர மொன்றில் கைகளைக் கழுவிவிட்டு, தேங்காய்த் துருவலுக்குள் சிறிது சிறிதாக தண்ணீர் விட்டு, பாலைப் பிழிந்து சட்டியில் வடித்துவிட்டாள்.

கடைசியாக, தேங்காய்த் துருவலினுள் கொஞ்சம் அதிகம் தண்ணீர் விட்டுப் பிழிந்தெடுத்த பாலை, அடுப்பிலிருந்து பாத்திர மாவை எடுத்து அதனுள் விட்டு விட்டு கைக்கு எட்டிய தூரத்தில் வாங்கிலிருந்த உப்புச் சிரட்டையை எடுத்து அதில் தெளிந்திருந்த உப்புத் தண்ணீரை அளவாக இட்டு அகப்பையினால் கலக்கி, பதம் சரியானதும் அடுப்பின் அருகே வைத்தாள்.

பிழிந்து வைத்த பாலினுள் அளவாக சீனியை போட்டு அடுப்புக்கு கீழே அடுக்கி வைத்திருந்த விறகினை எடுத்து, அடுப்பினுள் வைத்து சோடாப் போத்திலில் இருந்த மண்ணெண்ணெய் ஊற்றி அடுப்பைப் பற்ற வைத்தாள். அந்த ஒளியில் அந்த இடம் ஜோதி வடிவமாகியது. விறகில் பற்றிக் கொண்ட தீ அடுப்பினை விட்டு நகர்ந்து விடத் துடிப்பது போலிருந்தது. அதன்மேல் சீனி கலந்து வைத்த தேங்காய் பால் பாத்திரத்தை சிறிய கரண்டியினால் கிளறினாள். பால் சற்று இறுகியதும் திருகணியில் இறக்கி வைத்தாள்.

அப்பச் சட்டியை அடுப்பில் வைத்து தேங்காய் எண்ணெயை துணியினால் தொட்டு சட்டியில் பூசினாள். பின் ஒரு கரண்டி மாவை சட்டியில் விட்டு சட்டியை துணியினால் பிடித்து சுற்றினாள். மாவின் மீது பாலினை விட்டு கால் மூடியினால் மூடினாள். சிறிது நேரத்தில் சட்டியை இறக்கி, தயாராக இருந்த ஓலைப் பெட்டியில் அப்பத்தை எடுத்துப் போட்டாள்.

அப்பம் நன்றாக வந்த மகிழ்வோடு மிகுதி அப்பத்தை வேகமாகச் சுட ஆரம்பித்தாள். பெட்டி நிறைந்தது. மிகுதியாக இருந்த மாவையும் பாலையும் ஒன்றாக சட்டியில் ஊற்றி மூடி அடுப்பைத் தணித்து விட்டாள். அதனைப் பார்த்திருந்தது போல், சூரிய ஒளி யன்னலூடாக மெல்ல மெல்ல இறங்கி பார்வதியின் காலடியில் வந்து நின்றது. அதன் வரவு உடலில் துரிதத்தை ஏற்படுத்த விளக்கினை ஊதி நூர்த்துவிட்டு, அடுப் போரமாக இருந்த சிறிய கரித்துண்டை எடுத்து வாய்க்குள் போட்டுக் கடிக்க முடியாது போக அதனை நிலத்தில் வைத்து கத்திப் பிடியினால் குத்தினாள். சிறிய கரித்துண்டு துகள்களாக அதனை எடுத்து வாயினுள் போட்டு பற்களைத் தீட்டியபடி கிணற்றடி பக்கம் நகர்ந்தாள்.

உடலைச் சுற்றியிருந்த போர்வையை

கிணற்றோரம் கட்டப்பட்டிருந்த கொடியில் போட்டாள். பழைய கிணற்றடியில், பார்வதிக்கு அறிவு தெரிந்த காலத்திலிருந்து உள்ள துலா இன்றும் கம்பீரம் குறையாமல் இருந்தது. துலாவின் கயிற்றை பிடித்து, வாளியை கிணற்றினுள் இறக்கி வாளியினுள் முழுமையாக நீர் கொள்ளும் வகையில் துலாவை இரு கரங்களினாலும் அமிழ்த்தினாள். துலாவில் இருந்த கரங்களின் சுருக்கங்களைப் பார்த்து, "எல்லாம் சுருங்கிப் போச்சு... பெட் டிக்கை... வைக்க வலு சுகம்.." எனச் சிரித்துக்கொண்டு, துலாவை மேலே தூக்கினாள். வாளி நீரைச் சுமந்து கொண்டு வாளி மேலெழுந்தது. அதனை மெல்லப் பிடித்து, நீரை கிணற்றடியில் இருந்த வாளியினுள் ஊற்றிவிட்டு, அதனை தூக்கிக் கொண்டு வீட்டின் பின்பக்கம் நகர்ந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு வெளியே வந்த போது, சூரியன் பனைமரத்தின் மேல் நின்றது.

"கடவுளே ஆறரையாச்சு... ம்..."

வேகமாக நடந்து கிணற்றடிக்கு சென்று, கால் முகத்தை கழுவி, சேலைத் தலைப்பால் முகத்தை துடைத்துக்கொண்டு முற்றத்துக்கு வந்தாள். வீட்டின் முகப்போடு இருந்த செவ்வரத்தைச் செடிகளில் விரிய ஆரம்பிக்கும் நிலையில் பூக்கள் நிறைந்திருந்தன.

அவற்றில் ஐந்து பூக்களைக் கொய்து கொண்டு சுவாமி அறையினுள் நுழைந் தாள். நேற்று வைத்த பூக்கள் வாடியிருந்தன. அவற்றை எடுத்துக் கீழேயிருந்த பெட்டியினுள் போட்டு விட்டு புதிய மலர்களை வைத்து, குத்துவிளக்கில் இருந்த திரியைச் சரி செய்தாள். பின் இடுப்பிலிருந்த தீப்பெட்டியை எடுத்து விளக்கைப் பற்ற வைத்து இரு கரங்களையும் மார்போடு குவித்து, "எல்லாரும்... நல்லா இருக்கோணும்..."

என இரு கண்களையும் மூடி கடவுளிடம் வேண்டிக் கொண்டு நெற்றியில் மூன்று விரலினாலும் திருநீற்றைத் தொட்டு பூசிக் கொண்டாள்.

இரு அறைகளுடன், சமையலறையும் முன்னிற்கு ஒரு விறாந்தையும் போடப்பட்ட பழையவீடு. அதில் தனித்து வாழப் பழகிக் கொண்ட பார்வதிக்கு வாழ்வு வெறுமையாகத் தெரிந்ததில்லை. வீட்டிற்கு வெளியே வலது பக்கமாக இருந்த வாழைக் கன்றுகளில் சில இலைகளை வெட்டி கழுவியெடுத்துக் கொண்டு அலுமாரியில் சேகரித்து வைத்த பழைய பத்திரிகைகள் சிலதை எடுத்து கையிடுக்குக்குள் வைத்துக்கொண்டு அடுப்படிக்குள் சென்றாள்.

அப்பப் பெட்டியினை எடுத்து அதன் மேல் வாழையிலைகளையும் பத்திரிகைகளையும் வைத்துவிட்டு, சேலைத் தலைப்பை உருட்டி திருகணியாக சுற்றி தலைக்குமேல் வைத்து, அதன்மேல் பெட்டியை தூக்கி வைத்து, வீட்டுக் கதவுகளைப் பூட்டிச் சாவிகளை இடுப்பில் செருகியபடி வீதிக்கு

## கிடைக்கப்பெற்றோம்



நூல் : நினைவுகள் அழிவதில்லை
சிறுகதைத் தொகுப்பு
நூலாசிரியர் : நீர்வைப் பொன்னையன்
விலை : ரூபா 200/=
வெளியீடு : இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்



நூல் : எழுதாத ஒரு கவிதை
கவிதைத் தொகுப்பு
நூலாசிரியர் : த. ஜெயசீலன்

நகர்ந்தாள்.

வீதியோரம் இருந்த குளத்தில் தாமரையும் அல்லி மலர்களும் பூத்திருந்தன. குளக்கரையில் நின்ற வாத்துக்கள் பார்வதியை கண்டதும் சலக் சலக் என சத்தம் எழ குளத்தில் இறங்கின. குளக்கரையில் வளர்ந்திருந்த சம்புப் புற்களில் இடையே இருந்த சம்புக்கோழி பார்வதியை எட்டிப் பார்த்து விட்டு உள்ளே பதுங்கியது.

குளக்கரையின் முடிவில், வீதி இடது, வலது பக்கமாக பிரிந்தது. பார்வதி வலது பக்கமாகத் திரும்பி நடந்தாள்.

கமலாவின் தோட்டக் காணியை நெருங்க அதன் முன்பக்க வீதியோரமாக ஓர் சிறுமி நிலத்தில் குந்தியிருந்தாள். தோட்டத்தின் நடுவே ஓர் தற்காலிக கொட்டில் போடப் பட்டிருந்தது. அதில் கமலாவின் தூரத்து உறவுக்காரப் பெண் குடியிருந்தாள். மூன்று பெண் குழந்தைகளுடன் வந்திருக்கும் பெண்ணின் கணவன் சிறையில் இருக்கிறதாக பேசிக் கொண்டார்கள். பார்வதி இந்தப் பக்கமாகப் போகும் போது, மூன்று பெண் குழந்தைகளும் தாயும் தோட்டம் செய்வதைப் பார்த்திருக்கின்றாள். இன்று காணியில் தக்காளிச் செடிகள் வளர்ந்து காய்த்திருந்தன.

"பாட்டி. உந்தப் பெட்டிக்கை... என்ன கிடக்கு..??"

சிறுமி நிலத்தில் குந்தியிருந்து கொண்டு தலையை ஆட்டிக் கேட்டாள்.

"..ஆ.. அது செல்லம்... அப்பம்..."

"எங்க கொண்டு போறியள்...??"

"அது விக்கிறதுக்கு... கொண்டு.. போறன்..."

சிறுமி நிலத்திலிருந்து எழுந்து, நாடிமீது சுட்டுவிரலை வைத்து, சிறிது யோசித்து, "பாட்..டி.. நான் உங்களுக்கு... தக்காளிப்பழம்... தாறன்... எனக்கு ரண்டு அப்பம் தாறியளே.??"

பார்வதியின் இதயம் சிறுமியின் கேள்வியில் கனிந்து போனது.

"பிள்ளைக்கு... இல்லாததே... வீட்டை ஓடிப் போய்... பல்லுத் தீட்டி... முகங் கழுவிப்போட்டு.. நில்லுங்கோ.. பாட்டி அப்பத்தை வித்துப்போட்டு வரேக்கை... கொண்டுவந்து தாறன்.."

"பாட்..ட..டி.. அப்பத்தை வித்தா.. எனக்கென்னெண்டு தருவியள்...??" பார்வதி சிறுமியின் புத்திசாலித்தனமான கேள்வியில் சிரித்துக் கொண்டு, "முதலிலை பிள்ளைக்கு... நாலை எடுத்துக் கட்டி வைச்சிட்டு... பிறகு தான் விப்பன்... சரியோ... வாறன்."

சிறுமி மகிழ்வோடு தலையசைத்து விடை கொடுத்தாள்.

அந்த சிறுமியின் பூமுகத்தை இதயத்தில் சுமந்தவாறு வந்து, ஆல மரத்தின் கீழிருந்த கருங்கல்லில் அமர்ந்தாள்.

பிள்ளையார் கோயில் பக்கம் திரும்பி வணங்கிவிட்டு, பத்திரிகைத் துண்டொன்றின் மீது வாழையிலையை எடுத்து வைத்து நான்கு அப்பத்தை எடுத்து வைத்து சுற்றி பெட்டியின் ஓரமாக வைத்தாள். சிறிது நேரத்தில் அப்பம் வாங்குவதற்கு ஆட்கள் வரத் தொடங்கினர். வருபவர்கள் கேட்ட அப்பத்தினைக் கொடுத்து, அதற்குரிய காசினை வாங்கி, இடுப்பிலிருந்த துணிப் பையினுள் போட்டுக் கொண்டாள்.

அத்தரின் வாசத்துடன் பக்கத்தில் துவிச்சக்கர வண்டியொன்று நிற்க நிமிர்ந்து பார்த்தாள். சரஸ்வதி ரீச்சர் சிரித்த முகத்துடன் அருகே வந்தார்.

"ஆச்சியிட்டை.... சுடச்சுட அப்பம்.. சாப்பிட வேணுமெண்டு..... நினைக்கிறது.. பிறகு .. வேலையோடை... மறந்திடுவன்... இப்ப எனக்கு நாலு தாங்கோ..."

"ஒரு நாளைக்கு வீட்டை வந்து, சுடச்சுட சுட்டுத் தாறன்.." என்றவாறு பார்வதி. அப்பத்தைக் கட்டிக் கொடுத்தார்.

"நான் எத்தினை ஊருக்குப் போய் அப்பம் சாப்பிட்டு இருக்கிறன். ஆனா... உங்கட அப்பம் மாதிரி வராது... நினைச்சவுடனே வாயூறும்..."

சரஸ்வதி கைப்பையினைத் திறந்து காசைக் கொடுத்தார். பின் துவிச்சக்கர வண்டியினை எடுத்துக் கொண்டு பாடசாலையை நோக்கி வேகமாக சென்றார். சரஸ்வதிக்கு எப்பவும் பார்வதி மீது தனிமதிப்பு, இந்த வயதிலும் அவரின் உறுதியும் உழைப்பில் ஓர் நேர்மையும் பார்ப்பவர்களுக்கு அவர்பால் ஓர் ஈர்ப்பை



கண்ணாடி வார்ப்புக்கள்
நாடகம்

ரெனெஸ்ஸீ வில்லியம்ஸ்

தமிழாக்கம் : நிர்மலா நித்தியானந்தன்
மல்லிகா ராஜரட்ணம்
க. பாலேந்திரா

வெளியீடு : தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்துடன்
இணைந்து
குமரன் புத்தக இல்லம்
இல 39, 38வது ஒழுங்கை, கொழும்பு-6

ஏற்படுத்தி இருந்தது.

அப்பப் பெட்டியில் விற்பதற்கு இன்னும் இருபது அப்பங்கள் இருந்தன. பார்வதிக்கு நீண்ட நேரம் இருந்ததால் காலும் இடுப்பும் வலித்துக் கொள்ள, மெல்ல எழுந்து நின்று ஆலமர விழுதினைப் பிடித்துக் கொண்டு நின்றாள். எழுந்து நிற்க வலி குறைந்தது போலிருந்தது.

அலுவலக நேரம் நெருங்க, நெருங்க வீதியில் பாடசாலை மாணவர்களையும் அலுவலர்களையும் காண முடிந்தது. எல்லோரும் பார்வதியைப் பார்த்து, சிரித்து தலையசைத்து நகர்ந்தனர். மரத்தில் கிளிகளிடமும் குயில்களிடமும் தப்பித்துக் கொண்ட ஆலம் பழங்கள் நிலத்தில் வீழ்ந்தன. மோட்டார் சயிக்கிள் ஒன்று பிரதான வீதி நோக்கி வேகமாக சென்றது. திடீரென ஏதோ நினைவு வந்தது போல் சடுதியாகத் திரும்பி, பார்வதி அருகே வந்து நின்றது. அதிலிருந்து இரண்டு இளைஞர்கள் இறங்கி ஆலமரத்தை நோக்கி நடந்து வந்தனர்.

"பாட்டி, அப்பம் எத்தினை இருக்கு?"

பதிலை எதிர்பாராது பெட்டியைத் திறந்து பார்த்தனர். குனிந்திருந்த அவர்களுடைய காதோரம் வெள்ளைக் கல் தோடு ஜொலித்தது.

"தம்பி... உங்களுக்கு எத்தினை வேணும்?"

அப்பத்தை குனிந்து பார்த்த இளைஞர்களில் உயரம் குறைந்த இளைஞனது சட்டைப் பையிலிருந்த தொலைபேசி இசையெழுப்ப, "பொறுங்கோ... ஆச்சி.."

இரு இளைஞர்களும் ஆலமரத்தின் ஒதுக்குப்புறமாக ஒதுங்கினர். அவர்களுடைய உரையாடலிருந்து அவர்கள் யாரோ பெண் பிள்ளையுடன் பேசுகின்றனர் என்பது விளங்கியது. ஒருவர் மாறி மற்றவர் தொலை பேசியை பறிப்பதும் பேசுவதுமாக இருந்தனர். பத்து நிமிடங்களின் பின், "ஆச்சி... முப்பது அப்பமிருந்தா... தாங்கோ...?"

"இல்லைப் பிள்ளையள்.. இருபது தான் கிடக்கு..!"

"சரி இருக்கிறதைக் கட்டணை..."

என்ற உயர்ந்த இளைஞன், மோட்டார் வண்டியில் ஏறி, அதனை இயக்கி, பின் கைப்பிடியை முறுக்கி கொண்டு நின்றான்.

பார்வதி அவர்கள் கேட்ட அப்பத்தைக் கட்டிக் கொடுத்தாள்.

"என்ன.. ஆச்சி சொப்பின் இல்லையே..?"

"இல்லை... தம்பி.."

"பெட்டிக்கை... இன்னொரு பாசல் கிடக்கு.. அதையும் தாணை..?"

"ச்சீ.. ச்சீ.. அது எனக்கு வேணும்..."

பார்வதிக்கு, இளைஞனின் முகத்தில் திடீரென விபரீத நினைப்பு ஏற்பட்ட சாயல் தெரிய, அதனைப் புரிந்து கொள்ள எத்தனிக்கு

முன், அவன் பார்வதியை ஆலமர வேரோடு தள்ளிவிட பின்புறம் வீழ்ந்தாள். அத் தருணம் கட்டிக் கொடுத்த பார்சலுடன், சிறுமிக்கான அப்பத்தையும் எடுத்துக் கொண்டு ஓடி, இயங்குநிலையில் நின்ற மோட்டார் சயிக் கிளில் ஏறினான். அதற்காகவே காத்திருந்தது போல், மோட்டார் சயிக்கிள் வேகமாகப் புறப்பட்டது. பார்வதி விழுந்த இடத்தி லிருந்து எழ முடியாது வலியோடு,

"அப்பு... ராசாவை... அந்தச் சின்னப் பாசலையாவது தந்திட்டுப் போங்... கோ..?" என மன்றாடினாள். அவர்கள் கண்ணுக்கு தெரியாத் தூரத்தில் ஓடி மறைந்தனர். வீதி வெறுமையாக இருந்தது. எழமுடியாது இடுப்பு வலித்தது. யாராவது உதவிக்கு வருவார்களா எனத் தேடிய கண்கள் பல வருடங்களின் பின் கண்ணீர் சிந்தியன.

மெல்ல விழுதினை பிடித்து எழுந்தாள். கால் கட்டை விரலிருந்து இரத்தம் ஓடியது. சேலைத் தலைப்பை ஓரமாக கிழித்து கட்டுப் போட்டுக் கொண்டு கல்லில் அமர்ந்தாள். கோயிலுக்கு பக்கத்தில் கடைவைத்திருப் பவர் வந்தார்.

"ஆச்சி... என்ன ஒரு மாதிரி இருக்குறியள்.. ஏதும் உடம்புக்கு சரி யில்லையோ..?"

"இல்லை.. இல்லை.. ஒண்டு மில்லை..." பார்வதி அவசரமாக மறுத்தாள்.

"ஆ... நல்லது .. அப்பம் முடிஞ்சுது போல...?"

அப்பப் பெட்டியை எட்டிப் பார்த்து விட்டு, அந்த இடத்தை விட்டு நகர்ந்தார். பார்வதி கீழே விழுந்து இயலாமல் இருந்த வேளை, யாராவது வரமாட்டார்களா எனக் காத்திருந்தாள். இப்பொழுது எவருக்கும் நடந்ததைக் கூற விரும்ப வில்லை.

கால் நிலத்தில் வைக்க முடியாது வலித்தது. ஆயினும் வெற்று அப்பப் பெட்டியை வைத்துக் கொண்டு, மெல்ல மெல்ல வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தாள். அப்பத்திற்காக காத்திருக்கும் சிறுமியின் முகத்தை எப்படி பார்ப்பது என்ற நினைவுகள் அவளை வாட்ட, கண்ணீர் சிந்தினாள்.

கமலாவின் தோட்டக்காணி நெருங் கியது. சிறுமி தாயுடன் வீதி யோரமாகக் காத்திருந்தாள். பார்வதியை கண்டதும்,

"பாட்டி... வாறா.. பாட்டி வாறா.."

சந்தோஷத்துடன் சத்தமிட்டாள். பார்வதி சிறுமி அருகே வந்து, அவளின் தலையினை வருடிவிட்டாள்.

"ஆச்சி... மகள் தக்காளிப் பழத்தையும்.. வைச்சுக் கொண்டு.. றோட்டிலையே நிக்கிறா.. அதுதான் நானும் வந்து நிக்கிறன்..."

தாய் மகளின் கரங்களைப் பிடித்துக் கொண்டு கூறினாள்.

"பாட்டி.. இந்தாங்க.... தக்காளிப் பழம்.. என்ர அப்பத்தை தாங்க..??"

பார்வதியின் முகத்தை நோக்கிய சிறுமி, பாட்டியின் கண்களிலிருந்து பொல பொல என நீர் வடிய திகைத்துப் போனாள்.

"பாட்டி.. விழுந்து போனியளே?"

பார்வதியின் காலிலிருந்த காயத்தையும் கண்டாள். அப்பப் பெட்டியின் வெறுமை யினையும் கண்டு தனக்குள் ஒரு கதையினை உருவாக்கிக் கொண்டாள்.

"ஐயய்யோ.. பாட்டி பாவம்..! அழாதை யுங்கோ அப்பமும் கொட்டிப் போச்சா...??.. அழாதையுங்கோ பாட்டி... நாளைக்குத் தாங்கோ.."

பார்வதி சொல்லமுடியாத வேதனை யோடு சிலையாக நின்றாள்.

"பாட்டி.. அந்த தக்காளிப்பழத்தை.. பிடியுங்கோ.. அம்மா பாட்டியை விட்டுட்டு வருவம்... வாங்கோ.."

"வேண்டாம்... நான் போவன்..."

பார்வதி தக்காளிப் பழத்தை வாங்கிக் கொண்டு, அந்த இடத்தில் நிற்க முடியாது நகர்ந்தாள். சிறுமி பின்புறம் தன்னையே பார்த்துக் கொண்டு நிற்கின்றாள் எனும் உள்ளுணர்வு உணர்த்த, தக்காளிப் பழப் பையினை சுமக்க முடியாத உணர்வோடு சுமந்து குளக்கட்டில் நடந்தாள்.

ஆற்றலும் அறிவும் ஆழுமையும்
ஊக்கமும் அறநெறி சார்ந்த தெளிவும்
சமத்துவ நோக்கும் வாய்த்திடல்
வேண்டும் யார்க்கும்

கட்டுரை

# விளம்பரங்கள் சொல்வதும் உண்மையும்



தி.அனோஜன்

"ஏழே நாளில் பளிச்சென்ற அழகு" "ஜிம்முக்குப் போகாமல் இடையைக் குறை யுங்கள்" போன்ற வாசகங்கள் தொட்டு நவீன விளம்பரங்கள் தாங்கி வரும் அனைத்துமே கவர்ச்சிகரமானவை. பார்த்த கணத்திலே கண்வழி புகுந்து மூளையைச் சலவை செய்யத் தொடங்குவன. குறைந்தபட்சம் அவை தாங்கி வரும் கருத்துப் பற்றிய சிறு அதிர்வைத் தானும் ஏற்படுத்தவல்லன. அழகான விளம்பரங்கள் ஒரு குறும்படம் போல எனலாம். அது சொல்லும் செய்திகள் வீரியமானவை. அவை ஏற்படுத்தும் விளைவுகள் மிக வீரியமானவையும் விபரீதமானவையுங் கூட ஒரு சராசரி மனிதரின் வாழ்வில் அவர் எதை வாங்கலாம் எதை வாங்கலாகாது என நிர்ணயிக்கும் அல்லது நிர்ப்பந்திக்கும் கருவியாக விளம்பரம் மாறிவிட்டது. இந் நிலையில் விளம்பரங்களின் உண்மையான முகத்தை அறியவேண்டிய தேவை உள்ளது.

விளம்பரம் என்பது அனைத்துத் தரப்பு மக்களையும் தொடர்பு கொள்வதற்கான ஒரு உத்தி, மக்களின் மனத்துடன் பேசி அவர்களது மனத்தை மாற்றவல்ல ஒரு சந்தைத் தொடர்புச் சாதனம். விளம்பரம் பற்றிய இச் சிறு விளக்கம் ஒருபுறமிருக்க, விளம்பரத்தின் வரலாற்றை அறிவதன் மூலம் விளம்பரங்கள் எப்படிச் சமூகத்தில் வேரூன்றி விழுதுவிட்டன எனத் தெரியவரும்.

**வரலாறு**

விளம்பரத்தின் வரலாறு ஆபிரிக்கக் கண்டத்திற் தொடங்கியதாக வரலாறு சொல்கிறது. பண்டைய எகிப்தில் விளம்பர உத்திகள் பயன்பட்டுள்ளன என்பது வரலாறு சொல்லும் குறிப்பு. முழுமையான ஆதாரங்கள் இல்லாதபோதும் அதை நம்பகமான ஒரு குறிப்பாகவே வல்லுனர்கள் கொள்கின்றார்கள். 14ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பவின் பலபகுதிகளில் அச்சு இயந்திரம் அறிமுக மாகியதை ஒட்டி விளம்பரத் துறையின் வளர்ச்சி துரிதமானமை கண்கூடு. அச்சுத்துறை விளம் பரங்களின் வளர்ச்சிக்கு நேரடி உந்து சக்தியாகியது. 17ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாரப் பத்திரிகைகளில் விளம்பரங்கள் வரத் தொடங்கியமை வரலாற்று முக்கியமுடையது.

நிறுவனங்களில் ஒரு பகுதியாய் இருந்து வந்த விளம்பரம் தனி நிறுவனமாவதற்கான முதல் அடி 1836 ஜுன் மாதம் எடுக்கப்பட்டது. கட்டணம் செலுத்திய முதலாவது விளம்பரம் 'லா பிரெஸ்" என்ற பிரஞ்சு செய்தித்தாளில் வெளிவந்தது. 1840களில் பொஸ்ற்றனில் 'வொல்னி பாமர்" (Volney B. Palmer) என்பார் விளம்பர நிறுவனங்களின் முன்னோடியை நிறுவுவதற்கும் அதுவே வழியமைத்தது. வில்லியம் டெய்லர் (William Taylor) என்பார் 1786ல் முதலாவது விளம்பர முகவர் நிலையத்தைத் தொடங்கிய போதும் சந்தை வாய்ப்புகள் போதாததால் அவரால் வெற்றி யடைய முடியவில்லை.

20ம் நூற்றாண்டில் வானொலி, தொலைக் காட்சி எனப் பல தொழிநுட்பங்களின் வரவு விளம்பர வளர்ச்சியை வேகப்படுத்தின. அது மட்டுமின்றி, 19ஆம் நூற்றாண்டின் இறுதி முதல் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை உலகின் மொத்த உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு விளம்பரங்களை மிகவேகமாக மக்களிடம்

கொண்டு செல்லும் வழிகளைத் தேட நிர்ப்பந்தித்தது. இக் காலகட்டத்தில் விளம்பர ஒலிபரப்பு, ஒளிபரப்பு நோக்கிற்காவே பல நூறு வானொலிச் சேவைகளும் தொலைக்காட்சிச் சேவைகளும் தொடக்கப்பட்டன.

தொலைக்காட்சி விளம்பரத்தின் ஆதிக்கம் உலகம் முழுவதும் விரிந்து கொண்டிருந்த தொண்ணூறுகளின் நடுப்பகுதியில், இன்று மிகப் பிரபலமாய் உள்ள இணைய விளம்பரங்கள்தான் விளம்பரத்துறையின் அடுத்த கட்டப் பாய்ச்சலாக அமைந்தன. விளம்பரத் துறை ஒவ்வொரு தொழிநுட்பத்தையும் உள்வாங்கியது இணையத்தையும் உள் வாங்கியுள்ளது. 2000ம் ஆண்டுக்குப் பின்பு அதன் வேகம் பன்மடங்கு கூடியுள்ளது. இன்று, ஐந்து இணைய தளங்களில் மூன்று விளம்பரங்களைத் தாங்கிய வண்ணம் உள்ளன.

கால ஓட்டத்தில் மீண்டும் ஒரு புதிய உத்தி தேவைப்பட்டது. இம்முறை, புதிய தொழிநுட்பம் எதையும் உள்வாங்காமற், பண்டைய உத்தியை சிறிது தொழில்நுட்பத்துடன் சேர்த்துத்தான் புதிய விளம்பரமுறை ஒன்று "கெரில்லா மார்க்கெட்டிங்" என்ற பெயரில் உருவாகியது. மக்கள் பெருமளவிற் கூடுமிடங்களிற் திடீரெனத் தோன்றிச் சிறிது நேரம் மட்டுமே மக்களின் கவனத்தை ஈர்த்துவிட்டு வந்த சுவடு தெரியாமற் காணாமற் போவதே அந்த உத்தி. இப்போது, இலங்கையிலும் இவ்வாறான விளம்பரப் படுத்தலை அடிக்கடி காணலாம்.

இப்படிக் காலத்தோடொட்டி மேம்பாடு கண்ட விளம்பரங்கள் பல்லாயிரம் நிறுவனங்கள் சந்தைப் போட்டியில் தப்பிப் பிழைக்கவும் காரணமாய் அமைந்தன. காலாகாலமாக மக்கள் மனதில் விளம்பரங்கள் ஏற்படுத்திய தாக்கத்தின் அளவும் கூடிக் கொண்டே வந்துள்ளது. இது, விளம்பரத்தின் சுருக்கமான வரலாறு. மக்களின் கல்வியறிவும் தொழிநுட்பமும் உயரும் ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒரு பொருளை விளம்பரப் படுத்தும் புதிய உத்திகள் உருவாகின்றன. நவீன விளம்பரங்களின் தந்தை எனப்படும் டேவிட் ஒகில்வி (*David Ogilvy*) விளம்பரங்களின் வெற்றியின் முக்கிய காரணம் இதுவே என்கிறார்.

சாதாரணமாக, விளம்பரங்கள் எல்லாமே பார்ப்பதற்கு ஒரே மாதிரியாய்த் தோன்றினாலும், அவை வெவ்வேறு வகைகட்குள் அடங்குகின்றன.

**விளம்பர வகைகள்**

பொதுவாக விளம்பரங்கள் விளம்பர உள்ளடக்க அடிப்படையில் மூன்று வகையாகப் பார்க்கப்படுகின்றன. அறிவித்தலுக்கோ அறிமுகப்படுத்தலுக்கோ உரியவை (*Informative or Introductory Advertisements*); மீள் நினை வூட்டலுக் கானவை (*Repetitive Advertisement*); வாழ்க்கைமுறை பற்றியன (*Life Style Advertisement*). இவற்றில் முதல் இரண்டும் ஒரு பொருள் பற்றிய அறிமுகத்தையும் அறிவிப்புக்களையும் தாங்கிவருவதுடன் தகவல்களை மீள நினைவூட்டுதற்கானவை. மூன்றாவது, சற்றே மாறுபட்டு ஒரு பொருளை எமது வாழ்க்கை முறைக்குட் திணிப்பதாக அமைகிறது. ஒரு பொருள் பற்றிய விளம்பரம், அறிவித்தலுக்கோ அறிமுகப்படுத்தலுக்கோவான விளம்பரமாகத் தொடங்கிப், பின் மீள்நினைவூட்டலுக்கானதாகி இறுதியில் வாழ்க்கைமுறை விளம்பரம் என்ற நிலைக்குக் காலப்போக்கில் வந்துவிடுகிறது. வாழ்க்கை முறை விளம்பரங்கள், திட்டமிட்டுத் தொடர்ச்சியாக ஒரு பொருளை அத்தியாவசியமானதெனச் சொல்வதன் மூலம் அப் பொருள் உண்மையாகவே ஒரு அத்தியாவசியப் பொருள் என்ற மாயத் தோற்றத்தை மனதில் ஏற்படுத்துகின்றன.

நாம் வழமையாகக் காணும் விளம்பரங்களில் இம் மூன்று வகைகளும் உள்ளனவா எனக் கேட்டால் இல்லை என்பதுதான் பதிலாக இருக்கும். மேலே கூறப்பட்டவை உள்ளடக்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப் பட்ட விளம்பர வகைகள். ஒரு விளம்பரம் வழங்கப்படும் விதத்தின் அடிப்படையில் மேலும் நான்கு வகைப்பாடுகள் உள்ளன. முதலாவது, ஒரு பொருளின் சிறப்புகளை நம்பும்படியாக எடுத்துச்சொல்லி விளம்பரம் செய்வது. இவ் வகையான விளம்பரங்கள் இப்போது அரிதாகிவிட்டன. இரண்டாவது, ஒரு பொருளில் இல்லாத அருமை பெருமைகளைக் கொஞ்சமும் நம்ப முடியாதபடி எடுத்துரைப்பது. இப்போது வரும் விளம்பரங்களிற் பெரும்பாலானவை இவ் வகைக்குள் அடங்கும். குறைந்த வீதத்திற் பயன்படுவதான மூன்றாவது, பொருளின் தீமையை எடுத்துச் சொல்லும். நல்ல பெயராலோ கெட்ட பெயராலோ எப்படி அறியப்படினும் பிரபல்யப்படுத்துதலே முக்கியம் என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டது இது. இறுதி வகை, விளம்பரப் பொருளுடன் உறவேயற்ற விஷயங்களைச் சொல்லிவிட்டு, ஆகவே இப் பொருள் சிறந்தது இதை வாங்குங்கள் என்று கூறும். இவ் வகையான விளம்பரங்களிற் பயன்படும் தொழிநுட்பம் பெரும்பாலும் மிகச் சிறப்பாக அமைவதால், இவ்வகை விளம்பரங்களே இப்போது அதிகளவில் உருவாகி, வெற்றியும் அடைகின்றன.

விளம்பரங்களின் வகைப்படுத்தல் ஒருபுற

மிருக்க, விளம்பரம் என்பது நுகர்வோரை ஊக்குவிக்கவே (motivate) என்பது விளம்பரத் துறையின் வாதம். அந்த ஊக்குவிப்பில் ஆறு வகைகள் உள்ளன என்பர் விளம்பரத்துறை வல்லுனர்கள்.

1. Inherent Motive - நுகர்வோருக்கு ஏலவே அறிமுகமான ஒரு பொருளை விளம்பர மூலம் உறுதி செய்து அதை வாங்க ஊக்கு விப்பது.

2. Learned Motive- விளம்பரம் மூலம் நுகர்வோரைத் ஒரு பொருளைப் பற்றி அறிய வைத்துப் பின்னர் மேலும் விசாரிக்கத் தூண்டுவது.

3. Passive Motive- ஒரு பொருளை பற்றி அறிந்தும் அக்கறை யில்லா திருப்போரை விளம்பர மூலம் மீண்டும் மீண்டும் உத்வேகப்படுத்தல்.

4. Patronage Motive - சேவைகள் மூலம் பயன் பெற்றோர், பொருட் களைப் பயன்படுத் தினோர் போன்ற வர்களின் செவ்வி களை ஒளிபரப்பியோ பிற வகையிலோ விளம்பரப்படுத்தி நுகர்வோரை ஊக்கு வித்தல்.

5. Emotional Motive - மக்களை உற்சாகப் படுத்த பிரபலங்களை வைத்து விளம்பரம் செய்தல்.

6. Rational Motive - ஊக்கப் படுத்துவதற்கும் மேலாகச், சற்று அழுத்தமாகக்,குறித்த பொருள் இல்லா விடின் சில பாதிப்புக்கள் நேரலாம் எனப் பயமுறுத்துவது.

விளம்பரங்களில் இவ்வாறான உத்திகள் பயன்படக் காரணம் விளம்பரத்தின் நோக் கத்தைக் கைகூடச் செய்வதேயாகும். தொலைக் காட்சி விளம்பரங்கள், இணைய விளம்பரங்கள், தற்போதைய புதிய உத்தியான கெரில்லா மார்க்கெட்டிங் உட்பட்ட எவ்வகையான விளம்பரங்களாயினும் அவற்றின் வெற்றி மக்களின் கல்வியறிவு, தொழிநுட்ப அறிவு ஆகியவற்றின் வளர்ச்சி யையொட்டியே அமை ந்துள்ளது. அவற்றுக் குமப்பால் ஒரு விளம் பர வெற்றிக்குத் தேவை யானது, அவ் விளம்பரம் குறிவைக்கும் சமூகத் தின் பண்பாட்டைப் பற்றி விளம்பரத் தயாரிப் பாளருக்கு உள்ள அறி வாகும். ஏனெனில் விளம்பரம் பண்பாட்டுக் கூறுகளுடன் நுட்பமாக உரையாடுகிறது. அதைக் கவனத்திற் கொள்ளும் விளம்பர நிபுணர்கள் வெற்றி பெறுகிறார்கள். விளம்பரத்தின் வெற்றி யென்பது வெறுமனே சந்தைப்படுத்திய பொரு ளினதோ சேவையின தோ இலாபப் பெரு க்கத்திற்கு விளம் பரம் எவ்வளவு உதவி யுள்ளது என்பது மட்டு மில்லை. அது எவ்வ ளவுக்கு மக்களின் கவனத்தை ஈர்க்கிறது என்பதும் வெற்றியின் இன்னொரு அளவு கோலாகும். மக்களை கூர்ந்து நோக்கச் செய்யும் விளம்பரங் களே உண்மையில் வெற்றி அடைந்த வையாய்க் கருதப்படு கின்றன. மக்களைக் கூர்ந்து நோக்கச் செய்வ தற்காக விளம்பரங்கள் பிரபல்யமான நபர் களையும் நேர்த்தி யான தொழி நுட்பத்தையும் மட்டும் பயன் படுத்துவதில்லை. அவை பலநேரங்களிற் பொய் சொல்லவும் தயங்குவதில்லை.

> விளம்பரங்கள் பொய் சொல்லா என்பவர்களுக்கு உண்மையை விளங்கப் படுத்த,"பெயார் அன்ட் லவ்லி" (Fair & Lovely) விளம்பரத்தை விட நல்ல உதாரணம் இராது. அச் சுறுத்தும் தன்மைக்குப் பெரும்பாலான சவர்க்கார விளம்பரங்களைப் போல நல்ல உதாரணங்கள் இல்லை. இது ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோற்றுப் பதம் மட்டுமே. தலைமுடி வளர்வதற்கான எண்ணெய் முதல் காலில் அணியும் செருப்பு வரை உதாரணங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். இன்றைய சூழலில் வெளிவரும் அனேக விளம்பரங்கள் இத்தகையனவே.

**விளம்பரங்கள் சொல்பவையும் உண்மையும்**

எப்போதும் விளம்பரங்களின் உள்ள

டக்கமே வெற்றியைத் தீர்மானிக்கும் காரணியாகும். விளம்பரங்கள் சொல்பவையும் அவற்றில் அடங்கி யிருக்கும் உண்மைத் தன்மையும் பற்றிய இக் கட்டுரையின் அடிப்படைத் தேடல், விளம்பரத்தின் உள்ளடக்கத்தைப் பற்றியது. ஊக்குவிப்பு வகைகள் என விளம்பரத்துறை வல்லுனர்கள் கூறுவன பெரும்பாலும் ஊக்குவிப்புக்களாக இருப்பதில்லை. மாறாக அச்சுறுத்தல்களாகவே அமைகின்றன. அச்சு றுத்துவது, மிகையாகப் புகழ்வது, பொய் சொல் வது எனும் மூன்றும் இன்றைய விளம்ப ரங்களின் அடிப்படைக் கூறு களாம்.

"விளம்பரம்- புக ழ்ச்சியும் அச்சுறுத் தலும் அடங்கிய சிறந்த கலவை" - ஸ்டீபன் லீகொக் *(Stephen Leacock)*. இன்றைய விளம்பரங்களில் பெரும் பாலானவை ஒன்றைப் பற்றி மிகை யாக எம்மை எச்சரிப்பவையாகவும் மிகையாகப் புகழ் வனவாகவுமே உள் ளன. அச்சுறுத்தலும் புகழ்ச்சியும் மிக விரை வாகவே மக்கள் மனதில் ஆழ மாகப் பதியக்கூடியன. விளம் பரங்கள் அவற்றை மிகப் பயனுறக் கையா ளுகின்றன.

"விளம்பரம் சட் டத்தால் அங்கீகரிக் கப்பட்ட பொய்" – எச்.ஜி. வெல்ஸ் *(H.G. Wells)*.

விளம்பரங்கள் பொய் சொல்லா என்பவர்களுக்கு உண்மையை விளங் கப் படுத்த, "ஃபெயார் அன்ட் லவ்லி" *(Fair & Lovely)* விளம்பரத்தை விட நல்ல உதாரணம் இராது. அச்சுறுத்தும் தன்மைக்குப் பெரும்பாலான சவர்க்கார விளம்பரங்களைப் போல நல்ல உதாரணங்கள் இல்லை. இது ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோற்றுப் பதம் மட்டுமே. தலைமுடி வளர்வதற்கான எண்ணெய் முதல் காலில் அணியும் செருப்பு வரை உதார ணங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். இன்றைய சூழலில் வெளிவரும் அனேக விளம்பரங்கள் இத்தகையனவே.

விளம்பரத்தில் வரும் பொருட்கள் குழந்தைகள் மனதில் அத்தியாவசியப் பொருட்களாகப் பதிகின் றன. வாழ்வில் அவசிய மாகத் தேவைப்படாத பொருட்களுக்காக மிக வும் செலவழிக்கும் ஒரு மன நிலையை இது தோற்றுவிக்கிறது. உடலுக்கு தீமை பயக்கக் கூடிய உணவுப் பழக்க வழக்கங்களை நல்ல பழக்க வழக்கங்களாகக் காட்டுவதன் மூலம் ஒரு தவறான வாழ்வியல் முறை உருவாகிறது.

"உங்கள் குடும்பம் வாசிக்கக்கூடாது என நீங்கள் கருதும் ஒரு விளம்பரத்தை ஒருபோதும் எழுதாதீர்கள். உங்கள் மனைவியிடம் நீங்கள் பொய் சொல்ல முடியாது என்பதற்காக என்னுடைய மனைவியிடமும் குடும்பத் திடமும் பொய் சொல்லாதீர்கள்." - டேவிட் ஒகில்வி *(David Ogilvy)*.

இப்படியாக விளம்பரங்கள் பொய் சொல்வது என்பது சிறு தவறு அல்ல. அது ஒரு சமூகத்தையே தவறான ஒரு பழக்க வழக்கத்திற்கு இட்டுச் செல்லும் அளவுக்குப் பெரிய தவறாகும். ஒரு தனிமனிதரின் அன்றாட நடவடிக்கைகளின் மீது விளம்பரங்கள் செலுத்துகிற ஆதிக்கத்தை அறிய எமது சூழலில் ஏற்பட்டுள்ள நுகர்வின் அதிகரிப்பே போதுமானது. நுகர் வோரை எப்படியாவது அதிக மாகக் கொள்வனவு செய்ய வைத்தல் விளம்பரங்களின் பிரதான இலக்காகும். ஒருவ ருக்குத் தேவையில்லாத ஒரு பொருளை அவர் மீது திணிப்பதையே அவை செய் கின்றன. இன்றைய நுகர்வுக் கலாசாரத்தைத் தாங்கி நிற்கும் தூண்களில் விளம்பரமும் ஒன்று என்பது மறுக்க முடியாத உண்மை. குறிப்பாக "வாழ்க் கைமுறை விளம் பரங்கள்" *(Life Style Advertisements)*, தேவையற்ற ஒரு பொருளை வாழ்க் கையின் அத்தியாவசியப் பொருளாக மாற்றிவிடு கின்றன.

**விளம்பரத்தின் பாதிப்புக்கள்**

"சரி, விளம்பரங்கள் பொய் யையே சொல்லி விட்டுப் போகட்டும். நீங்கள் அதை முற்றாக நம்பிவிடாமல் அலசி ஆராய்ந்து பாருங்கள்" என்று சிலர் சொல்லக் கூடும். உண்மை என்ன வெனில், விளம்பரங்கள் பெரும்பாலும் இளைய தலை முறையையே குறிவைக்கின்றன. தமது எதிர்கால நுகர்வோரைக் குறி வைக்கின்றன. சிறுவர்கள் ஒரு விளம்பரத்தை அலசி ஆராய்ந்தே ஏற்க வேண்டும் என நாம் எதிர்பார்க்க முடியாது. தற்போதைய விளம் பரங்கள் அதற்கான அவகாசத்தை அவர்கட்கு வழங்குவதில்லை. விளம்பரங்கள் தொடர்ச்சி யாக அவர்கள் கண்முன் வந்து மனதிற்

பதிந்துவிடுகின்றன. நடைமுறையில், விளம்பரங்கள் எவரது உள வியலிலும் தாக்கம் ஏற்படுத்த வல்லன.

இளைய தலைமுறை மீதான விளம்பரத்தின் தாக்கம் பெரியது. குழந்தைகள் விளம்பரங்களில் வரும் பொருட்களை வாங்கித் தருமாறு பிடிவாதம் பிடிக்க வைப்பதும் விளம்பரங்கள் பொருட்களின் நல்ல பக்கத்தை மட்டுமே காட்டுவதால் அப் பொருட்கள் நல்லவை என்ற தப்பான எண்ணம் குழந்தைகட்கு ஏற்படுகின்றமையும் தொடக்கம் யாவுமே காலப்போக்கிற் பெரும் பாதிப்பை ஏற்படுத்த வல்லவை. தற்போது, பல விளம்பரங்களில் நிபுணர்கள் மட் டுமே நிகழ்த்தக்கூடிய ஆபத் தான சாகசங்கள் விளம்பரங்களில் காட்டப்படுகின் றன. வீட்டில் முயல வேண்டாம் என்ற எச்சரிக் கையுடன் அவை வந்தாலும் குழந்தைகள் அவற்றைச் செய்து பார்க்கின்றனர். அதனாற் பெரும்பாலும் மோசமான விளைவுகளே ஏற்படுகின்றன. விளம் பரங்களில் இவ்வாறான நேரடி ஆபத்துகளும் உள்ளன.

விளம்பரத்தில் வரும் பொருட்கள் குழந்தைகள் மனதில் அத்தியாவசியப் பொருட்களாகப் பதிகின்றன. வாழ்வில் அவசியமாகத் தேவைப்படாத பொருட் களுக்காக மிகவும் செலவ ழிக்கும் ஒரு மனநிலையை இது தோற்றுவிக்கிறது. உடலுக்கு தீமை பயக்கக் கூடிய உணவுப் பழக்க வழக்கங்களை நல்ல பழக்க வழக்கங்களாகக் காட்டுவதன் மூலம் ஒரு தவறான வாழ் வியல் முறை உருவாகிறது. சமுகவியல் நோக்கில், இவை மிக விபரீதமான விளைவு களை ஏற்படுத்துகின்றன. அதாவது, தவ்றான வாழ்வியலைப் பின்பற்றும் ஒரு சமுதாயத்தை உருவாக்கக்கூடிய அத்தனை சாத்தியக் கூறுகளையும் விளம்பரங்கள் தம்முட் கொண்டுள்ளன. இவ்வாறு விளம்பரங்கள் செய்யும் தீமைகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

## முடிவு

தற்போதய உலகமயமாதற் சூழலில், விளம்பரமானது ஒருவரைத் தன்னையறியாமலே மிகப்பெரும் நுகர்வோராக்கும் பணியிற் தொடர்ந்தும் வெற்றியடைந்த வண் ணம் உள்ளது. விளம்பரங்கள் எப்போதுமே பிழையானவையில்லை. அவை பொய் சொல் லும்போதும் உண்மையைத் திரிக்கும்போதும் மட்டுமே அவை பிழையாகின்றன. என் கவலை என்னவெனிற் பெரும்பாலான நேரங்களில் அவை பொய் சொல்கின்றன, உண்மையைத் திரிக்கின்றன. விளம்பரங்களை எப்போதும் சந்தேகத்துடன் அணுகுவது புத்திசாலித் தனமானது மட்டுமல்ல கட்டாயத் தேவையுமாகும். விளம்பரங்கள் பற்றி எமது சமூகத்தை, குறிப்பாக இளைய தலைமுறையை விழிப்புணர்வு பெறச் செய்வது எம்மிடம் நம் எதிர்காலம் வேண்டி நிற்கும் கடமையாகும்.

### ஸா' அடியின் கவிதையொன்று

ஒரே சாராம்சத்தினின்று ஆக்கப்பட்டோராதலால்

ஆதாமின் குழந்தைகள், ஒருவர் மற்றவரின் கரங்களாவர்.

காலத்தின் பேரிடி ஒரு கரத்தைத் தாக்கின்

பிற கரங்கள் ஓய்ந்திருக்க இயலாதன்றோ.

பிறர் துன்பங்கட்காய் நீ இரங்காயென்றால்

நீ மனிதனெனப் பேர் சொல்லத் தகுதியற்றோன்.

ஈரானின் வரலாற்றுத் தொன்மையுடைய நகரமான ஷிராஸில் (Shiraz) பிறந்த ஸா' அடி (கி.பி. 1200-1292) ஈரானின் கவிஞர்களுள் மிகவும் போற்றப்படுபவர்களுள் ஒருவராவர்.

## கண்ணாடி முன்

உலகில் நமக்கு
வழங்கப்பட்ட நேரத்தை நாம்
விழிப்பிலும் துயிலிலும் செலவழிக்கிறோம்.
நம் தோல் முதல் ஆன்மா வரை நாம்
சிறிது சிறிதாய் வெளிறுகிறோம்.
ஒவ்வொரு நாளும் மேலும் கவலைகள் நிறைத்து வருகிறது
நம்மால் அதன் குருட்டுக் காலடியைத் தவிர்த்தல் இயலாது.
நம் அன்றாட அபிநயங்கள் நம்மைச்
சாவைத் தொல்லைப்படுத்தலுக்கு நெருக்குகின்றன.
கண்ணாடி முன் நாம் திடீரென
நம் வயதைக் கண்டறிகிறோம்.
எத்தனையோ சூரியர்களும் மழைகளும்
நம் முகங்களில் நிறைத்திருக்க
நம்மால் அனைத்து நிழல்களுக்கும் ஒளியூட்டவும்
அனைத்துப் பாலைவனங்கட்கும் நீர்பாய்ச்சவும் முடியும்.
வந்துசேரும் ஒவ்வொரு மெழுகுதிரியும்
நீங்குகின்ற ஒரு ஆண்டு.
தொட்டிலிலிருந்து கல்லறை வரையான பாதை
நெடிதும் துயரானதுமாம்.
எனினும், மிகைப்படுத்தலின்றி,
நாம் இனிய, மகிழ்வான
கணப்போதுகளில் வாழ்கிறோம்.
காலங்களில் மிகக் கொடியதில் வாழ
நாம் விதிக்கப்பட்டிருக்கிறோம்.
இருபதாம் நூற்றாண்டிற்கு நான் பெயர் சூட்டின்
அதை நான்
போராட்டம் என்பேன். பின்னர் அழுவேன்.
பிறர் உயிர்வாழுமாறு
நம் கைகளிலும் ஆன்மாக்களிலும்
எத்தனையோ பொருட்கள் இறந்தன.
எனவே நான் பெருமையுடன்
இரண்டாயிரமாம் ஆண்டின் மக்களிடம் கூவுவேன்:
நம்மை மேலும் கொஞ்சம் நேசியுங்கள்
நம் முடிவுறாத வாழ்வில்
நாம் இன்னமும் துன்புறுகிறோம்.
கண்ணாடி முன் நாம்
நம் தலைமுடியின் வயதை
நாம் அறியும் போது,
அங்கே ஒளிந்திருக்கும்
நிலவுகளைக் காணும்போது,
எத்தனையோ விடயங்களைச் சிந்திக்கிறோம்.
நாளை
நம் நண்பர்கள்
இன்னமும் எதிர்ப்புக்களோடு புகையும்
தமது நண்பர்களின் சாம்பலை
நேசிப்பார்கள் என்று
சொல்லியோ, எழுதியோ
நாம் நம்மை ஆறுதல்படுத்தலாம்.
பின்னர் நாம்
நம் ஆன்மாக்களைக்
கருநீல விரல்களால் அடைக்க
எங்காவது
நம்மை எதிர்பார்த்திருக்கும்
குளிரைப் பற்றி எண்ணாமல்
நமது காலத்தில் சிரித்தபடி
வாழ்வைத் தொடரலாம்.

மூலம்: ஒட்டோ றெனே கஸ்டிலோ (Otto Rene Castillo)
தமிழில்: மீநிலங்கோ

## பெண்ணே, அறிவாய்!

கன்னத்தை
விரல் தாங்கியில் வைத்து
என்னத்தை
எண்ணுகிறாய்-
முன்னெப்போதும் இல்லா
அறிவு பரந்த மூளை
பெற்றாய் எனிலும்
என்னவோ கவலை உனக்கு!

கூந்தல் பின்னி
கிளிப்பும் சொருகி
பொட்டும் இட்டு
மையும் தடவி
வகைகள் மாற்றி
உடைகள் உடுத்தி
நிறங்கள் திறங்கள்
விலைகள் கூட்டி
புடவை காட்டி
தெருவில் நடந்தால்
ஆடவர் உன்னை
கூர்ந்தே நோக்கும்
போகப் பொருளாய்
ஆவாய் நீயே!


அழகியெனும் நினைப்பில்
அமிழ்ந்து போவாய்
புகழுரை கேட்டுப்
பூரிப்பு எய்துவாய்
நினை இழப்பாய்
தாழ்ந்து போவாய்
சுயம் இழப்பாய்
ஆண்மைக்குள் கட்டுண்டு
அடிமையாய் இருப்பாய்!

மீறி நீயெழுந்து
அழகே உயர்வு
அழகே வாழ்வு
எனநீ கொண்ட கருத்து
மாற்றிடில் அன்றோ
உனக்கென சுதந்திரம்
உளதென ஆகிடும்
அறிவாயோ பெண்ணே!

அறிந்திடில்,
உடையை மாற்று
நடையை மாற்று
விடை கொடு
அணி வகைக்கு!
உழைப்பில் உயர்
உருளும் உலகில்
நாளை
ஆடவர்க்கு சமமென
ஆவீர் நீரென
ஆடவர் ஏற்பர்!

ப. சத்தியவதனி

சிறுகதை



# பசி

அநாதரட்சகன்

அன்று பொழுது நன்றாக விடிந்து விட்டிருந்தது.

திரேசாவுக்கு படுக்கையை விட்டு எழுந்திருக்க மனம் இடங்கொடுக்க வில்லை.

அவள் உடல் முழுவதும் அப்படி ஒரு அசதி. கடின உழைப்பினால் கை கால்கள் உழைவெடுத்தன. ஈரப்பாத்திகளில் நீண்ட நேரமாகக் குந்தியிருந்து வெங்காயம் நடுகை செய்ததால் காய்ச்சல் வந்து வருத்திக் கொண்டிருந்தது.

கடந்த நாலுநாட்களாக அவளைப் பீடித்திருக்கும் காய்ச்சல் இன்னும் விட்ட பாடில்லை. அன்றைய நாளையும் ஏதோ வகையில் பற்றாக்குறையுடன் ஓட்ட வேண்டிய பொறுப்பு திணிக்கப் பட்டிருந்தது.

ஒருவாறு படுக்கையைவிட்டு எழுந் தவள் அடுப்புக்குள் சாம்பலைக் கிளறி கரித்துண்டொன்றை எடுத்து வாயில் அதக்கியபடி கிணற்றடிக்குப் போனாள்.

தண்ணீரை அள்ளி வாயில் விட்டு நன்றாகக் கொப்பளித்துவிட்டு வயிறு நிறையத் தண்ணீரைக் குடித்தாள். அருகிலிருந்த சவர்க்காரப் பெட்டியைத் திறந்து பார்த்தபோது அது தீர்ந்துவிட்டிருந்தது.

தண்ணீர் முகமெங்கும் பட, முகம் சிவந்தது. மனதுக்கும் இதமளித்தது. எரிவெடுத்த உடலுக்கும் ஆசுவாசமாக இருந்தது. அந்த சுகானுபவத்தில் அவள் சிறிது திளைத்திருந்த வேளை,

"திரேசா... திரேசா... அடியேய் வெளியில் வாடி....?"

கேற்றடியில் மோட்டார் சைக்கிள் சத்தத்துடன் மிதந்து வந்த கூச்சல் அவள் காதுகளை வந்து அறைந்தது.

அவளை நிச உலகத்துக்கு இழுத்துவந்து சூழலையே உசுப்பிவிட்ட அச்சத்தம் அக்கம் பக்கத்திலிருந்தவர்களையும் விடுப்புப் பார்க்க வைத்துவிட்டது.

மனதுக்குள் ஏதோ கற்பனையில் இருந்தவளுக்கு இடிவிழுந்தது போலா யிற்று. வாளியிலிருந்த தண்ணீரை அவக் கவக்கென்று உடலெங்கும் அடித்துக் கொண்டாள். இடுப்பில் கட்டியிருந்த துணி அவிழ அதனை ஒருகையினால் பிடித்தபடி எட்டிப்பார்த்தாள்.

பழனி... கடை முதலாளி பழனி அந்தக் குடியிருப்பில் கடைவைத்து ஏகபோகமாக வியாபாரம் செய்து தன்னை வளப்படுத்தி இன்று முதலாளியென எல்லோராலும் மதிக்கப்படுபவன்.

அவளைக் கண்டதும் மோட்டார் சைக்கிளை நிறுத்தி சாவியை எடுத்தவேகம் அவனது கடுப்பின் தன்மையைக் காட்டியது.

கேற்றைத் திறந்து கொண்டும் முற்றத் துக்கு வந்துவிட்டவன்,

" என்னடி... நான் கூப்பிட்டது கேக்

கேல்லையே... பேசாமல் இருக்கிறாய்."

"பழனியண்ணை கோவிக்காதை யுங்கோ. சுகமில்லாமல் இருக்கிறன். அதாலை வேலையளுக்கும் போகேல்லை. காய்ச்சல் வந்து படுத்திருக்கிறன் அண்ணை."

"எடியேய்... எளிய வேசை... ஒருமாதமா இதைத்தானை சொல்லிக் கொண்டிருக்கிறாய்..."

"இல்லையண்ணை..."

" கடன் கேக்கேக்கை மட்டும் சிரைச்சுக் கொண்டு வந்திடுவாய். சிரிச்சுச் சிரிச்சு நெளிவாய். இப்ப ஓடி ஒழிகிறாய்..."

தன் ஆவேசத்தை இன்னும் ஆபாசமாக வார்த்தைகளில் கொட்டித் தீர்த்தான் அவன்.

உறக்கத்திலிருந்த அவள் பிள்ளைகளும் விழித்துக்கொண்டு கலவரத்துடன் அம்மா வைப் பார்த்தனர்.

அக்கம் பக்கத்தவர்களும் ஒன்றுகூடி வேடிக்கை பார்த்தனர்.

திரேசா அவமானத்தால் ஒடுங்கிப்போய் நின்றாள்.

"எனக்கு சந்தையிலை சாமான் தாறவைக்கு கடன் சொல்லேலுமே..."

"சரியண்ணை. கோவியாதையுங்கோ... எல்லாரும் வேடிக்கை பாக்கினம். வெக்க மாயிருக்கு. ஆரிட்டையும் மாறி எப்படியும் தந்திடுறன்..."

" ஏய். . இண்டைக்கு பின்னேரத்துக் கிடையிலை காசு வராவிட்டால் பிறகு என்ன நடக்குமெண்டு பார்.... "

ஆவேசத்துடன் கூறிவிட்டு மோட்டார் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு போனான்.

திரேசா எதுவும் செய்வதறியாது உடல் சோர்வுற்ற நிலையில் சுவரில் சாய்ந்து கொண்டாள்.

முன்னால் வந்து நின்ற பிள்ளைகளில் திரேசாவின் பார்வை குத்திட்டு நின்றது. பிள்ளைகளுக்கு சிலநாட்களாக வேளா வேளைக்கு உணவுகொடுக்கக்கூட இயலுவ தில்லை.

மூத்தவன் யோசுவா வருகிற ஆவணியுடன் பதினைந்து வயதை எட்டிவிடுவான். இளையவன் சிரோமிக்கு எட்டுவயதாகி விட்டது. இருவரும் படிப்பிலும் கெட்டிக் காரர்கள். பள்ளிக்கூடத்தில் எல்லோரிடமும் நல்ல பெயர் எடுத்தவர்கள்.

பள்ளிக்கூடத்தில் தவணைப் பரீட்சை நெருங்குவதால் வசதிக் கட்டணம், பரீட்சை நெருங்குவதால் வசதிக் கட்டணம், பரீட்சைக் கட்டணம் என கேட்கவும் ஆரம்பித்து விட்டார்கள். பெற்றோருக்கான கூட்டங் களில் மட்டும் தாம் இலவசக் கல்வியை வழங்குவதாகவும், அது ஏழைகளுக்கான வரப்பிரசாதம் எனவும் பெரிதாகக் கூறிவிடுகிறார்கள். நடை முறையோ அதற்கு எதிரானது.

நேற்றைய தினமும் காசுகேட்டு தன்னை அடித்து அவமானப்படுத்தியது பற்றி குமரன் கூறியது பற்றி நினைவுக்கு வர தனது இயலாமைக்காக நொந்து கொண்டாள்.

திரேசாவின் குடும்பத்துக்கென்று சொந்த நிலபுலமிருந்தும் அதனை ஆண்ட வனுபவிக்க முடியாத துர்ப்பாக்கியம்.

வளம் கொழித்த மண்ணிலிருந்து வேரோடு பெயர்க்கப்பட்ட குடும்பங்களில் அவளது குடும்பமும் ஒன்று. இருபது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. சொந்த மண்ணின் வாசனையும் அற்றுப்போய்விட்டது. இடம் பெயர்ந்து வந்து உரும்பிராயில் கிருஷ்ணபுரம் என்ற இந்த குடியிருப்பில் வாழுகிறாள். கணவனும் இரண்டு குழந்தைகளையும் கொடுத்துவிட்டு போன வருடம்தான் நோயினால் அவதியுற்று இறந்துவிட்டான்.

சொந்த பந்தங்களும் வன்னிக்கும் வேறு இடங்களுக்கும் என்று திசைமாறிப்போய் விட்டனர்.

அவள் மட்டும் இங்கு தனித்துப்போய் விட்டாள்.

கணவன் இறந்தபின் தோட்டக் கூலி யாகவும் வீடுவீடாக அலைந்து மா இடித் தும் தொட்டாட்டு வேலைகள் செய்தும் கிடைக்கும் அற்ப வருவாயில் வாழ்வை ஓட்ட வேண்டிய கொடுப்பினை அவளுக்கு நியதி யாகிவிட்டது.

இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணங் களையும் குறைத்துவிட்டார்கள்.

எதுவும் கிடைக்காதபோது, பிள்ளைகளு டன் பட்டினி கிடக்கவும் நேர்ந்துவிடுகிறது.

அவள் படுக்கையில் விழுந்ததிலிருந்து சிலநாட்களாக குடும்பம் இந்தக் கடினமான பட்டினிச் சோதனையில் பரிதவித்துக் கொண்டிருக்கிறது.

அந்தக் குடியிருப்பில் வசிப்பவர்களில் அத்தனை பேரும் தினக்கூலிகளாகவே வாழ்க்கையை ஓட்டி வருகின்றனர். மனமிருந்தாலும் ஒருவருக்கொருவர் ஆதாரமாக இருக்க முடியாத நிலைமை. மனமிருந்தும் மடி இடங்கொடுக்காத நிலை அவர்களுக்கு. இப்படியாக அவர்களுக்கென சபிக்கப்பட்ட அகதிவாழ்க்கை நிரந்தரமாகிவிட்டது.

நோயினால் கடுமையாக அல்லாடிப் போன அவளுக்கு இந்த ஒருவாரமாக கையில் சிறுதொகைப் பணத்தைப் பார்ப்பது கூட குருட்டு அதிர்ஷ்டமாகத் தோன்றியது.

வீட்டில் பசித்த வயிற்றுடன் பிள்ளைகள். அவர்களின் பள்ளிக்கூடச் செலவு, அவ்வப் போது பட்ட கடன்கள் வேறு அவளைப் பயமுறுத்தியபடி இருந்தது. இவை யெல்லாம் கூடி அவளைப் பித்துப் பிடித்தவளாக்கி விட்டது.

நேற்றும் உடல்நிலை இடம்கொடாத போதும் ஊருக்குள் அலைந்தவளுக்கு எதுவும் கிடைக்காமல் வெறுங்கையுடன்தான் வீடு திரும்பினாள். இவள் வரவை எதிர்பார்த்து ஆவலோடு காத்திருந்த பிள்ளைகளுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. அம்மாவின் முகத்தில் தெரிந்த மாறுபட்ட குறிப்பை புரிந்துகொண்டு விலகிக் கொண்டனர்.

நடந்தவைகள் யாவும் நினைவில் மீள மனதுக்குள் வதைபட்டாள்.

உடல் பலவீனப்பட்டுப்போக பாயில் புரண்டுகொண்டிருந்தாள். திறந்த வாசலின் வழியாக சூரியனின் கதிர்கள் வீட்டுக்குள் மெல்லமெல்ல ஊடுருவிக் கொண்டிருந்த து.

நேரமும் எட்டுமணியைத் தாண்டிக் கொண்டிருந்தது.

அருகே இளையவன் சிரோமி பசித்த வயிற்றுடன் சுருண்டுபோய்க் கிடப்பதைப் பார்த்தாள். மனம் பதைத்தது.

மூத்தவன் யோசுவாவைக் காணவில்லை. வெளியே சென்றிருக்க வேண்டும் என நினைத்துக் கொண்டாள். பிள்ளைகள் இன்று பாடசாலைக்குச் செல்வதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை,

பழனி கடையில் திரும்பவும் கடனாக சாமான்கள் கேட்டுப் பார்க்கலாமென மனதில் எண்ணிக்கொண்டாள். பிள்ளை களின் வயிற்றுப் பசிக்காக இன்னொரு முறை அவமானப் பட்டால் என்ன?

நப்பாசையில் திரேசாவின் மனம் அலைபாய்ந்தபடி இருந்தது. பசி வேறு வயிற்றைக் குடைந்தது. வருத்தியது.

அவளது உடல் தெம்பை படிப்படியாக இழந்து கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

பசித் தீயினால் பற்றி எரிந்து கொண்டிருக்கும் வெற்று வயிறுகளுக்கு யாசகம் கேட்கத் துணிந்துவிட்டாள்.

தட்டுத்தடுமாறி எழுந்து நின்றவள் முற்றத்துக்கு வந்தாள்.

யோசுவா யாருடனோ குசுகுசுத்துக் கதைப்பது காதில் மெல்ல வந்து விழுந்தது.

வந்தவனை அவன் குரலிலிருந்து இனங் கண்டு கொண்டாள்.

அவன் வேறுயாருமல்ல, அந்தோனி என்பதை உறுதி செய்து கொண்டாள். அவனும் இந்தக் குடியிருப்பில் வாழ்பவன் தான். சிறு குழந்தைகளுக்கும் அவனை நன்றாகத் தெரியும். கள்ளத்தனமாகக் கசிப்புக் காய்ச்சி விற்பவன். சிறுவர்களுக்கு ஆசைகாட்டி சாதுரியமாகக் கைக்குள் போட்டுக்கொண்டு தூர இடங்களுக்கு கசிப்பை விநியோகித்து வருபவன்.

குறுக்கு வழியில் இலாபமுழைக்கும் தந்திரம் தெரிந்தவன். தனது ஈனச் செயலுக்காக சிறிதும் வருந்தா தவன்.

முன்னரும் வீட்டில் திரேசா இல்லாத வேளை பார்த்து ஒருநாள் தனது நோக்கத்துக்காக யோசுவாவை அணுகி யுள்ளான். ஆசை வார்த்தை கூறி கையில் காசு திணிக்க முயன்றிருக்கிறான். அதற்கு உடன்படாத யோசுவா தனது எதிர்ப்பைக் காட்டியிருக்கிறான்.

இச்சம்பவம் நடந்த அன்றே தாயிடம் இதனைக் கூறியிருக்கிறான். அவனது செயலுக்காக திரேசா பெருமிதப்பட்டு அவனை பாராட்டியிருக்கிறாள்,

ஆனால்... இன்று... எப்படி...?

அதே அந்தோனியுடன் இணங்கிப்போய் பவ்வியமாகப் பேசிக் கொண்டிருக்கிறான். அவளுக்கு வியப்பாக இருந்தது.

அவர்கள் பேசுவதை காதுகொடுத்துக் கேட்டாள். ஏதோ விபரீதம் நடப்பதற்கான அறிகுறிகள் தெரிவதாக உணர்ந்தாள்.

அவளது உடல் நடுங்கியது. தனது முழுப் பலத்தையும் திரட்டிக் கொண்டு வெளியே நடக்க எத்தனித்தாள். அவளால் ஒரு அடி கூட முன்வைக்க முடியவில்லை.

தனது பிடி தளர்ந்து போன கையறு நிலையை தெளிவாக உணர்ந்தாள்.

அந்தோனியின் கையில் கனத்திருந்த பாக் அவளுக்கு மங்கலாகத் தெரிந்தது.

"தம்பி... சைக்கிள் தாரன். சந்தியாலை திரும்பினால் வலது பக்கமாக ஒழுங்கை வரும்... " என்று வழித்தடம் பற்றி கூறிய அந்தோனி வேலியுடன் சாத்தியிருந்த சைக்கிளை எடுத்துக் கொண்டு முன்னே செல்ல, அவனுக்குப் பின்னால் யோகவா நடந்து போய்க் கொண்டிருந்தான்.

திரேசாவுக்கு பெருங்குரலெடுத்து அழ வேண்டும் போலிருந்தது.

வார்த்தைகள் கூடி வரவில்லை.

# காலம் மாறியதால்...

எஸ்.யாதவன்

போகம் மாறி
பொலி விழுந்த பனையோலை
காலம் மாறியதால்
கவனிப்பார் இன்றி
காவோலையாகி
கழன்று விழுகின்றது.

கிட்டி புள்ளும்
கிளித்தட்டும்
கெந்தி விளையாடியதும்
விட்டு விலகி
வெகுகாலம் ஆச்சு
விளங்காமல் போச்சு

சித்திரை வருமுன்பே
சிறுதேங்காய் தேடி
தும்பு நீக்கி
துடைத்து பத்திரமாய்
எண்ணெய் தடவி
எடுப்பாய் மினுங்க
கைத்தேங்காயாக்கி
போர்த் தேங்காயடித்து
பூர்த்த நிலையிங்கு
பதியவர்க்கு தெரியாது.

வேலிப் பொட்டுக்கால்
புகுந்து சென்று
பக்கத்து வீட்டு
பாலருடன் விளையாடியதும்

பத்து நெருப்பக்குச்சி
பால்ப்பேணி அரிசி
ஒரு மூடித் தூள்
ஒரு சிறங்கை உப்பு
கடனாய்ப் பெற்று
கண்ணியமாய் கொடுத்து
வாழ்வின் உறவை
வளமாகப் பேணியதும்
வழக்கிழந்து போன
வழிகூடத் தெரியாது.

போகம் மாறி
பொலிவிழுந்த
பனையோலை
காலம் மாறியதால்
கவனிப்பார் இன்றி
காவோலையாகி
கழன்று விழுகின்றது

நூல்விமர்சனம்

# நனவெரிந்த சாம்பலினின்று எழும் கவிதைகள்




சி.சிவசேகரம்

*நனவெரிந்த சாம்பலில் (கவிதைகள்). லோகன் செல்லம் (எம்.சி. லோகநாதன்)*

*மித்ர வெளியீடு, சென்னை 94, ப. 144, ஜனவரி 2012.*

*(விலை குறிப்பிடப்படவில்லை. நூலைப் பெற விரும்புவோர்க்கான தொடர்பு முகவரி: logan.chellam@gmail.com <mailto:logan.chellam@gmail.com>)*

இக் கவிதைகள் எம்.சி. லோகநாதன் எனப் பரவலாக அறியப்படும் லோகன் செல்லம் அவர்களால் புலம்பெயர்ந்த சூழலில் *1980*களின் ஈற்றுப் பகுதி தொட்டு எழுதி வந்துள்ள கவிதைகளைக் கொண்டது. லோகன் செல்லத்தின் கவிதை ஆக்கங்கள் அனைத்தும் இத் தொகுதியில் அடங்கா எனினும் அவர் தனது கவிதைகளினூடாக வெளிப்படுத்த விரும்பும் சிந்தனைகள் மிகத் தெளிவாகவே இத் தெரிவினூடு நம்மை யடைகின்றன என நம்புகிறேன்.

புலம்பெயர் சூழலில் இன்னமும் 'கலை கலைக்காகவே' என்று பேசுகிற ஒரு சிறு கூட்டம் உள்ளது. இலங்கையில் ஒரு காலத்தில் இருந்துவந்த அவ்வாறான கூட்டத்தினரைப் போல, அவர்களும் கலையைச் சமூகத்திலிருந்து பிரித்து நோக்குவதற்குள்ளும் ஒரு அரசியல் இருந்தது. அந்த அரசியலின் முக்கியமான பரிமாணம் இடதுசாரி எதிர்ப்பாகும். எவ்வாறாயினும், தேசிய இனப் பிரச்சனை கூர்மையுற்ற போது அரசியற் கலப்பற்ற கலை என்பது இலங்கையில் பொருளற்றுப் போயிற்று. குறுகிய தேசியவாதம் அவர்களது "தூய கலைக்' கோட்பாட்டை மேவியது. எனினும், அரசியலைத் தவிர்த்து எழுதுவதாக எண்ணும் ஒரு விதமான போக்கு எப்போதும் போல இருந்து வருகிறது.

தமது தனிப்பட்ட மன உணர்வுகட்கு முக்கியத்துவம் ஈந்து எழுதுவோர் போல வெறும் புகழுக்காகவும் பத்திரிகைகளில் தமது பேரைப் பார்க்கும் மன நிறைவுக்காகவும் விளம்பரத்திற்காகவும், இயலுமான போது, வணிக நோக்கிலும் எழுதுவோர் உள்ளனர். அவர்களில் எல்லோராலும் அரசியலைத் தவிர்க்க இயலாது போயினும், அவர்கள் சமூகத் தையோ அதை வழிநடத்தும் அரசியலையோ (அதினும் முக்கியமாகச் சமூகத்தை மாற்றி யமைக்க விழையும் அரசியலையோ) ஊன்றிக் கவனித்தோரல்லர். காதிற் படுவனவற்றையும் அரட்டைகளையும் "இலக்கியமாக்கும்' பழக்கத்தை நாம் இவ்வாறான பலரது படைப்புகளில் காண்கிறோம்.

புலம்பெயர் சூழல் மனிதரைப் பதிய நெருக்கடிக்குள் தள்ளியது. புலம் பெயர்ந் தோர் பலரும் ஒருவகையான நெருக் கடியினின்று தப்புவதற்கு நாட்டைவிட்டு நீங்கியோராகவே இருப்பினும், அதன் காரண காரியங்களைப் பற்றி ஆழச் சிந்திக்கா தோராகவே இருந்து வந்துள்ளனர். விலகி

வந்தபோதும், பிறந்த மண்ணும் அங்கு இன்னும் இன்றும் அல்லல்களுள் வாழும் உறவுகளும், நண்பர்களும் பொதுப்படத் தமிழ்ச் சமூகமும் பற்றிய கவலைகளும் ஏதையாவது செய்ய வேண்டும் என்ற மன அரிப்பும் பெரும்பாலோரிடம் இருந்து வந்துள்ளது. இவற்றின் நடுவே, பண்பாட்டின் பேராற் பழமை பேணுகிற சில போக்குகளும் முளைவிட்டிருக்கின்றன. அவை பொருளற்றதும் போலியானதுமான ஒரு இன அடையாளமாக இன்னமும் புலம்பெயர் சூழலிற் தொடருகின்றன. இச் சூழல் நல்ல இலக்கியத்திற்கு உடன்பாடற்றது. பழைய வாய்ப்பாடுகளை ஒப்பித்துப் புதிய சிந்தனைகளை மறுப்பதுடன் அவற்றின் இலக்கியப் பயன்பாடு முடிந்து விடுகிறது.

இவ்வாறான சிந்தனை நலிவுக்கு வெளியே தமது சூழலும் இருப்பும் அடையாளமும் பற்றிய காத்திரமான கேள்விகளை எழுப்பும் ஒரு சிறுபான்மை உள்ளது. அது, தமிழின் தொன்மையும் மேன்மையும் பற்றிய புனைவுகளிலோ தமிழர் உலகாண்ட கதைகளிலோ எதிர்காலம் பற்றிய கதைகளிலோ தன்னை ஆழ்த்திக் கொள்ள மறுக்கிறது. புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் இருப்பின் அர்த்தம் பற்றிய கேள்விகட்கு அது தொடர்ந்தும் விடைகளைத் தேடிக் கொண்டிருக்கின்றது. அதன் பிரதிநிதிகளில் ஒருவராக லோகன் செல்லத்தை அவருடைய 'நனவெரிந்த சாம்பலில்' எடுத்துக் காட்டுகிறது.

புலப்பெயர்வு கடந்த காலத்தை மறக்கச் செய்வதில்லை. எனினும் கடந்த காலத்தை விகாரப்படுத்திக் காட்டும் ஆற்றல் புலப்பெயர்வுக்கு உண்டு. அது கடந்த காலத்தைப் பற்றிய கற்பனை மிகுந்த ஏக்கமாகப் பலரிடம் வெளிப்படுகிறது. அத்தகைய பார்வையிலிருந்து விடுபடுவதற்கு மிகுந்த நிதானம் தேவை. இழப்புகளும் ஏமாற்றங்களும் விரக்தியாகிப் பிறர் மீதும் தொற்றும் அபாயத்தையும் புலப்பெயர்வு தன்னுட் கொண்டுள்ளது. இவற்றின் நடுவே நிதானம் தவறாது நடப்பது எளிதல்ல. அவ்வாறு நடக்க இயலாதபோது, தமது ஏமாற்றங்கட்குப் பிறர்மீது குற்றஞ் சுமத்துவதுடன் தம்மைக் குற்ற மற்றோராகக் காட்டித், தம்மிடமிருந்தே தம்மைத் தப்பவைக்கும் விதமான சொற்கள் வெளிப்படுவதைக் காணலாம்.

லோகன் செல்லத்தின் கவிதைகள் ஒருபுறம் அவர் கடந்து வந்த பாதை பற்றிய நிதானமான விசாரணைகள், இன்னொரு புறம் தன்னைச் சூழ நிகழ்ந்தனவும் நிகழ்வனவும் பற்றிய கடும் விமர்சனங்கள். தவிர்க்கவியலாது, அவை பலரை நோக்கி விரலைச் சுட்டுகின்றன எனினும், வலிந்து தாக்குகிற தன்மை அவரிடம் இல்லை எனலாம். சில இடங்களில் அவர் எதை மனதில் வைத்துப் பேசுகிறார் என்பதை ஊகிப்பது எளிதல்ல. அவர் இலங்கையில் வாழ்ந்த காலத்து இயக்க அரசியல் நிகழ்வுகளை ஓரளவேனும் அறிந்திருந்தால், அது இயலும். 'ஆமைக் கோது மனிதன்' என்ற கவிதைக்குத் தரப்பட்டுள்ளது போல, மேலும் சிலவற்றிற்கேனும் அவை எக்கால இடச் சூழலுக்குரியன என்பதைப் பற்றிய குறிப்புக்கள் அவற்றை முழுமையாக விளங்கிக் கொள்ள உதவும். அல்லாது போனால், பின்னவீனத்துவக் குழப்பத்தின் உதவி யில்லாமலே, அவற்றை வக்கிரமாகப் பொருள் கொள்ள வாய்ப்பு அதிகம்.

சில இடங்களில் அச்சுப் பிழைகள் வாசிப்புக்கு மிக இடையூறாக உள்ளன. வாக்கிய முடிவுகளிலும் முதலிலும் தரிப்புக் குறிகளின் மிகையான பிரயோகம் தவிர்த்தற்குரியது என நினைக்கின்றேன்.

"ஆபத்தானதும்..!

அறிவார்த்தமானதும்..!!

வரலாற்றைக் கொண்டதுமான..!!! (பக்.104) போன்றவற்றில் மேலதிக புள்ளிகளும் வியப்புக் குறிகளும் சொற்களின் தாக்கத்தைப் பலவீனப் படுத்துவதாகவே தெரிகிறது. கவிதைத் தலைப்புகளின் எழுத்துரு சில எழுத்துக் குழப்பங்களுக்குக் காரணமாகிறது. (உதாரணமாகத்,'த' 'கு' போல தெரிகிறது).

வாக்கியங்களிற் சொல் வரிசையை வழமைக்கு முரணாக வைப்பது கவிதைகளில் நிகழ்வது. மரபில் அதற்கு ஓசை நயம் தொடர்பான காரணங்களே அதிகம். இங்கு அவை சில சொற்களின் மீதான அழுத்தத்தைக் கூட்டும் நோக்கிற் செய்யப் பட்டதாக நினைக்கிறேன். எனினும் அது எப்போதுமே கவிதைக்கு வலுவூட்டுவதில்லை. குறிப்பாக ஒரு உதாரணம் எனது கருத்தை விளக்கப் போதுமென நினைக்கிறேன்.

'இவை புரியா

சமூக வாழ்வு எங்களதில்

அத்தனையும்

அறிவூடு காண்பதற்குள்'

"இவை புரியா எங்களது சமூக வாழ்வதனில்

அத்தனையும் அறிவூடு காண்பதற்கு"

என எழுதின் அது ஓசை நயத்திற்குக் கேடின்றிச் சற்றுக் கூடிய தெளிவாய் அமைந்திருக்கும்.

மேற்கூறியவாறான குறைகள் கவிதைகளில் சொற் செழுமையையும் ஓசை நயத்தையும் அதிலும் முக்கியமாக அவற்றின் பொருட் செறிவையும் வீச்சையும் அதிகம் ஊறு செய்யவில்லை. பொதுவாகவே, எக் கவிதையும் மீள மீள வாசிக்கும் படைப்பாளியைச் செப்பனிடத் தூண்டுவன தாம். எனினும் எவ்வாறோ ஊடுருவிவிடும் அச்சுப் பிழைகள் படைப்பாளியை வென்றுவிடுகின்றன. குறிப்பாகக், கணினி யுகத்தின் எழுத்துப் பிழைகள் தொற்று வியாதி போன்றவை என்பதால், நூலைக் கவனமாகப் படி பார்ப்பது மிக அவசியமென நினைக்கின்றேன்.

இனி லோகன் செல்லத்தின் கவிதை உலகிற்குட் சிறிது எட்டிப் பார்ப்போமாயின், அவரது உலக நோக்கின் ஆதாரமாக இருப்பன, சமத்துவமும் சமூக நீதியும் என்பதைப் பொதுவாகவே காணலாம். குறிப்பான நிகழ்வுகள் பற்றிய அவருடைய சொற்களை அவை கூறும் கால இட எல்லைகளைத் தாண்டிச் செல்ல அனுமதிப்பது அவரது உலக நோக்கு என்றே கூற வேண்டும்.

'உன் மரணமும்
என் மரணமும்
உன் மதமும்
என் மதமும் - ஒரு
மனதாய் மரணம் தாண்டி...

கற்பனை மாண்டு
கருத்தில் பேதமாய்

செயலில் கோரமாய்...
முடிவற்ற யுத்தமாய்...
நித்திய மரணமாய்...!..
ஆனது எப்படி..? (பக். 88 - 89)

"கரைந்து போன வீடெனதை..!!
எத்தனையோ கோட்டை
கொத்தளங்களைத் தின்று செமித்த
கடலலையுள் தேடுகிறேன்

இதனிடை எனது அறிவுரையொன்று
"அலைமோதும் கரையோரம்
எவரும் கட்டாதீர் மண் வீடு" (பக். 58 - 59)

கவிஞர் எந்த மண் வீட்டை நினைத்து எழுதியிருந்தாலும் இன்னமும் மண் வீடுகள் கட்டப்படுகின்றன, மண் குதிரைகளில் ஏறி ஆறுகளைக் கடக்க முயல்வோர் உள்ளனர்.

இத் தொகுதி சமூகப் பிரச்சனைகள் பலவற்றையும் பல கோணங்களிலிருந்து கண்டு நம் கண்முன் வைக்கிறது. இதிலே குறிப்பான அமைப்புச் சார்பான நோக்கோ எதற்கும் இலக்கு வைத்துத் தாக்கும் போக்கோ இல்லாவிடினும் லோகன் செல்லத்தின் சமூக நீதி சார்ந்த சமத்துவ நிலைப்பாடும் சக மனிதரின் ஈன நிலை கண்டு வாடும் மனமும் தெட்டத் தெளிவாகவே வெளிப்படுவது பற்றி ஐயமில்லை.


நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ள இந் நூலுள் இடையிடையே சேர்க்கப்பட்டுள்ள ஓவியர் சௌந்தரின் படங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன.

## படைப்பாளர்களுக்கும் தாயகம் வாசகர்களுக்கும்

தாயகம் இதழ் தொடர்ச்சியான வருகைக்கு படைப்பாளிகளினதும் வாசகர்களினதும் பங்களிப்பினை கோரிநிற்கின்றோம், கிராமங்கள் தோறும் தாயகம் வாசகர் வட்டம் ஏற்படுத்தி குறைந்த பட்சம் பத்துப் பேரையாவது இணைத்துக் கொண்டு தாயகம் இதழை அவர்கள் மத்தியில் விநியோகிக்கும் பொறுப்பையும் ஒவ்வொரு இதழின் வருகையையும் உறுதிப்படுத்தும் வகையில் ரூபா 1000 பங்களிப்பு நல்கும் அத்தகைய படைப்பாளிகள், இலக்கிய ஆர்வலர்களை எமது தாயகம் இதழின் பயணத்தில் இணைந்துகொள்ள வேண்டுகின்றோம்

ஆசிரியர் குழு

# மின்னூல் மேற் பாடல்



மு.மயூரன்

*1*

புலன்வழி அறிந்த தகவலையெல்லாம் பொதிந்து காப்பது எவ்வாறு?
பொதிந்ததை அறிந்திட விரும்பிடுவோரிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதெவ்வாறு?
அறிந்ததை மனதினில் பகுத்திட வெளிவரும் கருத்தினைப் பதிவது எவ்வாறு?
பதிந்ததை மறுபடி மனிதர்கள் பிறருடன் பகிர்ந்து கொள்வது எவ்வாறு?

*2*

முன்னொரு நாளில் முன்னொரு நாளில் காற்றின் அலையில் கதைமொழிந்தோம்
கதையும் முடியும் காற்றலை மறையும் நினைவும் அழியும் குறை உணர்ந்தோம்
பின்னொரு நாளில் பின்னொரு நாளில் மொழியை வரையும் முறை அறிந்தோம்
கல்லினில் என்பில் களிமண் தட்டில் செம்பினில் எல்லாம் மொழிபதிந்தோம்

இன்னொரு நாளில் இன்னொரு நாளில் ஏட்டில் எழுதும் கலை அறிந்தோம்
ஏட்டிலெழுத்தாய் மொழியின் புதையல் முழுதும் முழுதும் சேர்த்துவைத்தோம்
அன்றொரு நாளில் அன்றொரு நாளில் கடதாசித்தாள் கண்டறிந்தோம்
அச்சுக்கலையை அறிந்த பிறகு உச்சம் தொட்டே மொழி பகிர்ந்தோம்

கல்லினெழுத்தோ கனதூரங்கள் கடக்க முடியாத் தொல்பொருளாய்...
காய்ந்த ஓலை காத்த எழுத்தோ கறையான் வயிற்றிற் சத்துணவாய்...
கல்வியும் அறிவும் தகவற்பசியும் கடுகதி கொள்ளும் காலத்தில்
காகித நூலும் காலத்தேவை கடந்துபோகும் ஒரு பொருளாய்...

*3*

வரலா றெங்கும் ஒரு தீப்பந்தம் அறிவினையெரிக்க அலைகிறது
வகைவகையான கொலைக் கருவிகளோ டறிவினை அழிக்க விரைகிறது
இரவோடிரவாய் நூல்நிலையங்களை எரிக்க அது ஏன் நினைக்கிறது?
அறிவும் நூலும் என்றும் எங்கும் அரசியலாய்த்தான் இருக்கிறது

ஒருசில தகவலை மட்டும் உலகில் பரப்ப நினைக்குது அதிகாரம்
உவப்பாய் இல்லா நூல்களையெல்லாம் அழிக்க நினைக்குது அதிகாரம்
ஒருசில மனிதக்கூட்டத்தினரைப் பிடுங்க விரும்புது இனவாதம்
வேர்களில் நூல்க ளிருக்கக் கண்டதும் வெட்ட நினைக்குது அநியாயம்

நாங்கள் வேதம் கேட்டால் செவிடாய் ஆக்கிய பார்ப்பன மனம் இதுதான்
நடுவில் சமணப் பவுத்த நூல்களை எரித்த சிவநெறி மனம் இதுதான்
ஓங்கிய தமிழின் ஏட்டினை எல்லாம் வேள்வியில் எரித்த மனம் இதுதான்
ஒவ்வொரு நூலாய்ச் சடங்கு வைத்து ஒழித்த ஆரிய மனம் இதுதான்

நாளந்தா நூல் நிலையமெரித்த துருக்கிப் படையின் கதை இதுதான்
ஐரோப்பாவின் நூல்நிலையங்கள் மதம்கொண் டெரிந்த கதை இதுதான்
"போல் ஈ கொமிறி" நூலகமதனைத் தலிபான் அழித்த கதை இதுதான்
யாழ் நூலகத்தைப் பேரினவாதம் குதறிய கதையும் இதுவேதான்

4

அழிவையும் அடக்கு முறையையும் எதிர்த்து எழுவது உயிரின் விதியாகும்
இயன்ற வரையில் முயன்று எம்மைத் தக்கவைப்பதே பரிணாமம்
இழிவையும் எங்கள் நலிவையும் நீக்கி எழுவது காலக் கட்டாயம்
எழுகிற வேட்கையில் எழுந்ததுவேநம் தமிழ்நூல்களின் மின் வடிவாக்கம்

மின்னூலென்பது தகவல் யுகத்து நுட்பியல் சார்ந்த புதுவரவு
மின்னணுக்கால விஞ்ஞானத்தின் நன்மைகள் நிறைந்த புது நிகழ்வு
மின்னூலென்பது தமிழர் மட்டில் இருளிற் கண்ட புதுக் கதவு
மென்பொருள் நுட்பியல் கடந்து இதுநம் அரசியல் வேலையினொரு விரிவு

தீயும் குண்டும் நீரும் கறையும் தீண்டா மின்வெளி தேடி வந்தோம்
காவல் காசுகள் இல்லாதவராய் ஆவணங்களைப் பேண வந்தோம்
நீயும் நானும் இறந்த பிறகும் நம் வேர் அறிவைக் காக்க வந்தோம்
நம் கை கிடைத்த சாத்தியமெல்லாம் நம்வசமாக்கிட உறுதி கொண்டோம்

5

விரல்நுனி அளவே நினைவகமதனுள் நூறாயிரமாய்த் தமிழ்நூல்கள்
வீடுகள் தோறும் வீடுகள் தோறும் வட்டிலடக்கிய நூற்பொதிகள்
விரைகிற வாழ்வின் கைக்கருவிகளில் தமிழின் சிறு சிறு நூற்குவியல்
வேண்டிய தகவல் நொடியில் தமிழில் விரல்வசமாகிற சாதனைகள்

கண்களிழந்த மனிதரும் எல்லா வாய்ப்பையுமிங்கே அடையட்டும்
காதாற் தமிழைப் படிக்குமாறே ஒலிநூற் பண்பாடமையட்டும்
மின்னூல் ஒலிநூல் தமிழ்மனிதர்களின் பண்பாட்டுக்குட் கலக்கட்டும்
மொழியும் அறிவும் தடங்கலின்றி அனைவர் கையையும் அடையட்டும்

6

மின்னூல் என்னும் நுட்பியலிங்கு முகங்கள் பலதைக் கொண்டதுதான்
மிகவும் அழகிய முகமும் பின்னால் வேறு முகங்களும் உள்ளதுதான்
இன்னாள் நுட்பியல் ஆளும் வர்க்கக் கையின் கருவியுமாகிறது
அதிலொரு பங்காய் மின்னூல் கூடக் கோர முகத்தையுமேற்கிறது

காப்புரிமை என வருகிற புதுவித நச்சு அடாத்துச் சட்டங்கள்
கண்காணிக்கும் உளவுக் கண்களை மின்னூல் காவும் நுட்பங்கள்
ஆப்பினையெடுத்து மனித குலத்தின் அறிவிலடிக்கும் பெருவணிகம்
அதற்கு அழகிய பெயர்களையிட்டே அறிமுகமாக்குது தொழிநுட்பம்

நாளிதழ் கூடப் பார்த்திட முடியா நலிந்த வாழ்வில் ஒரு கூட்டம்
நாளொரு கருவி சும்மா வாங்கிச் சுமந்து தூங்குது ஒரு கூட்டம்
வேலிகளெழுப்பி இவ்விரு உலகை வெட்டிப்பிரித்த மூலதனம்
"இருவேறுலகத் தியற்கை" நடுவில் இருக்கு அதி அதி பாதாளம்

எங்கள் நுட்பியல் இன்றைய நாளில் தெளிந்த முடிவையெடுக்கோணும்
எவர்நலனை நாம் சார்வது எனவொரு தகுந்த முடிவையெடுக்கோணும்
எங்கும் சுரண்டும்ஈனம் எதிர்த்து எளியோர் பக்கம் அணையோணும்
தமிழர் மொழியின் மின்னூலகமோ விடுதலைவழியைத் தெரியோணும்

எண்ணிமப் பிளவு, ஏழ்மை ஒழிந்து உலகின் அமைப்பு மாறட்டும்
எங்கள் மின்னூல் எல்லார்கையிலும் அறிவைக் கொணர்ந்து சேர்க்கட்டும்
இன்னொரு நுட்பம் இனியும் வந்தால் அதையும் தமிழ் மொழி ஏற்கட்டும்
என்றும் அது நம் மக்கள் நலனில் அக்கறை கொண்டே வளரட்டும்

# ஈழகேசரி பொன்னையா–ஒரு மதிப்பீடு



ஞா.சிறிமனோகரன்

## குரும்பசிட்டியின் தோற்றம்

மயிலிட்டி தெற்கு என்பதே குரும்பசிட்டி கிராமத்திற்கு வழங்கப்பட்ட பழைய பெயர். *1965-1970* காலப் பகுதியிலேயே குரும்பசிட்டி எனும் பெயர் சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

யாழ் மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரிவில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமம் குரும்பசிட்டி. சுமார் ஒன்றரை சதுர கிலோமீற்றர் பரப்புடையது. வடக்கே பலாலி விமானத் தளமும், கிழக்கே வசாவிளானும், தென்கிழக்கே புன்னாலைக் கட்டுவனும், மேற்கே கட்டுவனுமாகிய கிராமங்களை எல்லையாய் கொண்டது

## குரும்பசிட்டி.

செம் மண்ணின் செழுமையும் கிணற்று நீரும் இங்கு விவசாயக் குடியிருப்புக்கள் தோன்றக் காரணமாயின. 20ம் நூற்றாண்டின் ஆரம்பம், அதற்குப் பின்னரும் விவசாயமே முக்கிய தொழிலாக விளங்கியது. சமூக அமைப்பை நோக்கின் காணிகளினதும், விவசாய நிலங்களினதும் உடமையாளர்களாக உயர் வகுப்பினர் விளங்கினர். அவர்களது குடி மக்களாக நிலபுலமற்ற அடிப்படை வாழ்க்கை வசதிகளற்ற நாளாந்தக் கூலிகளாக சிறுபான்மை மக்கள் வாழ்ந்துள்ளனர்.

யாழ்ப்பாண அரசுக் காலத்திலிருந்து கிராம மட்டத்தில் நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள உடையார், முதலியார், மணியகாரர், விதானையார் போன்ற பதவிகள் இருந்து வந்தன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் இக் கிராமிய நிர்வாக அமைப்பை ஏற்று சுதேச மொழியில் நிர்வாகம் நடத்தினர். இந் நிர்வாகப் பரம்பல்கள் தொடர்ந்தன. 1796ல் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட போதும் உடையார், முதலியார் பரம்பரையினர் காணப்பட்டனர். சமூகத்தில் மேல்தட்டு வர்க்கத்தினராக வாழ்ந்த இவர்களது குடும்ப உறவுகள் பெரும்பாலும் ஏனைய கிராமங்களில் உள்ள தம்மை ஒத்தவர் களுடனேயே இருந்துள்ளன எனலாம். இறுக்கமான சாதியப்படி நிலை பாகுபாட்டின் வெளிப்பாடு இதுவாகும்.

1. 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிராமிய நிர்வாக கடமைகளை மேற்கொண்ட முதலியார் பரம்பரை
2. நிலபுலமுடைய உயர்சாதி விவசாயிகள்
3. விவசாயக் கூலிகளாக வேலை செய்யும் குடிமக்கள் என இனங்காணப்பட்ட சமூக அமைப்பு குரும்பசிட்டியில் காணப் பட்டது.

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட நா. பொன்னையா அவர்கள் 1930ல் ஈழகேசரி என்ற பெயரில் ஒரு தமிழ் வாரப்

பத்திரிகையை வெளியிட்டார். இவரது தாபனம் தனலக்குமி புத்தகசாலை என்றும் வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம் என்றும் பெயர் பெற்றதுடன் பல வெளியீடுகளையும் பாட நூல்களையும் வெளியிட்டது. பொன்னையா அவர்கள் உயிருடன் இருந்த காலத்திலேயே நூற்றிப் பதினொரு நூல்கள் வெளியாயின. 1930 யூன் மாதம் 22ம் திகதி ஈழகேசரியின் முதலாவது இதழ் வெளியானது.

முதற்பக்கத்தில் 'எமது பத்திரிகை' என்ற தலைப்பில் ஈழகேசரியின் வருகைக்கான காரணத்தை பொன்னையா அவர்களே பின்வருமாறு எழுதியுள்ளார் :- "நமது நாடு அடிமைப் படுகுழியிலாழ்ந்து, அந்நியர் வயப்பட்டு, அறிவிழந்து, மொழி வளங் குன்றி, சமயமிழந்து சாதிப் பேய்க் கோட்பாட்டுக் குட்பட்டுச் சன்மார்க்க நெறியிழந்து, உன்மத்தராய், மாக்களாய் உண்டுறங்கி வாழ்தலே கண்ட காட்சியெனக் கொண்டாடுமிக் காலத்தில் எத்தனை பத்திரிகைகள் தோன்றினும் மிகையாகாது".

1930ம் ஆண்டில் தமிழினால் அரசியலைச் சொல்ல முடியுமா, சிறுகதை, நாவல், கட்டுரை எழுத முடியுமா, தமிழ்ப் பத்திரிகை வாங்குபவர் யார் என்றெல்லாம் பெரியவர்கள் அஞ்சிய காலத்தில் "ஈழகேசரி" என்ற வாரப் பத்திரிகை யாருடைய துணையுமின்றித் தொடங்கி, மின்சார வசதிகளற்ற அந் நாளிலே கையாலே சுழற்றி அச்சடித்துப் பிழை ஒன்றும் இல்லாமல் இருபது வருடங்களுக்கு மேலாக பெரும் பொருள் நட்டத்துடன் நடாத்தியவர் பொன்னையா என்பது ஊன்றிக் கவனிக்கத்தக்கது.

யாழ்ப்பாணம் வாலிபர் காங்கிரசின் பிரமுகர் ஹன்டி பேரின்பநாயகம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 1940 களில் கேசரி (KESARI) எனும் ஆங்கில வார இதழை அச்சிட்டு நடாத்தினார். யோகர்சுவாமி இடைக்கிடையே பத்துச் சதம் கொடுத்து அதை வாங்கிப் படித்ததாக ஹன்டி பேரின்பநாயகம் ஈழம் தந்த கேசரி என்ற தலைப்பில் பொன்னையா நினைவான கனக செந்திநாதனின் நூலிற்கு எழுதிய அணிந்துரையில் குறிப்பிட்டிருந்தார்.

1930களில் இளைஞர் காங்கிரசின் நடவடிக்கைகளையும், கொள்கைகளையும் பெரிய அளவில் பிரசாரம் செய்வதில் "ஈழகேசரி" பத்திரிகை பெரும்பணியாற்றியது.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் சட்டசபையில் பத்து மணித்தியாலத்திற்கு மேல் உரை நிகழ்த்தினார். பின் இவ் உரை ஒரு புத்தகமாய் வெளிவந்தது. இவ் உரையை அலசி ஆராய்ந்து அதில் உள்ள குறைபாடுகளையும், குதர்க்கங்களையும் பொதுமக்களுக்கு விளக்க வேண்டும் என்று வாலிபர் காங்கிரஸ் முடிவு செய்தது. பொன் னம்பலத்திற்கு மறுமொழியாகவும், மறுப் பாகவும் அழகான ஒரு பிரசுரமாய் இந்த நூல் ஆங்கிலத்தில் வெளிவந்தது. அதன் பெயர் "வகுப்பு வாதமா தேசிய வாதமா — COMMUNALISM OR NATIONALISM". திருமகள் அழுத்தகம் வெளியிட்ட முதல் ஆங்கில நூல் இதுவென ஹன்டி பேரின்பநாயகம் குறிப்பிட்டிருந்தார்.

திருமகள் அழுத்தகம் முதன்முதலாய்க் கையேற்ற தமிழ் வெளியீடும் வாலிபர் மகாநாட்டுடனும் ஹன்டி பேரின்பநாயகத் துடனும் தொடர்புடையது. காங்கேசன் துறையில் ஆண்டு விழா நடத்துவதற்கு திட்டமிடப்பட்டது. இம் மகாநாட்டுப் பந்தலில் சமபோசனம் நடாத்தவும் தீர்மானிக் கப்பட்டிருந்தது. வரவேற்புரையை மகாநாடு தொடங்குவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே பேரின்பநாயகம் எழுதி முடித்தார். அதை குறுகிய நேரத்தில் அச்சிட ஒருவரும் முன்வராததால் பொன்னையா அவர்களிடமே அந்த வேலை ஒப்படைக்கப்பட்டது. இராப் பகலாய் வேலை செய்து பொன்னையா அவர்களும் அச்சுக் கோப்பில் உதவிபுரிந்து உரிய நேரத்திற்கு வரவேற்புரையை அச்சடித்துக் கொடுத்தார். இங்கு கவனிக்க வேண்டியது இரண்டொரு நாட்களுக்கு முன்தான் அவர் அச்சியந்திரத்தை வாங்கியிருந்தார். நாளுக்கு வேலை செய்யவில்லை. எதுவித தயக்க முமின்றி வேலையைப் பொறுப்பெடுத்துக் கொண்டார் என்பது பொன்னையா அவர்களின் தன்னம்பிக்கையையும் துணிவையும் வெளிக் காட்டுகிறது.

## பாரதி பாடல்கள் அறிமுகம்

தமிழர்கள் மத்தியில் புதிய சமூக பண்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்த முனைந்ததில் பாரதிபாடல்கள் பெரும் பங்கை அளித்தன. அத்தகைய பாடல்களை ஈழகேசரி பென்னையா இங்கு வெளியிட்டு மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தினார். இதுபற்றி 'ஹண்டி பேரின்பநாயகம் நினைவுத் தொகுதியில்' விரிவுரையாளர் சாந்தசீலன் கதிர்காமர் " ஒரு சமயத்தில் பாரதியரின் பாடல்கள் இந்தியாவிலேயே அதிகம் பிரபலமடையாத நிலையில் இலங்கையில் அதைவிட குறைவான அளவிலேயே மக்கள் மத்தியில் காணப்பட்டது. 1930ல் ஈழகேசரி

பொன்னையா பாரதியரின் முழுமையான படைப்பையும் இலங்கைவாழ் தமிழ் மக்க ளுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

*1940*களில் "கேசரி" என்ற ஆங்கில வார இதழ் வெளிவந்த போது மீண்டும் ஈழகேசரி பொன்னையாவே முன்வந்து ஹன்டி பேரின்பநாயகத்துக்காகவும் அந்த வெளியீட் டோடு சம்பந்தப்பட்ட இளைஞர் காங்கிசுக் காகவும் அதைத் திருமகள் அழுத்தத்தின் மூலமாக வெளியிட நடவடிக்கை எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பல சந்தர்ப்பங்களில் இவற்றை அச்சிடுவதற்கான செலவுத் தொகையை அவரே பொறுப்பேற்கும் நிலையும் ஏற்பட்டது. சிலகாலம் பொன்னையா அவர்கள் வாலிபர் கங்கிரசின் பொருளா ளராகவும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பொன்னையா அவர்களின் இதுபோன்ற முற்போக்கான வெளியீட்டு நடவடிக்கைகள் யாழ்ப்பாண காங்கிரசின் நடவடிக்கைகளுக்குப் பலம் சேர்த்தன என்றால் மிகையகாது.

## தீண்டாமைக்கு எதிராக ஈழகேசரி

வாலிப காங்கிரசின் ஆரம்ப காலம் தொடக்கம் சம ஆசனம், சம போசனம் முதலியவற்றை ஆதரித்துக் கிளர்ச்சி செய் தவர்களில் முக்கியமானவர் பொன்னையா அவர்கள். பொன்னையா அவர்களின் வீட் டிலுஞ் சரி, பொது வாழ்க்கையிலுஞ் சரி தாழ்த்தப்பட்டோர்- உயர்சாதி மக்கள் என்று பேதம் பாராட்டியது கிடையாது.

*1930*ம் ஆண்டளவில் சம ஆசனம், சம போசனம், தாழ்த்தப்பட்டோர் உரிமை என்று ஒருவர் பேச முற்பட்டால் கல்லெறி கிடைக் கும். பலாத்காரம் என்பது எப்போதும் ஆளும் வர்க்கத்தினாலேயே கட்டவிழ்த்து விடப் படுகிறது. அந்தப் பலாத்காரத்திற்கு எதிராக மக்கள் போராட முற்பட்டால் அது சட்டம், ஒழுங்குப் பிரச்சினையாகச் சித்தரிக்கப் படுகின்றது.

நல்லூர் கந்தசுவாமி கோவில், வண்ணார் பண்ணை சிவன்கோயில் முதலிய பிரபல ஆலயங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்து விடப்பட்டபோது அப்போதைய செனெற்ற ராயிருந்த பொ. நாகலிங்கம் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பாடுபட்டவர்களை வரிசை செய்து எழுதிய கட்டுரை ஒன்றில் பொன்னையா அவர்களின் பணியை நன்றாக எடுத்துக் காட்டியிருந்தார். நாகலிங்கமும் பொன்னை யாவும் இளைஞர் காங்கிரசின் முன்னணி உறுப்பினர்கள் என்பது கவனிக் கத்தக்கது.

பொன்னையா இளமை மிடுக்கோடு *1934*ல் சன்மார்க்க சபையின் தலைவராக இருந்து சீர்திருத்தச் சிந்தனையோடு சமூகப் பணிகளை முன்னெடுத்தபோது சமூகத்தின் இளம் தலைமுறையினரால் பெரிதும் கவரப்பட்டார். தனது சீர்திருத்தக் கருத்துக்களை கிராமத்தில் முன்னெடுத்தபோது அன்று நிலவிய பழமை வாதக் கருத்துக்களையும் அதனை பிரதி நித்துவப்படுத்தியவர்களையும் எதிர்த்து நிற்க வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. பொன் பரமானந்தன் *1900*ல் மயிலிட்டி தெற்கு சைவத் தமிழ்க் கலவன் பாடசாலையை நிறுவி தனது இருபது வயதிலிருந்து *39* ஆண்டுகள் அதிபராக இருந்தவர். தனது அளப்பரிய கல்விச் சேவையை அவர் முன்னெடுத்திருந்த போதும் அக்காலச் சூழலில் வாழ்ந்த பலரைப்போலவே வர்ணாசிரம தர்மத்தை இறுக்கமாக கடைப் பிடித்தார். தனது *3 9* வருட காலத்தில் சிறு பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகள் ஒருவரையும் பாடசாலையிற் சேரவிடாது பார்த்துக்கொண்டார். கிராமசபைத் தேர்தலில் பரமானந்தம் அவர்கள எதிர்த்துப் பொன் னையா அவர்கள் போட்டியிட்டமைக்கு இதுபோன்ற நடவடிக்கைகளும் காரணமாய் அமைந்தன. பொன்னையா அவர்கள் *1936*ம் ஆண்டு முதல் கிரமசபை அங்கத்தவராய் கடமையாற்றி *1946* தொடக்கம் *1951* மார்ச் *30*ம் திகதி இறக்கும் வரை அதன் தலைவராகவும் செயற்பட்டார்.

" பூசைகள், சடங்குகள், சாதியம் போன்றவற்றை தனது தனிப்பட்ட வாழ்வில் புறந்தள்ளினார்" எனப் பொன்னையா அவர்களிடம் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்த காலஞ்சென்ற அதிபர் ஆ. சி. நடராசா " குரும்பசிட்டி அழிவும் ஆக்கமும்" என்ற நூலில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இவர் *1956*ல் சன்மார்க்க சபையின் இளைஞர் சங்கத்தின் செயலாளராக இருந்து பின்பு குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கதின் தலைமைப் பொறுப்பை ஏற்று இறக்கும்வரை சமூகப் பணிகளை; மேறகொண்டவராவர். இவர் "பொன்னையா அவர்களைக் கோவில் வாசலில் காணமுடியாது" எனவும் கருத்து வெளியிட்டிருந்தார்.

பொன்னையா அவர்கள் மயிலிட்டி கிராம சங்கத் தலைவராய் இருந்தபோது தனது அதிகாரத்திற்கு உட்பட்ட செயல்களிலே வேலை செய்தார். ஒடுக்கப்பட்ட மக்கள் குடிதண்ணீர் அள்ள முடியாதுபடும் அவஸ்

தையை நீக்குமுகமாக அவ்வப் பகுதிகளில் வசித்த நன்மனசு படைத்தோரின் உதவியை நாடி காணிகளை நன்கொடையாக கிராமச் சங்கத்திற்கு எழுதுவித்துப் பொதுக்கிணறு களைத் தோற்றுவித்தார்.

மயிலிட்டி பகுதி யாழ்ப்பாணத்தில் ஆழமுடைய கிணறுகளைக் கொண்ட பகுதி. அன்று ஒரு கிணறு தோண்ட 2500 ரூபா செலவாகும். ஏழைகளால் இப் பெருந் தொகையை ஏற்பாடு செய்ய முடியாது. கிராமச் சங்கமூலம் அதைச் செய்து முடித்து தாழ்த்தப்பட்ட மக்களின் அன்புக்கும் நட்புக்கும் பாத்திரமானார்.

மயிலிட்டி கிராம சபையில் 1935ம் ஆண்டு முதல் பத்து வருடங்கள் அங்கத்துவராயும் ஆறு வருடங்கள் தலைவராயும் இருந்துள்ளார். இக் காலப் பகுதியில் அவர் சாதாரண உழைக்கும் மக்களின், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களின் பொது விடயங்களில் அக்கறை காட்டி யிருந்தார்.

ஹன்டி பேரின்பநாயகம் "பொன் னையாவின் பணி" பற்றி பின்வருமாறு கூறுகிறார்:- "25 ஆண்டுகளுக்கு முன்னர் (1930களில்) தீண்டாமையகற்றல், சிங்கள வருக்கும் தமிழருக்கும் ஒற்றுமையை வளர்த்தல் என்று பிரச்சாரம் செய்பவர்களுக்கு கிடைத்த வெகுமதி கல்லெறியும் வசை மொழிகளுமே. அக் காலத்தில் எவ்வித பயனும் கருதாது தனது உன்னத இலட்சியத்தின் மாண்பினையே பெரிதென மதித்து திரு.பொன் னையா எவர்க்கும் அஞ்சாது பணியாற்றி வந்தார். தமது பொருளை, அருமையான நேரத்தை, தமது ஆர்வத்தை இவற்றிற்காக அர்ப்பணஞ் செய்தார்."

பொன்னையா அவர்கள் மயிலிட்டி கிராம சபை அங்கத்தவராய் இருந்தபோதே தன் வட்டாரத்திற்கு ஒரு நல்ல ஒழுங்கையை ஒரு மைல் நீளத்திற்கு அமைத்து அதை யாழ்ப்பாணம் - பலாலிப் பிரதான வீதியில் சந்திக்கச் செய்து போக்குவரத்திற்கு ஏற்ற பாதையாக்கினார்.

மேற்படி பிரதான வீதியும் ஒழுங்கையும் சந்திக்கும் இடத்தில் இருந்த 250 பரப்பு கட்டாந்தரையை வாங்கத் திட்டமிட்டார். 1941ல் காணிகளை வாங்கத் தொடங்கினார். சிறு சிறு துண்டாக பலரிடம் வாங்கினார்.

250 பரப்புக் காணியில் அரைவாசிக்கு மேற்பட்ட பாகம் வெறுங் கல்லுத் தரை. கல்லை அகற்றி மண் நிரப்பிக் கிணறும் வெட்டினார். விவசாயம் செய்தார்.

## பொன்னையாவின் கல்விப் பணி

அக் காலத்தில் இலவசக் கல்வித் திட்டம் கொண்டுவரப்பட்டு ஒவ்வொரு தொகுதியிலும் அரசாங்கம் மத்திய மகா வித்தியாலயங்களை நிறுவத் தொடங்கியது.

பலர் பொன்னையா அவர்களைச் சந்தித்து அவரது விவசாயப் பண்ணையில் மத்திய மகா வித்தியாலயத்தை நிறுவும்படி அரசாங்கத்தை கேட்குமாறு வேண்டிக் கொண்டனர். தான் தலைவராயிருந்த சன்மார்க்க சபையைக் கூட்டி ஆலோசனை செய்தார். அயற் கிராமங்களுடன் சேர்ந்து கல்வி மந்திரியைப் பேட்டி கண்டு விடயத்தை விளக்கினார். தனது பண்ணையில் கல்லூரி நிறுவினால் பத்தாயிரம் ரூபா நன்கொடை அளிப்பதாகவும் வாக்குறுதி அளித்தார்.

அப்போதைய கல்வி மந்திரி பொன்னையா வாக்குறுதியளித்த பத்தாயிரம் ரூபாவிற்கு தற்காலிக கட்டடங்களை அவர் கட்டி உதவினால் அங்கேயே கல்லூரியை அமைப் பதாக உறுதியளித்தார். பொன்னையா அவர்கள் ஒரு மாத காலத்திற்குள் கட்டடங்களை அமைத்துக் கொடுத்தார். வேண்டிய தளபாடங் களையும் வழங்கி உதவினார். 1946ம் ஆண்டு மத்திய கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. இக் கல்லூரி வயாவிளான் அரசினர் மத்திய மகா வித்தியாலயம் என்று உத்தியோக ரீதியாக அழைக்கப்பட்டாலும் பொது மக்கள் அக் கல்லூரியை "பொன்னையா பள்ளிக்கூடம்" என்றே அழைத்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

யுத்த காலத்தில் ஒரு சிலரால் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் அழிக்கப்பட்டது. தற்போது அக் கல்லூரியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர் என்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

அரசியலில் அவர் தேசியவாதி. வகுப்பு வாதத்தை அவர் எப்போதும் ஆதரித்ததில்லை. பிரபல அரசியல் வாதிகள் எல்லாம் வகுப்புவாதச் சூழலிற் சிக்குண்டு இனவாதக் குரல் எழுப்பிய போதெல்லாம் தேசிய வாதிகளுக்கு உறுதுணையாய் நின்றவர் திரு. பொன்னையா.

## சன்மார்க்க சபையும் பொன்னையாவும்

1934ல் சன்மார்க்க சபை உருவாக்கப்

பட்டது. ஈழகேசரிப் பொன்னையா *15* ஆண்டுகள் அதன் தலைவராய் விளங்கினார். *1946* வரை சன்மார்க்கசபை வாடகைக் கட்ட டத்திலேயே செயற்பட்டு வந்தது. சன்மார்க்க சபைக்கு ஒரு சொந்த இடம் தேவையென்பதை உணர்ந்து அதை அமைப்பதற்கென மூன்று பரப்புக் காணியை வாங்கினார். அக் காணியில் கட்டடம் ஒன்றைக் கட்டும் பொறுப்பை தலைவரிடமே விட்டு விட்டனர் சபை உறுப்பினர்கள். அன்றைய பெறுமதியில் ரூபா *18,000* க்கு கட்டடம் அமைக்கப்பட்டது. அது *1946*ல் பூர்த்தியானது.

## ஈழகேசரியும் பொன்னையாவும்

திரு. பொன்னையா அவர்கள் எத்தனையோ வகையில் நற்பணிகளைப் புரிந்துள்ளார். அவற்றில் தலைசிறந்த பணி ஈழகேசரிப் பத்திரிகை வெளியிட்டமையாகும். இதனா லேயே அவரை எல்லோரும் ஈழகேசரிப் பொன்னையா என்று அன்புடன் அழைக் கின்றனர். அவர் ஈழகேசரி என்ற தமிழ்ப் பத்திரிகையோடு நின்றுவிடாமல் ஏழு வருட காலம் கேசரி என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் நடாத்தினார்.

தமிழர்கள் தங்கள் அபிலாசைகளை தமிழில் மாத்திரம் சொன்னால் அது முற்றாகப் பயன ளிக்காது. சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் பொதுவான ஆங்கிலத்திலேயே சொல்வதுதான் ஏற்றது என்ற நோக்குடன் கேசரியைத் தொடங்கினார். அப் பத்திரிகைக்கு ஹன்டி பேரின்பநாயகமே ஆசிரியராய் இருந்தார்.

இடதுசாரிக் கொள்கைகளில் திளைத்தவர் களான நீர்வேலி என். கே. கந்தையா, பொன்.கந்தையா, செ.துரைராஜசிங்கம் போன் றோரது கட்டுரைகளைத் தாங்கி கேசரி வெளிவந்தது.

கம்யூனிச சித்தாந்தம் பற்றியும் அது இந்த நாட்டிற்கு உகந்ததா? என்பது பற்றியும் அப் பிரமுகர்கள் உபயோகமான சர்ச்சைகளை அப்பத்திரிகையில் நடாத்தினர்.

## பொன்னையா வீதி

கட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான் ஆகிய மூன்று ஊர்களையும் ஊடறுக்கும் இரண்டரை *(2½)* மைல் ஒழுங்கையை *12* அடியிலிருந்து *24* அடியாக அகலவித்துப் போக்குவரத்து வசதியுடைய பெருந்தெருவாக்க வேண்டும் என்பது அவரது அவா. மயிலிட்டி கிராம சபை இதற்கு உதவ முடியாது. இந்த ஒழுங்கை நல்ல தெருவானால்தான் குரும்ப சிட்டிக்கு தபாற் கந்தோர், மின்சார வசதி, பஸ் சேவை முதலியவற்றைப் பெற முடியும்.


சன்மார்க்க சபை, கிராம முன்னேற்றச் சங்கம் ஊடாக பல தொண்டர்களை ஈடு படுத்தியும், பல காணிகளை இனாமாகப் பெற்று ஒழுங்கையை அகலவித்தார். தார் போட்ட தெருவாக்கும் முதற் பணியைச் செய்த வேளை பொன்னையா அவர்கள் சுகவீனமுற்றார்.

எனினும் வேலை தொடர்ந்தது. *1958*ல் வேலை பூர்த்தியானதும் நன்றிமறவா மக்கள் அவ் வீதிக்குப் பொன்னையா வீதியெனப் பெயரிட விரும்பினர். மயிலிட்டி கிராம சபை அவ் வீதிக்கு பொன்னையா வீதியெனப் பெயரிட்டது.

"ஈழகேசரி" பொன்னையா அவர்கள் அக்கால கட்டத்தில் ஆற்றிய பணி பாராட்டத்தக்கது. அவர் கொண்டிருந்த இலட்சியத்தை முழுமையாக அடைவதற்கு நாம் முயல வேண்டும். இன்றைய சூழலில் ஏறத்தாழ கடந்த ஒரு நூற்றாண்டில் பட்டறிவாக தமிழ் மக்கள் மத்தியில் புதியதோர் பாதையும் பயணமும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பொன்னையா அவர்களும் அன்றைய யாழ்ப்பாணக் காங்கிரசும் முன்னெடுத்து நின்ற முற்போக்கான தமிழ்த் தேசியத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதாகவே அந்தப் பயணம் அமைய வேண்டும்.

அத்தகைய முற்போக்குத் தமிழ்த் தேசியம் தான் இன்றைய காலத்தின் தேவையாகும். அத்தகைய சக்திகளுடன் நாட்டின் நேர்மையான இடதுசாரிகள் இணைந்து முன் செல்வதில் எவ்வித தடையும் இருக்க முடியாது.

நூல்: எப்படியெனிலும்...
கவிதைத் தொகுப்பு
நூலாசிரியர்: அழ. பகீரதன்
விலை: ரூ 150/=
வெளியீடு: தேசிய கலை இலக்கியப் பேரவை

சிறுகதை

# மேலிருந்து வந்த விதானையார்



'ஸ்ரீ'

நான் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குப் போய் இருபது வருடங்கட்கும் மேலாகிவிட்டது. போகிற தேவையும் இருக்கவில்லை, போகக் கூடிய சூழ்நிலையும் அமையவில்லை. அமைதிப் பேச்சுக் காலத்தில் போய் வந்தி ருக்கலாம். ஆனால் நடந்துவந்த கெடு பிடிகளைப் பற்றிக் கேள்விப்பட்ட போது போய்வருகிறதை நினைக்கவும் மனமாயி ருக்கவில்லை. ஆனாலும் அத்தனை நெருக்கு வாரங்களின் நடுவிலும் மனிதர்கள் ஈடு கொடுத்து வாழ்ந்தார்கள். போர் முடிந்தபிறகு இருந்த நிலைமைகளைவிட முதல் இருந்தவை பிழையில்லை என்றும் சிலர் என்னிடம் முறைப்பட்டிருக்கிறார்கள். என்ன நடந்தாலும் யார் ஆண்டாலும் நிருவாகக் கெடுபிடிகள் நிருவாகக் கெடுபிடிகள் தான். அதிகாரிகள் அதிகாரிகள் தான். பதவி மனிதர்களை மிகவும் மாற்றி விடும் என்பது என் அனுபவம். எனவே தொடக்கத்தில் "கிராமசேவகர் எனப்பட்டு வந்த கிராம அலுவலரைக் காணப்போகிறேன். கூட வர இயலுமா?" என்று குமாரவேல் கேட்டபோது கொஞ்சம் தயக்கமாகத்தான் இருந்தது.

என்றாலும் அவரை மறுப்பது கடினம். ஏனென்றால் நீண்ட காலத்திற்குப் பிறகு என்னுடைய பழைய ஊருக்குப் போயிருந்த எனக்கு ஊரை மட்டுமன்றிக் குடாநாட்டிற் பல இடங்களையும் கொண்டு போய்க் காட்ட மிக நேரம் செலவிட்ட பழைய நண்பரைத் தட்டிக்கழிப்பது சரியல்ல. அதை விடவும், கிராம அலுவலரின் வேலை முடிந்த பிறகு அவர் என்னை யாழ்ப்பாணம் நகரத்துக்குக் கூட்டிச் செல்வதாகவும் சொல்லியிருந்தார்.

"எப்போது போகப் போகிறீர்கள்?" என்று கேட்டேன்,

"உடனேயே" என்றார்.

அப்போது காலை ஏழரை கூட ஆகியிராது. நான் குறுக்குக் கேள்வி கேட்க முன்னரே, அவர் "எட்டு மணிக்கு முதலே வீட்டில போய்ப் பார்த்தால் உடனேயே அலுவல் முடிந்துவிடும். பிறகு கந்தோருக்குப் போய்விட்டாரென்றால் காத்திருக்க வேண்டியிருக்கும்" என்றார். தொடர்ந்து, "அவர் அவ்வளவு கெடுபிடி யானவரில்ல என்பதால் அவருடைய வீட்டிற்கே கொஞ்சம் முந்திப் பிந்திப் போவதில் பிரச்சனை இல்லை" என்று விளங்கப்படுத்தினார். "வீடு பதினைந்து நிமிட நடைத்தூரந்தான். சைக்கிளில் ஏற்றிக் கொண்டுபோகவா?" என்று கேட்டார். "இல்லை, நடந்தே போவோம்" என்று சொன்னேன்.

ஊர், கிராமமும் இல்லை பட்டணமும் இல்லை என்கிற மாதிரித்தான் இருந்தது. புதிதாகக் கட்டப்பட்ட கல் வீடுகள் இருந் தாலும், மாடி வீடுகள் ஒன்றும் கண்ணிற் படவில்லை. கடைகள் பல முளைத்திருந்தன. கடைகளிலே செல் தொலைபேசி விளம்பரங்கள் முகட்டிற் தொங்கின. கொக்காகோலா விளம்பரங்களும் வைக்கப்பட்டிருந்தன. நிச்சய மாக அக் கிராமம் உலகமய நிழல் விழுந்த எல்லாக் கிராமங்களையும் போல

உழைப்பிலிருந்து மெல்ல மெல்ல விலகி நுகர்வுப் பண்பாட்டுக்குள் அமிழ்ந்து கொண்டிருந்தது போல விளங்கியது. என்றாலும் வயல்களும் தோட்டங்களும் இன்னமும் இருந்தன. மனிதர்கள் அங்கு உழைத்தபடி இருந்தனர். ஆனால் வறுமையினின்று அவர்களை மீட்க அந்த உழைப்புப் போதியதாகத் தெரியவில்லை. அதே வேளை, கடன் வழங்கல், உயர்வட்டிச் சேமிப்பு, ஊக்குவிப்புக்கள் என்று வங்கிகளும் நிதி நிறுவனங்களும் கிராமங்களைக் குறி வைத்துள்ளன. தவணை முறையில் ஆடம்பரப் பொருட்களை வாங்குமாறு தூண்டி மனிதரைக் கடனாளிகளாக்கும் உபாயங்களுக்கும் பொருள் வசதி இல்லாதவர்களும் இரையாகிக் கொண்டிருந்தார்கள். மனிதர்களை உடல் உழைப்பி னின்று விலகி ஓடத் தூண்டுவது என்ன என்று யோசித்தபடி நடந்த என்னை, "என்ன மூர்த்தி கடும் யோசனையில் இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"இங்கே இளந் தரவழிகள் முந்தி மாதிரித் தோட்டம், வயல் என்று போகிறதில்லையா?" என்று கேட்டேன்.

"போகிறார்கள். ஆனால் எல்லாருமல்ல. வேர்க்காமலே காசு சம்பாதிக்கலாம் என்று பலர் நினைக்கிறார்கள். இயக்கங்களில் சேர்ந்து போனவர்கள் பலருக்குத் தங்களுடைய பழைய வாழ்க்கைக்கு மீள முடியவில்லை. அதைவிட உடல் உழைப்புக்குச் சாதி அடையாளங்களும் இருக்கிறதால் வேறு சிலர் மற்றமற்றத் தொழில்களைத் தேடுகிறார்கள்.

"என்ன தொழில் பார்த்தாலும் சாதி சாதியாகத்தானே இருக்கிறது!"

"தமிழ்ச் சனத்தைத் திருத்த இன்னும் பல ஒக்ற்றோபர் போராட்டங்கள் வேணும். ஏதோ இப்ப முன்னைவிட எல்லோருக்கும் கூடுதலான படிப்பு, வேலை வசதிகள் இருக்கிறது. முழுதுந் திருந்தக் கொஞ்சக் காலம் எடுக்கும்."

எங்கள் உரையாடல் மேலும் தொடர முன்னமே, கிராம அலுவலர் வீடு வந்துவிட்டது. குமாரவேல் முன் கேற்றின் மேற் கொழுக்கியைக் கழற்றிவிட்டு வீட்டு வாசல் வரை போனார். நான் கேற்றைச் சாத்திவிட்டுப் பின்தொடர்ந்தேன்.

"விதானையார் இருக்கிறாரோ?" என்று சிறிது சத்தமாகக் குமாரவேல் குரல் கொடுத்தார்.

"கொஞ்சம் இருங்கோ, வந்து விடுவார்." என்று உள்ளிருந்து குரல் கேட்டது. அவருடைய மனைவியாராக இருக்கவேண்டும். ஒரு நிமிடங் கழித்து வாசல்வரை வந்து, "விறாந்தையிலை வந்து இருங்கோவன்" என்று வெளியே நின்ற எங்களை உள்ளே அழைத்தார்.

விறாந்தையில் இருந்த சின்ன மேசையில் செய்தித்தாள்கள் சில இருந்தன. எடுத்துப் பார்க்கத் தொடங்கினேன். "நேற்றையான் போல கிடக்குது" என்றேன்.

"எங்கடை பத்திரிகைகளிலை எல்லா நாளும் ஒரே கதைதான். இன்றையானும் நேற்றையானும் போனகிழமையானும் அடுத்த கிழமையானும் திரும்பத் திரும்ப ஆரேன் அரசியல்வாதிகள் அரைச்ச மாவை அரைக் கிறதைத் தான் செய்தி எண்டு போடுவினம்." என்று சிரித்தார் குமாரவேல்.

"ஏதோ, செய்திகள் எண்டு வெளியிட இயலுமாக இருக்கிறதே" என்றேன்.

"மெய்தான். பயந்து பயந்து செய்திகளை வெளியிடுகிறதால சனம் அறிய வேண்டிய பல கதைகள் சொல்லப்படுகிறதில்லை."

"கொழும்பிலும் பெரும்பாலும் அதே கதை தான். என்றாலும் கொஞ்சமேனும் வித்தியாசமாகச் செய்திகள் வரும்."

கிராம அலுவலர் அப்போது உள்ளேயிருந்து வந்தார். குமாரவேல் மாஸ்றர் தானே! மேலே போயிருந்தனான். வரக் கொஞ்சம் சுணங்கி விட்டுது." என்று சொல்லிவிட்டு என்னைப் பார்த்ததும் "இவர் யார்?" என்று குமாரவேலிடம் கேட்டார்.

"இவர் என்னுடைய சினேகிதர் சுந்தர மூர்த்தி. கொழும்பில் இருந்து வந்திருக்கிறார்." என்றார் குமாரவேல்.

"நான் அவருக்காக என்ன செய்ய வேண்டும்?"

"அவர் சும்மா என்னோடு வந்தவர். எனக்குத்தான் ஒரு சின்ன அலுவல்...."

"சொல்லுங்கோ!"

"இந்த விண்ணப்பங்களிலை என்னுடைய அடையாளத்தையும் கையொப்பத்தையும் நீங்கள் உறுதிப்படுத்தித் தரவேணும்."

"அவ்வளவுதானா?"

"ஓம்!"

கிராம அலுவலர் விண்ணப்பப் படிவங் களை எடுத்துப் பார்த்துவிட்டு "அவசரமா?" என்று கேட்டார்.

"கொஞ்சம் அவசரம். ஏன் கேட்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை என்னுடைய ரபர் ஸ்ற்ராம்ப்பைக் கந்தோரிலை விட்டுவிட்டன். என்னோடு வந்தால் அங்கேயே குத்தி ஒப்பமிட்டுத் தரலாம். அல்லது உங்களுக்கு வசதியான நேரம் வந்து எடுக்கலாம்." என்றார்.

அவரோடு அலுவலகத்துக்குப் போவதானால் அவரை அவசரப்படுத்துவதாகி விடும் என்று நினைத்து, "விதானையார், நான் பின்னேரமாக வந்து எடுக்கிறன்." என்றார்.

"சரி நாங்கள் வாறம்" என்று குமாரவேல் வெளிக்கிட்டார்.

வாசலைத் தாண்டி கேற்றை அடையுமுன் குமாரவேல் திரும்பிப் பார்த்து வீட்டை நோட்டம் விட்டார். அதை விறாந்தையில் இருந்து அவதானித்த கிராம அலுவலர், "என்ன மாஸ்ற்றர், எதையேன் மறந்து விட்டீர்களா?" என்று கேட்டபடி வெளியே வந்தார்.

"ஒன்றுமில்லை, மேலே போயிருந்ததாகச் சொன்னீர்கள். மேல் வீடு கட்டியிருக்கிறீர்களா என்று பார்த்தேன்."

"இருக்கிற இடவசதி எனக்கு நன்றாகப் போதும். எனக்கேன் மேல்வீடு?"

"அப்படியானால் மேலே போனதாகச் சொன்னது....?"

"அதா? அங்கே!" என்று வீட்டுப் பின் வேலியோடு நின்ற பனைமரத்தைச் சிரித்தபடியே காட்டினார்.

எங்கள் மனங்களில் எழுந்திருக்கக் கூடிய கேள்விகளை விளங்கிக் கொண்டவர் போல, "அது தான் எங்களுடைய பரம்பரைத் தொழில். நான் படித்து வந்த காலத்திலும் அப்புவுக்கு உதவியாக ஏறிக் கள்ளிறக்குவேன். இப்போது அதற்கான தேவை இல்லை. ஆனாலும் வளவுக்குள் மரம் இருக்கிறது. அதை ஏன் வீணாக்குவான்?" என்று சொல்லிவிட்டுப் பின்பும் தொடர்ந்தார்.

"என்னுடைய உடம்பில் தென்பிருக்கிறது. எனக்கு என்னுடைய மூதாதையுடைய தொழிலைப் பற்றி ஒரு வெட்கமோ கூச்சமோ இல்லை, அதை யாரும் குறைவாக நினைத்தால் அது அவர்களுடைய பிரச்சனை. அப்பிடிப் பார்க்கிறவர்கள் நான் மரமேறினாலும் ஏறாவிட்டாலும் என்னைச் சாதி சொல்லித் தான் அடையாளப் படுத்துவார்கள். அவர்களுக்காக நான் என்னை ஏன் மாற்ற வேண்டும்?" என்று பெருமையுடன் சொன்னார்.

"நீங்கள் சொல்லுவது மெய்தான்" என்பதற்கும் மேலாகக் குமாரவேலுக்கு எதையும் சொல்ல முடியவில்லை.

தன்னை மதிக்காதவர்களை அனுசரித்துப் போகுமாறு தன்னை மாற்ற மறுக்கிற இந்த மனிதரைப் போன்றவர்களால் தான் சமுதாயத்தைத் திருத்த முடியும் என்று நினைத்துக் கொண்டேன்.

## போராடல் பற்றி...

*மாக்ஸ் பிரபாகர்*

உயிரழியும் வலி உணர்ந்து பார்
உறவுகள் பிரியும் பொழுதுகளின்
உணர்வுகளில் விழ்ந்து பார்
உடன்பிறப்புகளைத் தொலைத்த
மனதொன்றின்
உடைந்த நிலையேகிப்பார்.
உன் மகன் அல்லது மகள்
கடத்தப்பட்ட கணங்களின் மேல்
கிடந்து பார்

இணையதைப் பிரிந்த
இழவு விட்டின்
வெறுமை தின்று பார்.

அம்மையப்பரை இழந்த
அநாதைக் குழந்தைகளின்
ஆழ்துயர் மொழிகளில் வாழ்ந்து பார்

கொடும் வதைகள் தரும்
அவசர சட்டங்களின்
சிக்கலுக்குள் சிதைந்து பார்.

நன்மை, தீமை - இன்ப துன்பமென
நாள்தோறும் உடனிருந்த - தோழனைத்
தொலைத்துருகும் நிமிடங்களில் நின்று பார்

எறிகணைகள் ஏவி விடப்பட்ட
நிலத்திடை நின்று - அவை தரும்
அசுர வலிகளை அனுபவித்துப் பார்

கைகளை, கால்களை அன்றேல்
உடலதன் வேறு உறுப்புகளை
செல்வீச்சில் இழந்து செத்துப்பிழைத்துப் பார்

சமனிலை பெறா சமூகத்தில்
ஓரங்கட்டப்பட்ட ஒருவனாய்
சஞ்சரித்துப்பார்

அகதி வாழ்வில்
ஆகாரமின்றி முடங்கி
அவதியுற்றுப் பார்

நொருங்கிய வாழ்வின்
நோவுகள் தாளாது - நீயுங்கூட
போராட முனைவாய்

நன்றி : வார்ப்பு

# மீட்சி எப்போது



த. ஜெயசீலன்

கற்பூர வாசம் கலந்திருந்த காற்றிலின்று
கந்தகச் செறிவு கடுமையாச்சு.
அடிவளவு
ஆழக் கிணற்று நீர் அரைவாசி நஞ்சூறி
நீலக் குழந்தைகளைப்
பிரசவிக்கத் தூண்டிடுது.
பிளாஸ்ரிக் குவளையுள் பிறந்த

குடிநீர்...புற்று
நோயை உருவாக்கும்... நோன்பு

நிதமிருந்து.
குழை, எருக்கள் கொட்டி
விளைவித்த காய்கறிகள்
உரங்கலந்து பூச்சி நாசினிகள் மிக

உறைந்து
பார்க்கத் தளதளென்று...
"பிணி வழங்கும்' மூலமாச்சு.
உடனுக்குடன் சமைத்த உணவு
மருந்தடித்த
கவர்ச்சிப் பொதிக்குள்

கலப்படத்தோடினிக்கிறது.
சூரியனின் தூய ஒளியிலும்
உயிர்பறிக்கும்
ஏதேதோ கதிர்கள் இழைந்துளது.
கையடக்கத்
தொலைபேசி அலைகள் துளித்துளியாய்
நம் நரம்பு
மண்டலத்தில் விசமேற்றி மாய்த்திடுது.

'ட்ரோலர்கள்'
கடலையே கலக்கிடுது.
காடெல்லாம் பாலையாகி
விடுதலால்... புவிவெப்பம் உயர்ந்து

தகிக்கிறது.

அணுவின் பயன்பாடு
அணுவெடிப்புச் சோதனைகள்
விண்ணில் விடுங் கழிவுகள்
காலநிலைக் குழப்பங்கள்
இன்னுமின்னும்... எத்தனையோ
இன்றையநம் சூழ்நிலையைக்
கொன்றுவிடக் கங்கணம் கட்டி

இளிக்கிறது.
இயற்கையோ டிணைந்த
இயல்புக்குத் திரும்பாமல்...
நவீன வசதிகளை நாம் துறக்க

விரும்பாமல்...
வாழ்வினது அடையாளம்

தனித்துவத்தை
தொலைத்தின்று
உயிர்ப்புந் தொலைக்கிறதெம் வரலாறு.
வாழ்க்கைமுறை
மாற்றி
மீட்கவே முடியா இந் 'நிலையிருந்து'
மீளும் நாளெப்போது?
சொல்வதெவர் கூறு?

கட்டுரை

# பெண்களின் பங்களிப்புகளும் அதன் சவால்களும்

ஒரு பக்கத்தில் நாம் பெண்களை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துள்ளோம். பெண் கடவுள்கள் உள்ளன. மறுபக்கத்தில் பெண்களை குறைவாகவும் இழிவாகவும் பேசுகின்றோம், நடத்துகின்றோம். உதாரணமாக பெண்புத்தி பின்புத்தி, புகையிலை விரித்தால் போச்சு பொம்பிளை சிரிச்சால் போச்சு எனப் பெண்களைத் தாழ்த்தி மட்டந்தட்டும் குணம்/ நடத்தையும் காணப்படுகிறது. ஆனால் ஆண்களை சாண் பிள்ளை என்றாலும் ஆண்பிள்ளை தான், கல்லெண்டாலும் கணவன், புல்லெண்டாலும் புருஷன் என வேறு மட்டத்தில் பேசப்படுவர்.

பவித்ரா கைலாசபதி

இலங்கையில் பெண்கள் பலதுறைகளில் தமது பங்களிப்புகளைச் செய்கின்றனர், அரசியலில் இருந்து கல்வித்துறை, உற்பத்தித் துறை வரை பல துறைகளிலும் பல மட்டங்களில் பங்களிப்புக்களைச் செய்கின்றனர்.

இலங்கையின் பொருளாதாரத்தில் கிட்டத்தட்ட 32% மான பெண்கள் (Labour force participation rate) நிர்வாக, முகாமைத்துவத்தில் 21.4% பெண்கள். தொழில்சார் (professional), தொழிநுட்பசார் வேலைகளில் 46.5% பெண்கள். பெரும்பான்மையான பெண்கள் (45%) தனியார் துறையிலும் 20% னோர் சுயதொழிலிலும் 20% சம்பளமற்ற குடும்ப வேலைகளிலும் 14% அரசதுறையிலும் வேலை செய்கின்றனர்.

இவ்வாறான பங்களிப்புகளுக்குப் பின்னணியில் எமது கல்விநிலை காணப்படுகிறது. ஆரம்ப பாடசாலை கல்வியில் 95.6% பெண்பிள்ளைகள் 97.1% ஆண்பிள்ளைகள். இரண்டாம் நிலைப் பாடசாலை கல்வியில் 96.4% பெண்பிள்ளைகள் 93.5% ஆண்பிள்ளைகள். 2010ம் ஆண்டுப் புள்ளிவிபரங்களின்படி பல் கலைக்கழக மட்டத்தில் சட்டபீடத்தில் 51%, கலைப்பீடத்தில் 75%, விஞ்ஞான பீடத்தில் 53%, முகாமைத்துவ/ வணிக பீடங்களில் 52%, வைத்திய பீடங்களில் 52%, ஆயுர்வேத, உணானி போன்ற உள்நாட்டு மருத்து வத்துறையில் 72%, கணனி துறையில் 41%, மிகக்குறைவாக பொறியியல் பீடத்தில் 25%ம் பெண்கள் பதிவு செய்துள்ளனர். ஒட்டு மொத்தமாக பார்த்தால் 2010ம் ஆண்டில் உயர்கல்வி நிறுவனங்களில் 58%மான மாணவர்கள் பெண்கள்.

பல்கலைக்கழக ஆசிரியர்களில் 40% ஆனவர் பெண்கள். இவ்வாறு பங்களிப்புகள் இருந்தாலும் சில மட்டங்களில் பெண்கள் குறைவாகவே காணப்படுகின்றனர். உதாரணமாக அரச துறையில் 75% சிரேஷ்ட அதிகாரிகள் ஆண்களே. கொழும்பு பங்குச் சந்தையில் பதியப்பட்ட 233 நிறுவனங்களில் 68.2% நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளில் பெண்கள் இல்லை. ஏனைய 31.8%மான நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளில் 61%மட்டுமே பெண்கள் உள்ளனர்.

பெண்களின் பங்களிப்புகளை நாம் ஆடைத் தொழிற்சாலைகள், பெருந் தோட்டங்கள், தாதிகள், ஆசிரியர்கள், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கடமையாற்றும் வீட்டுப் பணிப்பெண்கள் போன்ற துறைகளில் கூடுதலாக காண்கிறோம். ஆனால் இந்த வேலைகளுக்கு பெறுமதியும் (value) அந்தஸ்தும் கிடையாது. உதாரணமாகக், கொழும்பு விமான நிலையத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் மற்றும் அங்கிருந்து வரும் வீட்டுப் பணிப் பெண்களைச் சுங்க மற்றும் குடிவரவு அதிகாரிகள், விமான சேவை உத்தியோகத்தர்கள் போன்றோர் நடாத்தும் விதம் மிகவும் கவலைக்குரியது. இலங்கைக்கு அதிக அளவான அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் இந்தப்

பெண்களுடன் கதைக்கும் விதமும் நடத்தும் விதம் மிகவும் கீழ்த்தரமானது. இதே போன்றே சுதந்திர வர்த்தக வலயங்களின் ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை புரியும் பெண்களைச் சமூகம் கேவலமாக நடத்துகின்றது. இவர்கள் தைக்கும் ஆடைகள் மூலம் இலங்கை அதிக அந்நியச் செலாவணி ஈட்டினாலும் இவர்களுக்கு வழங்கும் சம்பளங்களும் குறைவு

இலங்கையின் அரசியலிலும் பெண்களின் பங்களிப்பு உண்டு. இலங்கையின் சுதந்திர போராட்டத்திலும் ஈடுபட்டனர், *1931*இல் நடைபெற்ற இடைத்தேர்தலில் முதலாவது பெண் பாராளுமன்ற உறுப்பினராக ருவான் வெல்லவிலிருந்து அடலின் மொலமுறே *(Adeline Molamure)* தெரிவு செய்யப்பட்டார். *1932* மே மாதம் இடம்பெற்ற மற்றொரு இடைத் தேர்தலில் நேசம் சரவணமுத்து கொழும்பு வடக்கில் தெரிவு செய்யப்பட்டார். இவ்வாறான வரலாறு கொண்ட இந்த நாட்டில் தற்போது *5.7%* பாராளுமன்ற உறுப்பினர்கள் *(13/225)* பெண்கள். உள்ளூராட்சிமன்றங்கள் போன்றவற்றில் *11.5%*மானோரே பெண்கள்.

ராகுல சங்கிருத்தியாயரின் "வொல்காவிலிருந்து கங்கைவரை" என்ற வரலாற்று நூலை வாசித்திருந்தால் அதில் எமது புராதன நாகரிகத்தில் எவ்வாறு பெண்களும் ஆண்களும் சேர்ந்து சமமாக வேட்டை ஆடல் போன்றவற்றில் ஈடுபட்டனர் எனத் தெரியும்.. என்றைக்குக் கூட்டு வாழ்க்கை முடிவுற்று தனிச் சொத்து, குடும்பம் நம்பி, தங்கி வாழ்பவர்கள் என்ற நிலையும் ஏற்பட்டது. இதுவே தந்தை வழி சமூகத்தின் ஆரம்ப கட்டம். எப்பொழுது தனிச் சொத்து சேர ஆரம்பித்து செல்வந்தன், ஏழை என்ற பிரிவுகள் வந்ததோ, அதே சமயம் குடும்பத்தினுள்ளும் அதிகாரம் கணவனிடமும் சேவை செய்வது மனைவி/ பெண்களின் பொறுப்பாகவும் மாறியது. ஏங்கல்ஸ் தனது நூல்களில் அதனை வடிவாக எடுத்துச் சொல்லியுள்ளார்.

இன்றைக்கும் தாய்வழிச் சமூகம். வழக்கத்தில் எங்கெல்லாம் இருக்கின்றதோ அங்கெல்லாம் பெண்களுக்கு சம அந்தஸ்து இருப்பதோடு சொத்துக்களில் சம உரிமையும் இருக்கிறது. உதாரணமாக கேரள நாட்டில் இந்த சமூக அமைப்பு இன்றும் காணப்படுகிறது.

## எதிர் நோக்கும் சவால்கள்

எமது சிந்தனைகள் ஆண்கள் பெண்களுக்கான வகிபாகங்கள் *(gender roles)*, அவை காரணமாக பெண்கள் நிறுவனங்களில் மேல்மட் டங்களுக்குப் போகமுடியாத மறைமுகத் தடைகளும் *(glass ceiling)* குடும்பங்களில் கணவரின் கட்டுப்பாடும் போன்ற பல சவால்கள் காணப்படுகின்றன. முற்போக்குச் சிந்தனை கொண்டவர்களின் குடும்பங்களில் கூட இச் சவால்களைக் காணலாம்.

எமது சமூகத்தில் எவ்வாறு பிள்ளைகள் சமூகமயப்படுத்தப்படுகிறார்கள் *(socialization)* எனப் பார்த்தால் ஏன் இவ்வாறான சவால்கள் இன்னும் இந்நாட்டில எங்கள் சமூகத்தில் காணப்படுகின்றன என நாம் விளங்கிக் கொள்ளலாம். பெற்றோர், மூத்தோர், அயலவர், ஆசிரியர் என பலதரப்பினரும் இந்த சமூக மயப்படுத்தலில் ஈடுபடுகின்றனர்.

பெண்பிள்ளைகள் என்றால் இவ்வாறு தான் இருக்கவேண்டும், ஆண்கள் என்றால் இவ்வாறு தான் இருக்கவேண்டும் எனக்கூறிப் பிள்ளைகள் வளர்க்கப்படுகின்றனர். உதாரணமாக வேறுபட்ட நிற ஆடைகள், வேறுபட்ட விளையாட்டுப் பொருட்கள், பெண் பிள்ளைகளை வீட்டு வேலையில் உதவப் பழக்கல் போன்றனவாகும், மேலும் ஆண் பிள்ளைகள் சிறு வயதில் பெண்பிள்ளைகளின் விளையாட்டுக்களிலும் உடைகளிலும் ஆசை கொண்டால் பெட்டைப் பையன் என்று கூறி ஏசுவார்கள். அதே போல பெண்பிள்ளைகள் மரம் ஏறுதல், ஆண்பிள்ளைகளுடன் விளையாடுதல் போன்றவற்றில் ஈடுபட்டால் பெடியன்*(tom boys)* என ஏசுவார்கள்.

ஒரு பக்கத்தில் நாம் பெண்களை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துள்ளோம். பெண் கடவுள்கள் உள்ளன. மறுபக்கத்தில் பெண்களை குறைவாகவும் இழிவாகவும் பேசுகின்றோம், நடத்துகின்றோம். உதாரணமாக பெண்புத்தி பின்புத்தி, புகையிலை விரித்தால் போச்சு பொம்பிளை சிரிச்சால் போச்சு எனப் பெண்களைத் தாழ்த்தி மட்டந்தட்டும் குணம்/ நடத்தையும் காணப்படுகிறது. ஆனால் ஆண்களை சாண் பிள்ளை என்றாலும் ஆண்பிள்ளை தான், கல்லெண்டாலும் கணவன், புல்லெண்டாலும் புருஷன் என வேறு மட்டத்தில் பேசப்படுவர்.

இவ்வாறு வளர்க்கப்பட்ட நாமும் அந்த வழியிலேயே சிந்திக்கின்றோம். ஆண்

களுடன் பெண்களும் உடலியலில் *(biologically)* வேறுதான். ஆனால் அதனால் தரம் குறைந்தவர்கள் அல்ல. உரிமைகள் குறைந் தவர்கள் அல்ல. குடும்பங்களை எடுத்துக் கொண்டால் பெண்களுக்கு இரட்டைச் சுமை காணப்படுகின்றது. சம்பளத்திற்காக செய்யும் வேலையையும் வீட்டில் சமையல், பிள் ளைகளை வளர்க்கும் பராமரிக்கும் வேலை களும் வயது போனோரது பராமரிப்பு போன்ற வேலைகளும் பெண்களுக்கு காணப்படுவதால் இரட்டைச் சுமை *(double burden)* என வர்ணிக்கப்படுகிறது.

எங்களைப் போன்ற பெண்களுக்கு இரட்டைச் சுமையை விட ஒருபடி கூடுதலாக மூன்றாம் சுமையும் உள்ளது. அது சமூக வேலைகளில் ஈடுபடுதலாகும். இவ்வாறான வேலைப்பழு பெண்களின் பங்களிப்புகளுக்குச் சவாலாகும்,

முதலாளித்துவத்தின் அடக்குமுறை, மேலைத்தேய நாடுகளின் நவகாலனித்துவ அடக்குமுறை, அரசாங்கங்களினது அடக்கு முறை என பேசுகின்றோம், அவற்றை எதிர்க்கின்றோம். பெண்களைக் குறைவாகப் பேசுவது, வீட்டு வேலைகளில் முடக்கி வைத்திருப்பது என்பனவும் அடக்கு முறை கள்தான். கால்மார்க்ஸ் வர்க்க அடக்குமுறை பற்றி பேசினார். ஆனால் மார்க்ஸிய பெண்நிலைவாதிகள் வர்க்கமும் பால் நிலையும் எவ்வாறு பெண்கள் அடக்குமுறைக்குட் படுத்துகின்றன என கவனம் கொண்டுள்ளனர்.

பெண்கள் முழு மனிதர்களாக சமூகத்தில் நல்ல பிரஜைகளாக பங்களிப்புகள் செய்வதற்கு முற்போக்கு சிந்தனை கொண்டவர்கள் பெண்கள் ஒடுக்குமுறை தொடர்பான விடயத்திலும் அதிக கவனமெடுக்கவேண்டும். முதலில் ஒவ்வொரு வரும் தத்தமது குடும் பங்களில் மாற்றங்களைக் கொண்டு வந்தால் அதுவே நல்ல முன்மாதிரியாகவும் இருக்கும். சமூக மாற்றத்தை கொண்டுவரவும் உதவும். மாற்றம் என்பது தானே வராது. எல்லோரது கூட்டு முயற்சியில் தான் விரும்பிய மாற்றங்களைக் கொண்டு வரலாம்.

இறுதியாக உலக பொருளாதார மன்றத் தினால் கூறப்பட்ட கருத்து ஒரு நாட்டின் பால் நிலை சமத்துவத்திற்கும் அந்நாட்டின் ஒருவ ருக்கான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையில் நெருங்கிய தொடர்புண்டு. எனவே ஒரு நாட்டில் ஒரு சமூகத்தில் பெண்களின் பங்களிப்பு இருக்க பால்நிலை சமத்துவம் இன்றியமையாததாகும்.

## ரஜீந்த லொய்ஸாவுக்கு

ஹபீப் ஜலீப்

அவளுக்குச் சொல்ல இயலாது.
ஆனாலும் எவ்வாறோ
அப்பா வீட்டுக்கு வா
அப்பா வீட்டுக்கு வா
என அவள் செல்கிறாள்.
நான் ஏன் தொடர்ந்தும் சிறையிலிருக்கிறேன எனவும்
ஏன் அவளோடு கைகோத்து வீடு திரும்ப இயலாது எனவும்
அவளுக்கு விளங்காது.
வீடும் சிறைச்சாலை போலத்தான் என
அவளுக்கு எவ்வாறு நான் விளக்குவது.

(கோட் லக்பத் ஜெயில்.
1981 ஏப்ரல் 13 அன்று சிறைச்சாலை விஜயத்தின் போது. )

## ஏனுந்தக் கலாசாரம்?

*அழ.பகீரதன்*

உண்மைகள் கசக்கத்தான் செய்யும்
நன்மைகள் விளையும் என்ற
எதிர்பார்ப்பில் தான் எல்லாம்...
யாழ்ப்பாணத்துக் கலாசாரம்
யாழ்ப்பாணத்துக் கலாசாரம்
என்று வாய் கிழியக் கத்தல்
எதிர் வீட்டில் கலியாணம்
எடுப்பாய்க் காட்டிச் செய்தனர்
என்றால்
தன்வீட்டில் தன்பிள்ளைக்கு
இன்னும் அதிகம்
எடுப்பாய்க் காட்டச்
செய்வதுவோ
எங்களது கலாசாரம்?
முத்துப் பந்தலும்
மூக்கில் விரலை வைக்கும்
தடபுடல் வீடியோப் பதிவும்
உடன் வருமோ ஆயுளுக்கு
கடன் பட்டு
சோக்கு காட்டிப்போட்டு
வீட்டில் வரிசையாய்
கடன் கொடுத்தவர்
நின்றால்
அக்கம் பக்கம் என்ன நினைக்கும்
பெருமை எதுவென அறியாப்
பெருமையுள் ஆட்பட்டு
ஏனிந்த ஆட்டம்
பாட்டம் கூத்து...
சோக்குக் காட்டி
மணம்முடித்து வைத்து
உமக்குள்
மகிழும் பெற்றோரே
கூடி இணைந்த
மணமக்கள் தமக்குள்
கூடி மகிழ்வு கூட்டவென்று
ஒரு ஐம்பதினாயிரம்
கைக்குள் திணித்து
கனிமூன் சென்றுவருக
என்று வழியனுப்பி வைக்கும்
பழக்கம் உமக்குள் உள்ளதுவோ...
இல்லை, இல்லை... என்றால்...
ஏனுந்த கலாசாரம்...?

## தாயகம் சஞ்சிகையின் வளர்ச்சியில் உழைத்த தோழர் சூடாமணிக்கு அஞ்சலி



தாயகம் சஞ்சிகையின் ஆரம்ப காலந்தொட்டு தாயகம் இதழின் வாசகராகவும் அதனை மக்கள் மத்தியில் கொண்டுசெல்வதில் முன்மாதிரியாகவும் திகழ்ந்த தோழர் சூடாமணி (கணபதிப் பிள்ளை) தாயகம் வெளிவந்தவுடன் வரிக்கு வரி படித்து விமர்சனங்களை வெளிப் படையாக முன்வைத்து தாயகம் இதழுக்கான ஆலோசனைகளை கூறுபவர்.

83க்குப் பின்னர் ஏற்பட்ட யுத்த சூழலில் தாயகம் விநியோகத்தை பல நெருக்கடிகளுக்குட்பட்டே செய்யவேண்டி வந்தது. அந்த நெருக்கடிக்குமத்தியிலும் தாயகத்தின் தொடர்ச்சியான வருகைக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டதோடு தேசிய கலை இலக்கியப் பேரவை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு தனது கருத்துக்களை ஆணித்தரமாக வெளியிடும் ஒருவராகவும் திகழ்ந்தவர்.

அவர் வவுனியாவில் குடியேறிய பின்பும் தாயகம் விநியோகத்தில் வவுனியாவில் தொடர்ந்து பங்காற்றிய தோடு தேசிய கலை இலக்கிய பேரவையின் செயற்பாடுகளை வவுனியாவில் விரிவு படுத்த முன்னின்று உழைத்தவர், வவுனி யாவில் அக்காலங்களில் நடைபெறும் இலக்கிய நிகழ்வுகளில் தவறாது கலந்து கொள்ளும் கலை இலக்கிய ஆர்வலர்,

பாட்டாளி வர்க்க பண்பாளராக- ஒரு புதிய பண்பாட்டளாராக வாழ்ந்து மறைந்த அவருக்கு தாயகம் தனது இதயம் நெகிழ்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறது.

சமூக விஞ்ஞானகற்கை வட்டம்

# சினிமாவும் அடையாள அரசியலும்

13.06.2013 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

க. ஆதித்தன்

மக்களிடமிருந்தே கலைப்படைப்புகள் தோன்றுகின்றன. தாம் தோன்றிய காலத்தையும் சூழலையும் அவை பிரதிபலிப்பதோடு நின்றுவிடாமல் சமூகத்தின் மீது தாக்கம் செலுத்தவும் செய்கின்றன.

தமிழ்ச்சூழலில் மேடைநாடகங்களின் வளர்ச்சி பெற்ற வடிவமாகவே சினிமா தோன்றியது. அது தனது தோற்றத்திலும் இயல்பிலும் அதிகரித்த வெகுசனத் தன்மையை கொண்டிருந்ததுடன் கலை என்று மட்டுப்படுத்த கூடிய அளவில் இல்லாமல் பெரும் பணம் புரளும் வணிக தொழிற்துறையாகவே நீடித்து வருகிறது.

தமிழ்ச்சினிமாவின் அரசியற்சார்பு தெளிவானது. காலம் தோறும் ஆதிக் கருத்தியலையே பிரதிபலித்து வந்துள்ளதுடன் அதிகார வர்க்கத்துடன் சமரசப் போக்கையே கொண்டிருந்துள்ளது. பிரிட்டிஷ் ஆதரவுப் போர்ப்பிரச்சாரப் படங்கள் தொடக்கம் பார்ப்பனிய கருத்தியல் திராவிடக் கட்சிப் பிரச்சாரப் படங்கள், அண்மைக்கால அமெரிக்க ஆதரவுப் படங்கள் வரை குறிப்பிடலாம். அதிகரித்த முதலீடு தோற்றுவிக்கும் அதிக இலாபம் உழைப்பதற்கான நிர்பந்தம், ஆதிக்க கருத்தியலாளர்களின் செல்வாக்கு உட்பட்ட காரணிகளை இப்போக்குக்கான பொதுவான காரணங்களாக குறிப்பிடலாம்.

சினிமாவினுள் கலகக்குரல்கள் அரிதானதாயும் வணிக எல்லைக் குட்பட்டதாயும் அவ்வப்போது ஒலித்தே வந்துள்ளன என்றபோதும் பெரும்பாலான சமயங்களில் அவை ஒடுக்கப்பட்டும் தடை செய்யப்பட்டுமே வந்துள்ளன.

தமிழக சினிமாவில் நிகழ்ந்த முக்கிய திருப்பம் மண்வாசனை சினிமாக்களின் தோற்றம். கிராமங்களின் இயல்பும் தமிழர்களின் வாழ் நிலையுமாக இருக்கும் சாதியத்தை தவிர்த்து வாழ்க்கையின் எந்த ஒரு அம்சத்தையும் பேச முடியாது என்ற சூழலில் சினிமா அதைக்கையில் எடுத்தபோதும் இயல்பான தமிழகக் கிராமங்களையோ சாதியின் உண்மையான வீச்சையோ சித்தரிக்கவில்லை என்பது விமர்சகர்களின் குற்றச்சாட்டு. மாறாக ஆதிக்க சாதிப் புகழ்ச்சியும் கால மாற்றத்தில் ஊசிப்போன பழைய மதிப்பீடுகளைக் கைவிடமுடியாது தவிக்கும் வாழ்ந்து கெட்ட பண்ணையார்களின் புலம்பலையுமே சாதியமாக சினிமா பதிவு செய்துள்ளது.

இது போக மேம்போக்காக காதலில் சாதியின் குறுக்கீடு பற்றி படங்கள் வந்திருந்தாலும் அவை எதுவும் சாதியத்தின் வீரியத்தையும் வீச்சையும் காட்டியதாகச் சொல்ல முடியாது.

தொண்ணூறுகளின் பின்னர் உலகமயப் பின்னணியில் சினிமாவில் உருவாகத் தொடங்கிய புதிய போக்குக்கு விட்டேத்தியான விடலைத்தனமும் நோக்கமற்ற வெற்று வன்முறையுமே கச்சாப் பொருளாகியது. அத்தோடு காதலும் சேர்த்தி.

இக்காலத்திலேற்பட்ட தொழில் வளர்ச்சி, புதிய நகரங்களின் தோற்றம், இவற்றோடு உருவாகி வளர்ந்து வந்த நடுத்தர வர்க்கம், பெரும்பாலும் சலுகைகளால் பயன் பெற்ற சாதி இந்துக்கள் எனப்படும் இடைநிலை சாதியினர் போன்றவர்களே இக்கால சினிமாவின் பேசு பொருளாக இருக்கிறார்கள். சினிமாத் தொழிற்துறையும் இதே காலத்தில் குறிப்படத்தக்க மாற்றங்களை காண்கிறது.

இந்த நடுத்தர சாதியினரின் வாழ்க்கை முறை பேச்சு மொழி சடங்குகள் எல்லாமே சினிமாவில் தமிழகத்தின் பொது அடையாளங்கள் போன்ற சித்தரிப்பை பெற்று நிலைக்கின்றன. இரண்டாயிரங்களில் விடுபட்டுப்போன இப்போக்கு மறுபடியும் இப்போது திரும்புகிறதா. எனத் தோன்றுகிறது. தனித்தனிச் சாதியடையா

ளங்கள் பற்றிய கவனிப்பு இலக்கியங்களில் அங்கொன்றிங் கொன்றாகவும் அரசியலில் பொதுப் போக்காகவும் ஏற்பட் டிருக்கும் பின்னணியில் இதைக் கவனிக்க வேண்டி யுள்ளது.

ஏற்கனவே பார்த்தது போல சினிமா வின் மிகையான வெகுசனத்தன்மை பண்பாட்டுத் தளத்தில் மிகக் கடுமை யான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தொலைக்காட்சி வானொலி பத்திரிகை என எல்லா வெகுமக்கள் ஊடகங்களும் சினிமாத் துறையை மையப்பொருளாக கொண்டே இயங்கு கின்றன என்பதால் பொதுச் சிந்தனையில் சினிமாவின் சித்தரிப்புகள் ஒரு இடத்தை பெற்றுவிடுகின்றன என்ற வகையில் சினிமாவில் சிறுபான்மையினர் பற்றிய சித்தரிப்புகளையிட்டு சமூக அக் கறை யுடையவர்கள் கவலை கொள்ளாமல் இருக்க முடியாது. கறுப்பானவர்கள், குண்டான வர்கள், திருநங்கைகள், மாற்று வலு வுடையோர், சமப்பால் உறவுக்காரர் பற்றிய சித்தரிப்புகள், குறிப்பாக நகைச் சுவை என்ற பெயரில் இழிவான சித்தரிப்புகளே இடம்பெறுகின்றன. மேலும் இட ஒதுக்கீடு போன்ற சமூக நீதிக்கு, எதிரான கருத்து வெளிப்பாடுகள் பிறமதத்தவர் மீதான சித்தரிப்புகள், உள்நோக்கம் கொண்ட அரசியல் சித்தரிப்புகள் என பலவும் சமூகத்தின் மீது எதிர்மறைத்தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதுபோக, பெண்கள் பற்றிய சித்தரிப்புகளைப் பற்றி தனியே சொல்லத் தேவையில்லை, மிக மோச மானவை.

மிகை வன்முறைகளை இரசிக்கத் தக்க ஒன்றாகப் பரப்பியதில் சினிமாவின் பங்கு பெரிது என்ற கருத்துக் குறித்துப் பெரிதாகக் கருத்துவேறுபாட்டுக்கு இடமில்லை. அரச இயந்திரத்தின் ஒடுக்கும் கருவியான போலிஸ் பற்றிய மிகைக் கவர்ச்சியான சித்தரிப்புகளும் என்கவுண்டர் பற்றிய நேர்மறையான புனைவுகளும் மிக அபாயகரமானவை. அண்மைக்காலத்தில் நிகழ்ந்த போலி மோதற் கொலைகளை நியாயப்படுத்திய வெகு ஜன ஊடகங்களும் அக்கொலைகளை நியாயப்படுத்திய வெகு ஜன ஊடகங்களும் அக்கொலை களை கொண்டாடிய மக்களும் என பெரும்பாலான தமிழக மக்கள் அக்கொலைகளை நியாயப்படுத்தியது ஆபத்தான அம்சம் என்பது நினைவில் கொள்ளப்படவேண்டும்.

மேற்படி சினிமா பொதுத்தளத்துடன் கொண்டிருக்கும் உறவென்பது சமூக அக்கறை உடையவர்கள் சினிமாவைத் தொடர்ந்து விமர்சிக்கவும் அதன் மீதான மக்களின் மாயக்கவர்ச்சியை நீக்கவும் தொடர்ந்து செயற்படுவதை அவசிய

## பிரபுவே, உம் தீர்ப்பு


வரவர ராவ்

பிரபுவே, உம் தீர்ப்பு
மாற்றத்திற்கெதிரானது
கிழக்கின் செம்மைக்கெதிரானது
அதற்கு என் ஒப்பத்தைக் கேட்கிறீர்.

பிரபுவே, உம்மால் முடிந்தால்
சில்லை நிறுத்தும்
சிவப்பை ஒற்றியெடும்.
பிரபுவே, நான் அப்போது
பொறுப்பேற்றலில் ஒப்பமிட்டு
என் மனவருத்தத்தை அறிவிப்பேன்

*வரவர ராவ் நன்கறியப்பட்ட தெலுங்குப் புரட்சிகரக் கவிஞராவார்.*

சிறுகதை



# வர்க்கம்

சுடர்விழி

சட்டைப் பை, காலர், டீ சர்ட்டின் முன் பக்கம், பின் பக்கம் ஏன் மூச்சுக்காற்றைக் கூட கம்பெனி விளம்பரத்துக்கு இழுத்து விட்டவன் போல, ஒரு தினுசாக சுற்றுப்புறத்தை அருவெறுத்தவன் போல் முகத்தைச் சுழித்துக் கொண்டு மூச்சு விட்டான். வேறு வழியில்லாமல் இந்தப் பேருந்தில் ஏறியவன் போல. பேருந்துக்குள் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து கொண்டிருந்தார்கள் மக்கள்.

வெயிலுக்குத் தொப்பி, காலுக்கு கவர்ச்சியான ஷூ, நெஞ்சுப் பகுதியில் உள்ள டீ சர்ட் பட்டனில் ஸ்டைலாக தூளியாடிய கூலிங் கிளாஸ் என அனைத்து அம்சத்திலும் அவன், அந்த சிறு நகரப் பயணிகளிடம் வேறுபட்டுத் தெரிந்தான். மற்றவர்களைப் போலல்லாமல் நடை, உடை, உடல் மொழியில் மாறுபட்டு இருப்பதனாலேயே ஒருவித்த் தனித்துவமான பெருமிதமும் அவன் பார்வையில் மிதந்தது. அடித்துப் பிடித்து ஏறிய பயணிகளை நாகரிகமற்றவர்கள் போல் வெறித்துப் பார்த்து விட்டு, தனக்கான தனியிடத்தை இந்த உலகம் விட்டு வைத்திருக்கிறதா என்பது போல பேருந்துக்குள் நோட்டமிட்டான்.

பள்ளிப் பிள்ளைகள் அவனது தோற்றத்தையும், அவனது விலையுயர்ந்த தோள் பையையும் உற்றுப் பார்க்க, அவனது தசைக்கோளங்களில் பெருமிதம் ஏறியது. பேருந்தில் அனைத்து இருக்கைகளும் நிரம்பி, ஒன்றில் மட்டும் ஜன்னலோரம் ஒரு முதியவரும், பக்கத்தில் நரைத்த தலை, கலைந்த தாடியுடன் பழுப்பு வேட்டியை மடித்துக் கட்டிய வண்ணம், வாயைக் குதப்பிக் கொண்டு வெற்றிலை மணத்துடன் ஒருவரும் உட்கார்ந்திருந்தனர். அவர் பக்கத்தில் மட்டும் ஒரு இடம் காலியாக இருந்தது. இதையும் விட்டால் தனது பெருமிதத்தின் சுமையை ஒன்றரை மணி நேரம் தாங்கிக்கொண்டு நிற்க முடியாது என்பதால், இருக்கிற இடத்தில் பக்கத்தில் உள்ள பெரியவருடன் ரொம்பவும் ஒட்டிவிடக் கூடாது என்ற எச்சரிக்கையுடன் மடியில் பையை வைத்துக் கொண்டு பக்குவமாக அமர்ந்து கொண்டான்.

"சே! வேட்டிய அவிழ்த்து விட்டுட்டாவது உக்காரலாம். அழுக்கு பிடிச்ச காலோட அப்படியே உட்காந்திருக்காரு" என்று மனதில் எண்ணங்கள் ஓட அவரை ஒரு ஸ்கேன் பார்வை பார்த்துவிட்டு உடலைக் குறுக்கிக் கொண்டான்.

"தம்பி நல்லா உக்காருங்க!" வாய் வழிய வாஞ்சையுடன் அவர் கொஞ்சம் தள்ளி இடம் கொடுத்தாலும், இந்த வெத்தல பாக்கு எச்சி தெறிக்குறதுக்கு பேசாமலே இருந்திருக்கலாம்! என்ற முகச்சுழிப்புடன் "ஓ.கே! ஓ.கே! " என்று வெடுக்கென தலையாட்டிக் கொண்டான். பெரியவர் திரும்பவும் பேசுவதற்கான முகக் குறிப்பைப் பார்த்து விட்டவன், வேண்டு மென்றே வேறு பக்கம் முகத்தைத் திருப்பி நோட்டமிட்டான். திடீரென ஒரு சுவிங்கத்தை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு சூழலை மென்று விழுங்குவது போல பற்களை அழுந்த அசைத்து சுவிங்கத்தைப் புரட்டி எடுத்தான். அவன் சுவிங்கத்தை எடுத்ததும், அதன் மேல் லாவகத்தையும் பக்கத்திலிருந்த பெரியவர் வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருந்தார். வெற்றிலை மெல்லும் பெரியவரின் வாயை யாரும் விசேசமாக வேடிக்கை பார்க்காமல், இடது பக்கத்தில் நின்றிருந்தவர் சுவிங்கம் மெல்லும் தன் வாயைப் பார்த்தது, உலகமே தன்னை உற்றுப்பார்ப்பது போல அவனுக்கு 'கெத்து' கொடுத்தது. மேலும் வெற்றிலைக்காக அசையும் வாயை விட சுவிங்கத்துக்காக அசையும் தனது வாய் நாகரிகத்தின் நுழைவாயில் என்பது போல கர்வம் பிறந்தது

போலவும், சுவிங்கத்தை மென்றுகொண்டே சுற்றிலும் இருப்பவர்களை ஒரு மேல் பார்வை பார்த்துக்கொண்டான்.

பையின் சைடு ஜிப்பைத் திறந்து திடீரென கை அகலப் பொருளை எடுக்க, ஏதோ மந்திரவாதி திடீரென பைக்குள்ளிருந்து மண்டை ஓட்டை எடுத்தது மாதிரி திடுக்கிட்டும், ஆர்வத்துடனும் பக்கத்திலிருந்த பெரியவர் முதல் நின்றிருந்தவர்கள் வரை அதையே நோட்டமிட்டனர். கை அகல செல்போனின் டச் ஸ்கிரீனில் அவனது நுனிவிரல் விந்தை புரிய, "ஏய்! இங்க பார்ரா. என்னமோ வெத்தலைக்கு சுண்ணாம்பு தடவுற மாதிரி இப்படி இப்படிங்குறாரு, என்னமா நிறம் மாறுது..."

இவ்வளவு மாடர்னான செல் போனை ஒரு வெற்றிலையோடு உவமானம் சொல்ல, பக்கத்தில் வாய்திறந்தவரை ஒரு 'மாதிரியாக' பார்த்து விட்டு மேற்கொண்டு டச் ஸ்கிரீனை அலை அலையாக எழுப்பிக் கொண்டிருந்தான்.

"யா! ஆம் சங்கர். ஸாரி ஃபார் த டிலே. நெக்ஸ் வீக், ஐ வில் அரேன்ஞ்ச். ஸ்யூர், யா யா! பை! தாங்க் யூ!"

இந்த முறை டச் ஸ்கிரீனுக்கு பதில் பக்கத்தில் உள்ளவர்கள் அவனது 'டச்' உதடுகளை வேடிக்கைப் பார்த்தனர். 'பெரிய எடத்துப் புள்ள போல இருக்கு!' என்று பொல பொலவென்று ஆங்கிலம் உதிர்த்த அவனது வேகத்தைப் பார்த்து, "தம்பி! காரக்குடிங்களா? இல்ல வெளிநாட்லேந்து வாறிங்களா?"

கேட்டது பெருமையாக இருந்தாலும், கேட்டவரின் தோற்றம் திருப்தியளிக்காதது போல, "நோ! ஜஸ்ட் எ விசிட்!" என்று இயல்பு போல பேசியவன், பிறகு உங்களுக்கு புரியாதில்ல என்பது போல பாவனை செய்தவன், "சும்மா, வேற வேலையா!" என்று நறுக்கென முடித்துக்கொண்டான்.

பேச்சும் புரியல, ஜாடையும் புரியல என்பது போல அவன் பார்க்காத போது அவனை சைடாக பார்த்துக் கொண்ட பெரியவர், நமக்கேன் வம்பு என்பது போல பேச முற்படாமல் வேறு பக்கம் பார்க்கலானார்.

"எம்மாம் நெணல் கெடக்கும், ரோட்ல ஒரு மரம் தெரியுதா பாரு! வெக்க காத்து மூஞ்ச உரிக்குது!" பெரியவர் ஊரைப் பார்த்து பேச, "ஆமா ரோட்டோர வய வரப்பல்லாம், பிளாட்ட போட்டு புட்டானுவ, இருக்கற மரத்தயும் ரோட்ட அகலப்படுத்துறேன்னு வெட்டி சாய்ச்சிபுட்டானுவ. என்னா புல்லு, பூண்டு கெடக்கு? மொதல்ல வீடு மொழுவ மாடு சாணி போடுதா, சொல்லு? காலம் கெட்டுப்போயி, எல்லாம் 'ஸ்பீடா' போறானுவளாம், ஸ்பீடா! " ஜன்னலோரப் பெரியவர் பதிலுக்கு விண்டு

# அவலம்

கல்வயல் வே.குமாரசாமி

மாமரக் கிளைகள் தோறும்
குருவிச்சை சடைச்சிருக்கும்
இரா மழைக்கு அடிச்ச
காற்றில் இலை
சில விழுந்திருக்கும்
ஆடு விலா எலும்பு
எண்ணும் வண்ணம் அவை
வெளித் தெரியமாறு
உலாவும் ஓர் கயிற்றுத் துண்டில்
ஒற்றைக் கொம்பு
உடைஞ்சிருக்கும்
துலாநுனித் தலைப்பில்
வைச்சுக்
குஞ்சு ஒன்றை
அண்டங் காகம்
அலாக்காக காலில் வைத்து
அலறக்
கொத்திக் கொண்டிருக்கும்



நூல்: இப்படியும்...
கவிதைத் தொகுப்பு
நூலாசிரியர்: அழ. பகீரதன்
விலை: ரூபா 200/=
வெளியீடு: தேசிய கலை இலக்கியப் பேரவை

வைக்க, பெரிசு எதையோ குத்திக்காட்டுவது போல் உள்ளது என்று அவன் அதுவரை ஏறிடாத அவரை எட்டி ஒரு பார்வை பார்த்துக்கொண்டான்.

சிறிது நேரத்தில் அவனை வேடிக்கைப் பார்த்தவர்கள், ஆளாளுக்கு தனக்குள் செட்டு சேர்ந்து கொண்டது போல, தங்களுக்குள் பேசிக்கொண்டே வந்தார்கள். சாதாரண கிராமத்து மனிதர்களிடம் சகஜமாகப் பழகுவதற்கு அவனுக்கு மனதளவில் விருப்பம் இல்லாவிடினும், சிறிது நேரத்திற்கு அவனை யாருமே சட்டை செய்யாதது, தனிமைப்பட்டது போல் இருந்தது. அவனே உற்றுப் பார்த்தாலும், பக்கத்திலிருந்தவர்கள் அவர்கள் பாட்டுக்கு தமக்குள் பேசிக்கொண்டே, ஊர், வயல், தண்ணீர், விவசாயம், மழை என்று தேவையான விசயங்களை அலசி விவாதித்து வர, அதற்குள் கலந்துபேசவும், விவரம் தெரியாமல் அந்நியப்பட்டது போல இருந்தது அவனது மனநிலை.

"தோ... தோ... இத பாரு! ஊரு வந்திருச்சி... அழாத... இந்தா மம்மு சாப்புடு !தோ... பாப்பா பாரு... தோ..." என்னென்னவோ சொல்லி சமாதானப் படுத்தினாலும் அந்தக் குழந்தை பெரிய குரலெடுத்து அழ ஆரம்பித்தது.

"தோடு பாரும்மா... அய்... பஸ்சு... ட்ரூ... வேகமாக போவுது பாரு! தோ... பழம்! சாப்பிடுறீ... தங்கம்! " எதைக் கொடுத்தாலும் தூக்கிக் கடாசுவது போல கையை வீசி, காலை உதைத்து ஆ..ங்.. ஆங்... என்று ஊரைக்கூட்டியது குழந்தை. முன்னிருக்கையில் குழந்தை வீறிட்டு அழ, இந்தச் சந்தர்பத்தில் தானும் சக பயணிகளிடம் கலந்துகொள்வது போல, தானும் முயற்சியெடுத்தான் அவன்.

"ஹாய்... அழக் கூடாது... ந்தா செல் போன்... டச் ஸ்கிரீன் படம் பாரு..." அவன் மீண்டும் முயற்சித்து "இங்கவா!" எனக் கையை வேறு நீட்ட, அது முன்பைவிட இன்னும் பயந்து அலறியது போல கத்த, திடீரென பக்கத்திலிருந்த பெரியவர், "ஏன் ஆயி! எங்க செல்லம்ல, தங்க சம்பால்ல ரோ... ரோ... ரோ... அழக் கூடாது, ஏம்மா பிள்ளய இப்படி காத்தோரம் கொடு" என்றுவெற்றிலை பாக்கு மணக்க! எழுந்து இரு கரம் நீட்ட... அதுவரை குமுறி அழுத குழந்தை வெடுக்கென பெரியவர் கைக்கு அழுதுகொண்டே தாவியது. நரைத்த தாடியில் முகம் சேர்க்க,

"அய்யய்யோ தங்கம்... அழுது முகமெல்லாம் வேர்த்திடுச்சே..." என்று அழுக்குத் துண்டில் குழந்தையைத் துடைக்க, அது செருமிக் கொண்டே அவர் முகத்தை உற்றுப்பார்த்து சந்தேகத்துக் கிடமின்றி சேர்ந்து கொண்டது.

பெரியவர் தாடியை விரல்களால் நீவிக்கொண்டே, அவனது மனம் வீசும், மழ மழவென்ற சேவிங் செய்த முகத்தையும், கைகளில் உள்ள காஸ்ட்லி பொருட்களையும் ஒருவித ஆராய்ச்சியுடன் குழந்தை உற்று நோக்கியது. பளிச்செனெ, பந்தாவான லைஃப் ஸ்டைல் உள்ள தன்னிடம் வராத குழந்தை, அந்த அழுக்கான பெரியவரிடம் தாவியதைக் கண்டு அதிர்ச்சிக் குள்ளானவன் போல் அவனும் குழந்தையையே உற்று நோக்கி யோசிக்க ஆரம்பித்தான்.

***நன்றி: புதிய ஜனநாயகம் மே-2013***

# தராசு

*காலக் கணக்கின்*
*வழுக்களினால்,*
*உயிர்கள் காவு*
*கொள்ளப் படுகின்றன.*

*கரந்துறையும்*
*கால தூதர்களின்*
*கையில் சிறைப்பட்டு*
*உயிர்கள்,*
*காற்றில் கரைகின்றன.*

*முள் ஒடிந்து,*
*துருவேறிய தராசுடன்*
*நீதி தேவதையும்,*
*காலக் கணக்கின்றி*
*கண் மூடித்*
*துயில்கின்றாள்.*

வே.ஜ. வரதராஜன்

# ஈழத்து இலக்கியமும் சமூக விடுதலையும்

மக்களை விடத் தன்னை உயர்வாகக் கருதுகிற படைப்பாளி மக்கள் இலக்கியம் படைப்பது கடினம். ஏனெனில் அவருடைய கருத்தில், மக்கள் அவரையொத்த படைப்புத்திறன் அற்றவர்களாக மட்டுமன்றி, அவருடைய படைப்பைச் சரிவர உணரும் திறனற்றவர்களாகவும் இருப்பர். எனவே மக்களுள் மக்களாகத் தம்மை உணர்வோர் மக்களுக்கான இலக்கியங்களைப் படைப்பது தேவையாகின்றது.

ஞா. மீநிலங்கோ

### அறிமுகம்

இன்றைய ஈழத்து இலக்கியச் சூழல், இலக்கிய நோக்கிலும் சமூக அசைவியக்கத்திலும் மாற்றங்களைக் கண்டிருக்கும் அதேவேளை, இலக்கியம் சமூக மாற்றத் திற்கான முக்கிய இயங்குதளமாக மாறி யிருக்கிறது. குறிப்பாகப் போருக்குப் பிந்திய இலங்கைச் சூழலில், சமூக விடுதலைக்கான இயங்குதளங்கள் செயற்படாத, செயற்பட இயலாதநிலையில், இலக்கியத்தின் பங்கு முக்கியமாகிறது. குறிப்பாக, மக்களுக்கான இலக்கியங்கள் எனும் அடிப்படையில், ஈழத்து இலக்கியம் இன்று புதிய திசைவழிகளை வேண்டுகிறது. ஏனெனில் உலகின் ஒடுக்கப் பட்ட சமூகங்களின் முக்கியமான போராட்டக் கருவியாக இலக்கியம் எப்போதும் இருந்திருக்கிறது; இப்போதும் இருக்கிறது.

பண்பாட்டு இடைவெளிக்குட் சிக்கிப் பண்பாட்டு மௌனம் பேணுவோராக எல்லோரும் வாழும் ஒரு சூழலில் புதிய திசைவழிகட்கான தேவையைப் பேச வேண்டியிருக்கிறது. அனைத்து அதிகாரங்களின் முன்னும் வாய்பேசா மௌனியாயிருந்து, அதிகாரம் தனது அடையாளத்தை நெருக்கடிக்கு உட்படுத்துகையில் இருட்டறைக்குள் இருந்து வெளிவந்த ஒருவரைப் போற் சமூகத்தை எதிர்கொள்ளும் மனநிலை பரவலாக உள்ள இச் சூழலில், மார்ட்டின் நெய்மோலரின் 'அவர்கள் என்னைத் தேடி வந்தபோது...' எனத் தொடங்கும் கவிதை நினைவுக்கு வருகிறது. இந்நிலையில் மக்களையும் மக்களின் மனங்களையும் மீட்கப் புதிய வழிமுறைகள் தேவை யாகின்றன. அதற்கான ஒரு முக்கிய கருவியாக இலக்கியம் அமைகிறது. இலக்கியம் மனிதர்களோடு ஊடாடுகிற போதும், வாழ்க்கையும் இலக்கியமும் வெவ்வேறானவை. இப் புதிரான சமன்பாட்டைத் தம் இருப்பிலும் எழுத்திலும் ஏககாலத்திற் தீர்க்க முயலும் பலருக்கு அது சமப்படாமற் போய்விடுகிறது. இரண்டும் ஒன்றோடொன்று முரண்பட்டும் ஒன்றையொன்று வழிநடத்தியும் நகரும் அபாயமான விளையாட்டாகத் தொடர்கின்றன. ஆனால், இலக்கியம் மக்களுக் கானதாக மாறும்போது, இப் புதிரான சமன்பாடு எழுத்தாளனுக்கு வாய்ப்பது உண்மை.

சமூக மாற்றத்திற்கான இயங்கு தளங்கள் விடாது மாறுகின்றன. இன்றைய உலகமயமாக்கற் சூழலில் மக்களை ஒன்றுதிரட்டும் வழிமுறைகள் அருகுகின்றன. புதிய வழிமுறைகளைத் தேடுவதும் புதிய இயங்கு தளங்களை நோக்கிச் செல்வதும் இன்றைய தேவைகளாக உள்ளன. ஈழத்தின் இன்றைய சூழலில் பண்பாட்டுத் தளச் செயற்பாடும் மாற்றமும் முன்னெப்போதினும் முக்கியமாயுள்ளன. மக்களை ஒன்று திரட்டுவது கடினமாயும் சிக்கலாயும் மாறியுள்ள ஒரு சூழலிற்

பண்பாட்டுத் தளச் செயற்பாடுகளே மக்களைச் சென்றடைய உகந்த வழிமுறைகளாயும் மக்களை ஒன்றுதிரட்ட உகந்த மூலோபாயங்களாயும் உள்ளன. இந் நிலையில், திட்டமிட்ட பண்பாட்டுத் தளச் செயற் பாடுகள் அவசியம். எச் செயற்பாடும் மக்களை எவ்வளவு தூரம் சென்றடைகிறது என்பதே அதன் வெற்றியைத் தீர்மானிக்கிறது. எனவே தெளிவாகவும் இலகுவாகவும் சென்றடையும் வழி வகைகளைத் தேட வேண்டும். அதனாற் தான் இலக்கியத் தின் பங்கும்; பங்களிப்பும் பற்றிப் பேசவேண்டியுள்ளது. இலக்கியத்தைப் பற்றி மட்டுமன்றிச், சமூகத்தையும் நிகழ் நிலைகளையும் பற்றிய தெளிவையிட்டும் நடப்பன பற்றிய புரிதலையிட்டும் பேச வேண்டியுள்ளது. அப் புரிதல்களே சமூக விடுதலைக்கு இலக்கியங்கள் ஆற்றவேண்டிய பங்கு பணிகளை உணர உதவும்.

நெறிமுகம்

ஒரு சமூகத்தின் முக்கியமான அடையாளமாக மொழி இருக்கிறது. மொழியின் அழகியலையும் மொழியையுஞ் செழுமைப்படுத்துவனவாக இலக்கியங்கள் அமைவது வழமை. சமுதாய வளர்ச்சி மொழியைப் பாதிக்கிறது. சமுதாய வளர்ச்சியிலும் மாற்றத்திலும் மொழி முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு மொழி அதன் சமுதாய வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கத் தவறும்போது தன் சாவை எதிர்நோக்குகிறது. மொழியின் வளத்தையும் வளர்ச்சியையும் சமூக நடைமுறையே நிர்ணயிக்கிறது. இவ்வாறிருக்க, மொழி பற்றிய விறைப்பான பார்வைகள் ஒருபுறமும் பிறமொழிகளை கண் மூடித்தனமாகக் கலப்பது மறுபுறமுமாகப் பண்டிதர்களும் நவீனம் பேசுவோரும் மொழியின் சாவை விரைவுபடுத்தி, மொழியைக் கழுவேற்றுகிறார்கள். இது தமிழுக்கு மிகப்பொருந்தும். ஆயினும், இங்கு சொல்ல வேண்டிய ஒரு விடயம் ஏதெனின், எந்த மொழியாலும் அதன் சமுதாயச் சூழலின் மாற்றங்கட்கு ஈடுகொடுக்க முடியும். அவ்வாறு ஈடு கொடுக்க இயலாமற் போகத் தேவையில்லை. ஏனெனிற் புதிய சமுதாயமும் அதனுடன் தொடர்பான புதிய சிந்தனைகளும் சமுதாயத்தின் உறுப்பினர்களாலேயே உருவாகின்றன. தேவைகளையொட்டி மொழியில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவற்றைச் சரிவர உள்வாங்குவதோடு தனது அடிப்படைக ளையும் பேணுவதன் மூலம் மொழி வாழும்.

இது ஒருபுறமிருக்க, இலக்கியங்களை அரசியல்நீக்கித் தமது படைப்புகள் அரசியலற்றன எனப் படைப்பாளிகள் அறிவிப்பதும் ஒரு போக்காகியுள்ளது. குறிப்பாகப், போருக்குப் பிந்திய சூழலிற், தங்கள் படைப்புக்கள் அரசியலற்றன எனக் கூறும் அதேவேளை, அவை சமூகத்தைப் பிரதிபலிப்பதாகவும் சொல்கிறார்கள். எத்தகைய ஒரு முரண்நகை இது! உண்மையில் இது ஒரு நோய். தம்மை 'அரசியல் கடந்த' படைப்பாளிகளாக்கும் ஒரு முயற்சியின் வெளிப்பாடே இது. பிரச்சனைகளும் இன்னல்களும் அடக்கு முறையும் நிறைந்த ஒரு சமூகத்தைப் பிரதிபலித்து இலக்கியம் படைப்பவர் அரசியலற்று இலக்கியம் படைக்கலாம் என்பது எவ்வளவு பெரிய பொய்யோ,

அத்தகைய படைப்பு சாரமற்ற வெற்றுச் சரக்கு என்பது அதேயளவு மெய். இங்குதான், மக்கள் இலக்கியத்தின் தேவை பற்றியும் சமூக மாற்றத்தில் அதன் பங்கு பற்றியும் பேச வேண்டியிருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டின் முக்கிய நிகழ்வுகள் யாவற்றுக்கும் சாட்சி யாயிருப்பவை பப்லோ நெருடாவின் கவிதைகள். நெருடாவின் கவிதையின் உள்ளாந்த கூறுகளில் ஒன்று அரசியல். தனது கவிதையில் இருந்து அரசியலைப் பிரிக்க விரும்புகிறவர்கள் கவிதையின் எதிரிகள் என்று நெருடா சொன்னார். மக்களுக்காகப் பாடியதால் நெருடா பிரசாரக் கவிஞன் என்று தூற்றப்பட்டார். மக்களுக்காகத் தொடர்ந்து எழுதுவதன் மூலம் அவர் மக்கள் கவிஞனாகத் தன்னை நிறுவி நிலைநிறுத்தினார். இவ்வாறு, சமூக அக்கறை என்பது படைப்பாளியின் அளவுகோலாகிறது.

மக்களுக்கான கலை இலக்கியங்கள் எனும் போது, மக்களைச் சென்றடையும் பண்பு முக்கியமாகிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்கும் விடுதலைக்குமான ஆக்கங்களை, மக்கள் பரவலாக வரவேற்கும் கலை-இலக்கிய வடிவங்களில் வழங்குவதும் மக்களை நேரடியாக ஈடுபடுத்தக்கூடிய கலை-இலக்கிய வடிவங்களை ஊக்குவிப்பதும் மக்கள் சார்ந்த முக்கிய இலக்கியப் பணிகள். எவரும் விளங்கற்கரிய, வலிந்து கடினமாக்கிய படைப்புக்களை உயர்வாகவும் தெளிவும் எளிமையுங் கொண்டவற்றைத் தாழ்வாகவும் எண்ணி மயங்கும் போக்கு சில புத்திஜீவிகளின் சிந்தனைகளில் இறுகிக் கிடக்கிறது. மக்களுக்கு எட்டாதவை மக்களுக்கான இலக்கியங்களாகா. இப் பின்னணியில் இன்றைய சூழலின் சில அம்சங்களைக்

சமுதாய முன்னேற்றத்தோடு பின்னிப் பிணைந்தே இருந்து வந்துள்ளன. அதைக் கொண்டு பண்பாட்டு ஒருமைப் பாட்டுக்கு மத முலாம் பூசும் செயல்கள் நடந்தேறுகின்றன. ஆதனா லேயே " பிரிக்க முடியாத அணுக் கூறுகளின் உருமாற்றம்" என அதை அந்தோ னியோ கிராம்ஷி குறிக்கிறார்.

மதச் சார்பின்மைச் செயற்பாடுகளும் ஜனநாயகத்திற்கான போராட்டமும் ஒன்றோ டொன்று தொடர்பில்லாதனபோற் தெரிய லாம். ஆனால் அது உண்மையல்ல. மனித உரிமைக்காகப் போராடும் அனை வரும் மதச் சார்பின்மைக்காகப் போராடுகிறார்கள். ஜன நாயகத்தின் அவசி யத்தை வலியுறுத்தும் அனை வரும் மதச்சார்பின்மையின் அவசியத்தையும் வலி யுறுத்துகிறார்கள். மத வாதத் திற்கெதிரான போராட்டம் பிரசாரத்துடன் நிற்கமுடியாது. அது பண்பாட்டு அணிதிரட்டலை நோக்கி நகரவேண்டும். பண்பாட்டு அணி திரட்டலே மதச்சார்பின்மைக்கான போராட்டத்தை முன் னெடுக்கச் சிறந்த வழிமுறையாகும். மத நம்பிக்கைகளில் ஊறியுள்ள சமூகத்தை மீட்டெடுக்கச் சிறந்த மூலோபாயம் பண் பாட்டு அணிதிரட்டலே.

இப் பின்னணியிலேயே ஈழத்து இலக் கியத்தின் அவசியத்தையும் புதிய இயங்கு தளங்கட்கான வழித்தடங்களையும் தேட வேண்டும். குறிப் பாகச் சமூக விடுதலையை அடையும் பாதையில் இலக்கியத்தின் பணி தவிர்க்கவியலாதது என்பதுடன் அடை யாளங்களைத் தாண்டி மனிதர்களை ஒன்றிணைக்கும் பணியை இலக்கியங்கள் செய்ய வேண்டும். ஆனால் அவ்வாறான இலக்கியங்கள் எதிர்ப்புக்கட்கும் முத்திரை குத்தல்கட்கும் உட்படுகின்றன. சமுதாய உணர்வுக்கோ மனித இன மேம்பாட்டுக்கோ, மனித சமத்துவத்துக்கோ போராடும் குரல்கள் செவ்வியற் கலைகளிலிருந்து மட்டுமன்றி, உன்னதமானவை என்று கொண்டாடப்படும் அண்மைக்காலப் படைப்புக்களினின்றும் கவனமாகக் களையப் படுகின்றன.

அடக்குமுறையும் சுரண்டலும் உள்ள வரை, எதிர்ப்பும் போராட்டமும் இருக்கும். எதிர்ப்பும் போராட்டமும் கலை இலக்கிய வடிவங்கள் ஊடாகவும் எப்போதும் தம்மை வரலாற்றில் வெளிப்படுத்தி வந்துள்ளன. போராட்ட இலக்கியம் என்பது எதிர்ப்பு இலக்கியத்தின் வளர்ச்சி பெற்ற வெளி வெளியான வடிவம். அது தெளிவான போராட்ட இலக்குகளை உடையது. போராட் டத்திற்கான வழியைக் காட்டுவது.

இலக்கியத்தை விடுதலைப் போராட் டத்திற்கு ஏற்ற ஒரு வலுவான கருவியாக்குவது எவ்வாறு என்ற கேள்வியின் அடிப்படையில் இலக்கியத்தை அணு கும்போது, நமக்குச் சில தீர்வுகள் கிட்டுகின்றன. வெளிவெளியாகவே இவ் வாறான உணர்வுபூர்வமான நோக்கின்றிப் படைக்கப்படும் சமூகச்சார்பானதும் மக் களது நலன் சார்ந்ததுமான ஆக்கங்களுடன் இத் தீர்வுகள் முரண்பட அவசியமில்லை. ஏனெனில் ஒவ்வொரு படைப்பாளியினதும் சமூகப் பார்வை அவரது ஆக்கங்களிற் தன் முத் திரையைப் பதித்திருக்கும். எனின், விடுதலைப் போராட்ட இலக்குடைய ஒரு மக்கள் இலக்கியக் கோட்பாட்டுக்கெனச் சிறப்பான ஒரு அணுகுமுறை தேவையா என்ற கேள்வி எழுகிறது.

மக்கள் இலக்கியம் என்பதை மக்களின் நன்மைக்கான இலக்கியம், மக்களை விழிப்பூட்டும் இலக்கியம், மக்களைக் கிளர்ந்து போராடத் தூண்டும் இலக்கியம், மக்களால் ஆக்கப்படும் மக்கள் நலனுக்கான இலக்கியம் என்று சொல்லலாம். எனவே, மக்கள் இலக்கியத்திற்கு அவசியமான பண்பு அத்தகைய இலக்கியம் மக்களிடமிருந்து அந்நியப்படாமையே. மக்களை விடத் தன்னை உயர்வாகக் கருதுகிற படைப்பாளி மக்கள் இலக்கியம் படைப்பது கடினம். ஏனெனில் அவருடைய கருத்தில், மக்கள் அவரையொத்த படைப்புத்திறன் அற்றவர்களாக மட்டுமன்றி, அவருடைய படைப்பைச் சரிவர உணரும் திறனற்றவர்களாகவும் இருப்பர். எனவே மக்களுள் மக்களாகத் தம்மை உணர்வோர் மக்களுக்கான இலக்கியங்களைப் படைப்பது தேவையாகின்றது.

## நிறைமுகம்

இங்கு நாம் பேசுகிற சமூக விடுதலை, தமிழ் மக்களைப் பொறுத்தவரை, கைக்கெட்டாத் தொலைவில் இருப்பது போன்ற தோற்றத்தைத் தரும் நிகழ்வுகள் நடக்கின்றன. கடந்த முப்பதாண்டுகளுள் இலங்கையின் தமிழ் நடுத்தர வர்க்கத்தினரிடையே கர்நாடக இசை, பரத நாட்டியம் போன்ற துறைகளில் அக்கறை பெரிதும் வளர்ந்துள்ளது. பல லட்சங்கள் செலவில், அரங்கேற்றங்கள் ஆடம்பரமாக நடைபெறுகின்றன. இசையும் நடனமும் பற்றிய ஈடுபாட்டை விடப் போட்டி, அந்தஸ்து மனோபாவங்களே அவற்றை இயக்குஞ்

கருத்திற்கொள்வது கலை இலக்கியத்தின் தேவையையும் புதிய இயங்குதளங்களின் அவசியத்தையும் விளங்க உதவும்.

வன்முறைசாரா இயக்கங்கள் எல்லா ஜனநாயக நிறுவனங்களின் கதவு களையும் பல ஆண்டுகளாகத் தட்டியவாறு இருக்கின்றன. ஒவ்வொரு முறையும் அவை வெறுப்புடன் நிராகரிக்கவும் அவமதிக்கவும் படு கின்றன. ஆயினும் அகிம்சை பற்றித் தொடர்ந்து பேசப்படுகிறது. மக்கள், தவிர்க்கவியலாது, தங்கள் போராட்ட உத்திகளை மாற்றிக்கொள்ள விரும்பு வார்கள். மக்களின் முன் வேறு தெரிவுகட்கு இடமில்லாமற் செய்யப்பட்டிருக்கிறது. அகிம்சையைப் போதிப் போர், கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் விலக்கி, உடனடி நிகழ்வுகளின் மீதும் நிகழ்காலத்தின் மீதுமே கவனங் குவிக்கிறார்கள். இது பிழையானது மட்டுமன்றி மோசடியா னதுமாகும். தகவற் தொடர்பு, சந்தை எனும் இரு புதிய சூத்திரங்கள் அடையாளப்படுத்தும் ஒரு யுகத்தில், "நவீனமாக இருப்பது" என்பது " தகவ மைத்துக் கொள்வது அல்லது அடிபணிவது" என்ற ஒற்றை விதிக்குக் கீழ்ப்படிவதேயாகும் என அவர்கள் சொல்கிறார்கள். இன்றைய உலகப் பொருளா தாரத்தில், வெகுசன ஊடக நிறுவனங்கள் மிகப் பெரிய நிறுவனங்களாக இருக்கின்றன. சமூகம் எப்படி இருக்கிறது என்பதை அல் லாது, அது எப்படி இருக்க வேண்டும் எனக் காட்டும் மிகப் பெரிய கண்ணாடியை அவை கொண்டுள்ளன. தகவல் " திரட்டும்" பல்தேசியக் கம்பெனிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வெகுஜன ஊடகங்களின் ஆதிக்கத் துக்குட்பட்ட இந்த யுகத்தில் அகிம் சைப் போராட்டம் சாத்தியமா என்ற கேள்வி மீண்டும் மீண்டும் எழுகிறது.

உலகப் புகழ்பெற்ற நாடகாசிரியர் அரியேல் டோர்குமன் கேட்டதை நினைவு கூரல் தகும். " சித்திரவதைப் பட்டோரும் சித்திரவதையாளர் களும் எவ்வாறு ஒரே இடத்திற் சமா தானமாக வாழமுடியும் ஒடுக்கு முறையாற் பீதியுண்ட ஒரு நாட்டில் இன்றளவும் வெளிப்படையாகப் பேசுதற்குப் பயம் எங்கெங்கும் நிறைந்திருக்கையில், அந்த நாட்டை எவ்வாறு வேதனையிலிருந்து மீட்க முடியும்? பொய்யே வழமையா கிவிட்டபோது உண்மையை எட்டுவது எப்படி? நாம் வரலாற்றின் கைதி களாகாமல் எதிர் காலத்தை உயிர்ப் புடன் வைத்திருப்பது எப்படி? வருங் காலத்திலும் இவை நேரலாம் எனக் கருதாமல், அதை முற்றாக மறுத்தல் எவ்வாறு இயலும்? சமாதானத்தை உறுதிசெய்ய உண்மைகளைத் தியாகம் செய்ய வேண்டுமா? கடந்த காலத்தை நாம் மறுக்கும் போதும் நிராகரிக்கும் போதும், உண்மை நம்மிடம் வந்து முணுமுணுக்கையிலும் கதறுகையிலும் அதன் விளைவுகள் என்னவாக இருக்கும்? எல்லா வற்றையும் விட மிகப் பெரிய மனவேதனை ஏதெனில், தேசத்தில் ஜனநாயக நிலையை உருவாக்கும் மனோ நிலையை அழித்துவிடாமல் இவ் விடயங்களை நாம் எதிர் கொள்வது எவ்வாறு?"

ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு மதவாத ஃபாசிசத்தை அடைய மதம் எப்போதும் முயலும். அவ்வாறான ஒரு நிலையை மதம் எட்டும் பட்சத்தில் மதச்சார்பான சட்ட மூலங்களை நிறை வேற்றுவதும் ஏனைய மதங்களையும் நம்பிக்கைகளையும் தடுப்பதும் போன்ற முயற்சிகள் முழு வீச்சுடன் மேற் கொள்ளப்படும். ஆயினும், அப்போதும் ஜனநாயகமும் மதச் சார்பின்மையும் மறுக்கப்படாதது போல ஒரு தோற்றம் காட்டப் பட்டபடும். மதச்சார்பற்ற சக்திகள் தமக்குள் அணிதிரளாவிடின் மேற் சொன்ன அபாயங்கள் நிகழுங் காலம் தொலைவில் இல்லை. உடனடியான வெளிப்படையான விவாதம் ஒன்றே இம் முன்முயற்சிகட்கான உடனடித் தேவை. அது மதச்சார்பற்ற சக்திகள் என்ப வற்றுடன் நின்றுவிடலாகாது. அதற்கப்பாலான நேச சக்திகளை ஒருங்கிணைத்து ஒன்றுசேர்க்கும் ஒரு பணி எம்முன் உள்ளது. ஏனெனில் மதச்சார்பின்மை எவ்வளவு பலவீன மானது என்பதைக் கடந்த காலம் தெளிவாகக் காட்டியுள்ளது.

மதவாதச் சக்திகள் கலாசார மற்றும் சமூகத் துறைகளுட் தொடர்ந்து முன்னேறி வருகின்றன. இது மிக ஆபத்தானது. மதவாதிகள் பண்பாட்டையும் சமூகத்தையும் மதத்தின் ஒரு பகுதியாக கட்டமைக் கின்றனர். இதனாலேயே பெரும்பான்மை யோர் மதச் சார்பற்று இருந்தாலும், மத வாதச் சக்திகள் வெல்லக் கூடியதாக இருக்கிறது. இது அபாய கரமானது. மதமும் பண்பாடும் வேறுபாடற்றவை, இரண்டும் அடிப்படையில் ஒன்றே என்ற தோற்ற மயக்கத்தை உருவாக்குவது மதவாதிகளின் இன்றைய தந்திரமாக உள்ளது. மேலும், மதவாத அரசியலுள் மக்களை அணி திரட்டுவதும் இங்கு நிகழ்கிறது. உலக வரலாற்றில் மத, பண்பாட்டு முன்னேற்றங்கள்

சக்திகளாக இருந்து வந்துள்ளன. அவை சமூக விடுதலையை வேண்டும் மக்கள்திரளுக்கான நற் குணங்களல்ல.

கிராமச் சூழலிலிருந்து புலம் பெயர்த்து என்.ஜி.ஒக்களாலும் அரச நிறுவனங்களாலும் நகரங்களில் மேடையேறுகிற கிராமியக் கலைகளும் தமது இடப்பெயர்வுடன் சேர்ந்து தமது சமூக அடையாளத்தையும் சமூகப் பணியையும் இழந்து பண்பாட்டு வணிகத்தின் பகுதியாகி விடுகின்றன. எனினும் நம் முன்னே ஒருபுறம் நவீனத்துவத்தின் பேரால் ஒரு வகையான இசை, நாட்டிய மரபுகள் ஒரு கும்பற் கலாச்சாரமாக வளர்க்கப்படுகின்றன. அவற்றில் இளையோர் திரள்திரளாகப் பங்குபற்றினாலும் அவை எவ்விதமான சமூக நோக்கும் பார்வையும் அற்று இளைய தலை முறையினரைச் சீரழிவுப் பாதையிலே இட்டுச்செல்ல முனைகின்றன. இன்னொ ருபுறம், மரபின் பேரால் சமூகத்துடன் எவ்விதமான ஒட்டும் உறவும் அற்று மேடைக் கவர்ச்சியுடன் சேர்த்து ஒரு பாரம்பரிய இசையும் நடனமும் நமக்குப் பரிமாறப் படுகின்றன. அதன் மூலம் இலங்கையைச் சேர்ந்த கலைஞர்களின் விருத்திக்கு- முக்கிய மாகச் சமூக உணர்வுடைய கலைப் படைப்புகளின் உருவாக்கத்திற்கு- நன்மை யில்லை என்பதுடன், அவை பாதகமான சமூக விளைவுகளையே ஏற்படுத்துகின்றன.

சமூக விடுதலை என்பது பண்பாட்டு விடுதலையும் ஆகும் என்பதை நினைவில் கொள்ளல் தகும். ஏனெனில் ஒன்றில்லாமல் மற்றது இல்லை. படைப்பாளிகள் இதை நினைவிற் கொள்ள வேண்டும். புதிய பண்பாட்டை உருவாக்குவம் பணியில் இலக்கியம் முன்னிற்க வேண்டும். அப்போதுதான், பண்பாட்டுச் சீரழிவிலிருந்து சமூகங்களை மீட்டுருவாக்க முடியும். அவ்வாறு மீட்டுருவாக்கிய சமூகங்களே சமூக விடுத லைக்கான போராட்டத்தில் முக்கிய பங்காற்றுவன. அவ் வகையில், இன்று ஈழத்துத் தமிழ் இலக்கியம் முக்கியமான திருப்புமுனையில் நிற்கிறது எனவும் சமூக விடுதலைக்கான முன்நிபந்தனைகளில் ஒன்றாக மக்கள் இலக்கியங்களின் தேவை உணரப்படுகிறது எனவும் உறுதியாகச் சொல்லலாம்.

( நன்றி: நல்லதிபருக்கான விதப்புரை, கொழும்பு இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர் திருமதி இந்திரா இராஜரட்னம் அவர்களின் மணிவிழாவையொட்டிய சேவை விதப்புரை, *2013,* ப. *70-75*)

## பத்திஜீவி

வரவர ராவ்

மரம் இலையை வானுள் ஏந்தி நிற்பது
மண்ணுள் ஆழக் கிடக்கும் வேர்கட்கு உணவூட்டவே.
தனது பசும் முடியில் அது மலர்களை அணிவது
அதன் கனிகள் முதிர்ந்து
தரையில் உதிர்ந்த பின்
மீள மண்ணாவதற்கே.

குற்றம் அதிகாரத்தையும் வல்லமையும் தனதாக்கி
மக்களைக் குற்றவாளிகளாக்கி வேட்டையாடுமேல்
வாயிருந்தும் மௌனங்காக்கும் எவனும்
தானும்
ஒரு குற்றவாளியாகிறான்

சிறுகதை



# சூரியகாந்தி

துலங்கன்

விடிந்துவிட்டது. அதிகாலைச் சூரிய ஒளி, முற்றத்தில் பனிகொட்டிக்கொண்டிருந்த செவ்வரத்தை அரைநெல்லி பூவரச மரங்களின் இலைகளின் இடைவெளிகளை ஊடறுத்துக் கொண்டு விறாந்தையில் படுத்திருந்த என் முகத்தில் ஒளிக்கீற்றை வீசியது. முகத்தை திருப்பிப் படுத்திருந்தேன். இருந்தும் சூரிய ஒளி முகத்தை சூடேற்றி எழும்பு எழும்பு என்று சொல்லிக் கொண்டிருந்தது.

எழும்பியிருந்து சோம்பலைக் கொட்டாவியாக வெளியேற்றினேன். கண்களைக் கசக்கிக்கொண்டு அப்பு படுத்திருந்த பாயைப் பார்த்தேன். வழக்கம்போல அப்பு எழும்பி வளவுக்குப் போய்விட்டார். ஆச்சியும் எழும்பி வீட்டு வேலைகளைப் பாக்கத் துவங்கி விட்டா. ஒவ்வொரு நாளும் அம்மன் கோவில் காண்டாமணி சத்தம் கேட்டதும் முதல் நாள் ஆயத்தமாக சுத்திவைச்ச புகையிலை சுருட்டை எடுத்து மூட்டிக்கொண்டு பனி எண்டும் பாராமல் மழை எண்டும் பாராமல் அப்பு எங்கட வளவுக்கு போய் விடுவார்.

எங்கட அக்காவுக்கு சீதனமாய்க் குடுத்த வளவு அது. காடேறி கோவிலுக்கு முன்னுக்கு இருக்கிறது. அக்காவின் குடும்பம் திருக்கிணா மலையில் போய் குடியேறி விட்டார்கள். அத்தானுக்கு அங்கதான் வேலை என்பதால். வளவை அப்புதான் கவனிக்கிறார். ஒரு நாளைக்கு நாலு ஐஞ்சுதரம் அந்த வளவுக்கு அப்பு போவர். அப்பிடி என்ன அந்த வளவுக்கிள்ள இருக்கிது எண்டு கேப்பியள், வேற ஒண்டும் இல்ல அந்த வளவுக்கிள்ள நிண்ட ஒரு தென்னை மரம்தான். அந்த வளவுக்கிள்ள தென்னைமரங்கள் கனக்க நிக்கிது. ஆனால் அப்புவுக்கு பிடிச்ச அந்தச் சூரியகாந்தித் தென்னைமரம் நடு வளவுக்கிள்ள நிண்டது. இந்த மரத்தின் இளனியில இருக்கிற பணிவிலைக் கிளப்பினால் உள்ப்பக்கம் குங்குமக்கலரில இருக்கும். அதனால் தான் இதை சூரியகாந்தி மரம் எண்டு சொல்லுவினம்.

மூண்டு வரியத்துக்கு முதல் அப்பு திருக்கிணாமலைக்கு போவிட்டு வரேக்க வவனியாவில குருநாகல் தென்னம்பிள்ளை வியாபாரியள் வியாபாரம் செய்த இடத்துக்குப் பக்கத்தில ஒரு குப்பை மேடு இருந்தது. அதில அந்த தென்னம்பிள்ளைய யாவாரத்துக்கு உதவாது எண்டு தூக்கி எறிஞ்சிருந்தார்கள். அப்பு அந்த தென்னம்பிள்ளையை கண்டதும் அதை உத்துப்பார்த்தார். அதில கிடந்த மூண்டு ஓலையும் கருகிப்போய் இருந்தது. ஒரு சில இடங்கள்ள பச்சையும் பழுத்தலும் தலை காட்டிக்கொண்டிருந்தது. அப்பு அதை குனிஞ்சு எடுக்கேக்க ஒரு வியாபாரி "அது நல்ல சூரிய

காந்தி மரம்தானே, எடுத்திட்டுப் போய் நடுங்க ஐயா. நல்லா வரும்" எண்டு நக்கலாகச் சொன்னான்.

அப்பு தன்னம்பிக்கையோட அதை எடுத்துக்கொண்டு வந்து எங்கள் வளவுக்குள் நட்டு நல்ல கவனாமான கவனிப்புக் காட்டினார். பெத்த பிள்ளையைப் போல ஏதோ ஒரு மாதிரியான பாசம் அந்த தென்னைமரத்தில் அவருக்கு இருந்தது. தென்னம்பாத்தி கொஞ்சம் காஞ்சு கிடந்தால் போதும் உடன மிசினை கொண்டுவந்து வளவுக்கிள்ள இருக்கிற கிணத்தில இருந்து தண்ணி இறைச்சு எல்லா மரங்களுக்கும் பாச்சுவார். சூரியகாந்தி தென்னைமரத்தை நல்ல வடிவாக காஞ்ச ஓலைகளை வெட்டி கீழ கிடக்கிற புல்லுகள் எல்லாத்தையும் பிடிங்கி அந்த இடத்தையே துப்புரவாக வைத்திருந்தார். அது மட்டுமில்லை அந்த மரத்தோட அடிக்கடி கதைப்பார். ஏன் மூதேவியே உனக்கு இவ்வளவு தண்ணி இறைச்சு விட்டிருக்கிறன் பிறகென்னத்துக்கு சோந்துபோன மாதிரி நிக்கிறா. மரம் செழிப்பாய்த்தான் நிக்கும். ஆனால் அப்புவுக்கு அது சோர்வாய் நிக்கிற மாதிரித்தான் மனம் சொல்லும். வளவு வேலை முடிஞ்சு வீட்டை வரேக்கையும் மரத்தை அடிக்கடி திரும்பி பாத்துக்கொண்டுதான் வருவார். சில நேரம் திரும்பி நிண்டு தலையை சரிச்சுக்கொண்டு அந்த மரத்தின் வடிவையும் பொலிவையும் ரசிப்பார். அந்த அளவுக்கு அது இரண்டு ஆள் உயரத்துக்கு வளந்து வட்டின் நாலு பக்கமும் மொழு மொழு எண்டு இளனிக் குலைகளைத் தாங்கி நிண்டது. எந்தப்பக்கம் உள்ள குலையில் எத்தனை இளனி இருக்கெண்டு அப்புவுக்கு மனப்பாடம். சில நேரம் நான் ஆசைப்பட்டு ஒரு இளனி பிடுங்கட்டே அப்பு எண்டு கேட்டால் விடமாட்டார். அந்த அளவுக்கு அதின்ர வடிவைக் கெடுக்க அப்பு விரும்பிறதே இல்லை.

இண்டைக்கு அப்புவின் உடல்நிலை ஒரு மாதிரி இருந்தது. அடிக்கடி கக்கூசும் கிணத்தடியுமாத் திரியிறார். நானே ரண்டு மூண்டு தரம் தண்ணி அள்ளிக்கொண்டுபோய் வச்சுவிட்டன். "அப்பு என்னனை செய்யுது?" ஏண்டுகேக்க, "வயிறு ஒருமாதிரி கிடக்கிதடா, தலையை சுத்திற மாதிரியும் இருக்கிது" எண்டு கனைப்பு குரல்ல சொன்னார். இண்டைக்கு நான்தான் ரண்டு மூண்டு தரம் வளவில போய் அப்பு சொன்ன வேலைகளை சும்மா மேலோட்டமாய் செய்து போட்டு வந்தனான். அப்புவுக்கு நான் வடிவாய்ச் செய்தானோ இல்லையோ எண்ட சந்தேகம்.

அப்பு பாய் விரிச்சு சுருண்டு படுத்து விட்டார். ஆச்சியும் தன்னால ஏலக்கூடிய மருந்துகள் எல்லாம் செய்து குடுத்து பாத்துவிட்டா. சரிவரேல்ல. ஆச்சி என்னட்டச் சொன்னா, "தம்பீ, நாளைக்கு ஒருக்கா உந்த சங்கானை ஆஸ்பத்திரிக்குக் கொப்பரை கூட்டிக்கொண்டு போடாப்பு" எண்டா. "ஓமணை விடியேலைக்கு கூட்டிக்கொண்டு போறன்," எண்டன். ஏனெண்டால் அப்புவைப் பாக்கப் பாவமாய் இருந்திச்சுது.

அடுத்த நாள் அப்புவை சயிக்கிள்ள ஏத்திக்கொண்டு என்ர நண்பனையும் துணைக்கு கூட்டிக்கொண்டு சங்கானை ஆஸ்பத்திரிக்கு போனன். கொண்டு போன உடனை டொக்டர் பாத்துவிட்டு சொன்னார், இவருக்கு வாந்திபேதி வருத்தம் எண்டு. உடன யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போங்கோ எண்டார். நான் சாடையாய்ப் பயப்பிடத் துவங்கிவிட்டன். உடன நண்பனை வீட்டுக்கு தகவல் சொல்லி அனுப்பிப்போட்டு அதிலையே ஒரு கார் பிடிச்சு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோவிட்டன். அங்க அப்புவை வாட்டில மறிச்சுப் போட்டினம். அப்புவின் முகம் வாடிப் போய் இருந்தது அவரை கட்டில்ல வளத்திப்போட்டு பக்கத்திலையே நானும் ஒரு கதிரையை போட்டு இருந்தன். "அப்பு என்னப்பு செய்யுது?" எண்டு கேட்டன். "இப்ப ஒரு அளவுக்கு பறவாய் இல்லை அப்பு" எண்டார். விசுக்கோத்துகளும் தேத்தண்ணியும் வாங்கி கொண்டு போய் குடுத்தன். ரண்டு மூண்டு சாப்பிட்டுவிட்டு, "தொண்டைக்கிள்ளால போகிதில்லையடா தம்பி" எண்டார். "கொஞ்சம் கொஞ்சமாய் சாப்பிடுங்கோ அப்பு" எண்டு சொன்னன். பொழுது சரிஞ்சு கொண்டு வந்துவிட்டுது. அப்பு சொன்னார் "நீ வீட்ட போ அப்பு" எண்டு. அந்த நேரத்தில ஒரு நேர்ஸ் வந்து சொன்னா ஐயாவுக்கு நல்ல தண்ணி சாப்பாடு குடுக்க சொல்லி டொக்டர் சொன்னவர் எண்டா. அப்ப, நான் அப்புவை கேட்டன். "நான் போய் ரண்டு இளனி வாங்கிக்கொண்டு வரட்டே அப்பு" எண்டு. உடன அப்பு கையை உயத்தி ஆட்டி "சீச் சீ எனக்கு ஒண்டும் வேண்டாம் நேரம்

போய்விட்டுது நீ வீட்டை போய் நாளைக்கு விடிய வா" எண்டார்.

கொஞ்ச நேரத்தால அப்பு நான் வீட்ட போவிட்டு நாளைக்கு விடிய வாறன் என்று சொல்ல, அப்பு 'தம்பி தம்பி' எண்டு ஏதோ சொல்லவந்தார். ஆனால் தயங்கி நிக்கிற மாதிரி இருந்திச்சுது. "என்னணை என்ன வேணும் சொல்லுங்கோ" எண்டு கேட்டன். "விடியேலைக்கு வரேக்க அந்த சூரிய காந்தியில ஒரு இளனி பிடிங்கிக்கொண்டு வா" எண்டு தயங்கித் தயங்கிச் சொன்னார். நான் அவரை ஆச்சரியமாய்ப் பாத்தன். பிறகு "ஏனப்பு ரண்டு மூண்டு இளனி பிடிங்கிக்கொண்டு வாறன்." எண்டன். "வேண்டாம் வேண்டாம் ஒரே ஒரு இளனி காணும்" எண்டும் எந்தப்பக்கத்தில இருக்கிற குலையில பிடுங்க வேணும் என்பதையும் ஏறிப்பிடுங்க வேண்டாம் ஏணி வச்சுத்தான் பிடுங்க வேணும் என்பதையும் (தென்னோலை சளிஞ்சு போகுமாம்) இளனியை முறுக்கி பிடுங்காமல் கத்தி கொண்டுபோய் மெள்ள அறுத்து பிடுங்க வேணும் என்பதையும் விளக்கமாச் சொன்னார். கேக்கக் கேக்க எனக்கு ஆத்திரம் வந்தாலும் அவற்ற நிலைமையை பொறுத்து "ஓமப்பு" எண்டு சொல்லிப்போட்டு வீட்ட வந்துவிட்டன்.

வீட்டை வரேக்க பொழுது பட்டுப்போச்சு. ஆச்சியிட்ட அப்புவின் நிலைமைகளை சொன்னன். "விடியேலைக்கு திரும்பவும் ஆஸ்பத்திரிக்கு போகவேணும் .விடிய எழும்பி ஏதாவது சமையணை" எண்டுசொல்லிப் போட்டு, இப்ப இருண்டு போச்சு இப்ப வளவுக்கு போக ஏலாது விடியப்போய் இளனியைப் பிடுங்குவம் எண்டுவிட்டு சாப்பிட்டுவிட்டு படுத்து விட்டன்.

அடுத்தநாள் அம்மன்கோவில் காண்டா மணி சத்தம் கேட்டதும் மளமளவென்று எழும்பி கத்தியைத் தேடினன். ஆச்சியும் எழும்பிவிட்டா. "தம்பி உந்த முன்னுக்கு நிக்கிற முருங்கையில ரண்டு முருங்கைக்காய் ஆஞ்சு தந்துவிட்டு போ தம்பி" ஆச்சி கேட்ட ரண்டு முருங்கை காய்களை ஆஞ்சு குடுத்துவிட்டு கத்தியை எடுத்துக்கொண்டு வளவுக்கு போனன்.

வளவு படலையடிக்கு போகேக் கிள்ளையே ஏதோ பிரச்சனை நடந்ததுக்கான அறி குறிகள் தெரிஞ்சது. சங்கிலியால கொழுவி பூட்டியிருந்த படலையை ஆரோ உடைச்சுத் துறந்து கிடக்கிது. நான் உடைச்சுக்கிடந்த படலைக்கிள்ளால உள்ளுக்குப் போய் பாத்த காட்சி என்ர நெஞ்சையே உறைய வச்சுவிட்டுது. ஓம் சூரிய காந்தி அலங் கோலமான நிலையில நிண்டது. மரத்தில ஒரு இளனியும் இல்லை. அத்தனையும் வெறும் கோம்பைகளாக நிலத்தில சிந்திக்கிடந்தது. ரண்டு மூண்டு ஓலைகளும் முறிஞ்சு கிடந்தது. நடுக்குருத்தை மடக்கி முறிச்சுவிட் டிருந்தார்கள். இளனி களைத் தடியால் குத்தி ஓட்டை போட்டுப் இளனியை குடித்துவிட்டு எறிஞ்சுபோட்டுப் போய் விட்டார்கள். எனக்குப் பாக்கப் பாக்க ஆத்திரமும் கவலையும் உடல் சோர்வையும் மன வெறுப்பையும் கொண்டுவந்தது. சீ என்ன மனிசர் இந்த உலகத்தில. சாதாரணமான இளனிதான் ஆனால் அதுக்கிள்ள இருக்கிற ஆர்வம், எதிர் பார்ப்பின்மை, கடின உழைப்பு அதெல் லாத்தையும் விட வாயே இல்லாத அந்த சீவனில என்ர அப்பு வச்சிருந்த இனம் புரியாத ஒரு பாசம், எல்லாத்தையும் ஒரு இரவுக்கிள்ள சீரழித்துவிட்டார்களே. வெறுப் பான மனதோடும் வெறும் கையோடும் வீடு திரும்பினேன்.

நடந்ததை ஆச்சியிடம் சொன்னேன். கேட்டதும், "ஐயோ எந்தக் குறுக்காலபோவார் செய்தது உந்தக்காரியம். கொப்பருக்கு தெரிஞ்சா செத்தே போவிடுமடா இப்போதைக்கு கொப்பருக்கு ஒண்டும் சொல்லிப்போடாத. பிறகு வீட்ட வந்தாப்பிறகு ஆறுதலாய் சொல்லலாம் எதேன். சொல்லிச் சமாளிச்சுப் போடு" எண்டு கெஞ்சிச் சொன்னா. "சரி நான் சமாளிச்சுக் கொள்ளிறன்". எண்டு ஆச்சியைச் சமாதானப்படுத்தினேன். பழைய வீரகேசரி பேப்பரை எடுத்து விரிச்சு வச்சு வாட்டின தலைவாழை இலையை அதுக்குமேல வச்சு சுடச்சுட ஊர் அரிசி சோத்தை போட்டு அதுக்கு மேல ஒரு பக்கத்தில் அரைச்சுக்காச்சின முருங்கைக்காய் கறியை வைச்சு அதுக்குப் பக்கத்தில் கத்தரிக்காய் வெள்ளைக்கறியையும் வச்சு சோத்துக்கு நடுவில ஊர்க்கோழி முட்டையை அவிச்சு உடைச்சு வச்சு பாசலை பக்குவமாய் மடிச்சு பின்னல் வாக்கிகிள்ள வச்சு என்னட்ட தந்தா ஆச்சி. அதில் ஆச்சியின் கை வண்ணமும் அவாவுக்கு அப்புவின் மேல் இருந்த அன்பும் இருந்தது.

கண்ணகை அம்மன் கோவிலடியில் இருந்து பஸ் வெளிக்கிடும் சத்தம் கேட்டது.

சிறிது நேரத்தில் ஆச்சியிடம் விடை பெற்றுக் கொண்டு பஸ் ஏறினேன். பஸ் ஏறியதும் என் மனம் ஒரு நிலைப்பாட்டில் இல்லை. போன உடன இளனி எங்க எண்டு அப்பு கேக்கப்போறார். வேற ஒரு இளனி வாங்கிக்கொண்டுபோய் குடுத்து அப்புவை ஏமாத்த முடியாது. ஏனென்றால் சூரியகாந்தி இளனி எப்பவும் அப்புவின் கண்களுக்குள் தெரிந்துகொண்டே இருக்கும். யாழ்ப்பாணம் பஸ் ஸ்ராண்டில் இறங்கியதும் அப்புவுக்கு சொல்லப்போற பதில் தெரியாமல் தயக்கத்தோடு ஆஸ்பத்திரிக்குள் போனேன். பார்வையாளர் நேரம்தான். நேர அப்பு இருக்கும் வாட்டுக்குள் போய் அப்பு இருந்த கட்டிலைப் பார்க்கிறேன். கட்டிலில் அப்பு இல்லை. என்னை கண்டதும் ஒரு நேர்ஸ் ஓடிவந்தா. தம்பி ராத்திரி உங்கட அப்பா போய் சேர்ந்துவிட்டார் எதுக்கும் நீர் சவக்காம்பிரா பக்கம் போய் பாரும் என்று சொன்னதும் நின்ற சுற்று சூழ்நிலையையும் மறந்து "ஐயோ என்ர அப்பு" என்று குழறியே விட்டேன்.

வீட்டு முற்றத்தில் பந்தல் போடப்பட்டு அப்புவுக்கான கடமைகள் நடந்து கொண்டிருந்தன. என் தலை மொட்டை அடிக்கப் பட்டது. அக்காவுக்கும் தகவல் அனுப்பப்பட்டு குடும்பத்தோடு வந்துவிட்டா. அக்கா அப்புவின் தலைமாட்டில் இருந்து கொண்டு "ஐயோ என்ர அப்பு எங்களை எல்லாம் விட்டுவிட்டு போவிட்டியே என்ர அப்பு" என்று அழுது கொண்டிருக்கிறா. வெள்ளைச் சீலையில் ஆச்சி எனக்குப் பக்கத்தில் நின்று அழுது கொண்டிருக்கிறா. மாமா குருக்களின் காதில்; "ஐயா, வருத்தமாய் கிடந்த உடம்பு. கன நேரம் வச்சிருக்க முடியாது" எண்டதும் குருக்கள் கெதியாக தன் அலுவல்களை முடிச்சுக்கொண்டு பிரேதத்தை எடுக்கச் சொல்லிப்போட்டார். ஆச்சியும் அக்காவும் சொந்தக்காரர்களும் படலை வரை வந்து அழுது குளறி அப்புவை வழியனுப்பி வைத்தார்கள். எனது கையில் தரப்பட்ட கொள்ளிகுடத்தோடு பாடைக்கு முன் நடந்து போகிறேன் என் அப்புவின் கடைசி ஆசையை நிறைவேற்றி வைக்க முடியாத அப்பாவியாக். எங்கள் வளவுக்கு கிட்ட பாடை வந்ததும் மெதுவாக தலையை திருப்பி கரையில் நின்ற மரங்களையும் ஊடறுத்து நடுவில் நின்ற சூரிய காந்தியை பார்க்கிறேன். அதுவும் தலை விரி கோலமாக நின்று அப்புவை வழி அனுப்பி வைத்துக்கொண்டிருக்கிறது.

## கிடைக்கப்பெற்றோம்



நூல்: 'ஈ' தனது பெயரை மறந்துபோனது
கவிதைத் தொகுப்பு
நூலாசிரியர்: றஷ்மி
வெளியீடு : காலச்சுவடு பதிப்பகம்



நூல்: ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்பு
கவிதைத் தொகுப்பு
நூலாசிரியர்: கருணாகரன




நூல் : முற்போக்கு இலக்கியத்துக்கு
கைலாசபதியின் பங்களிப்பு
ஆய்வு நூல்
நூலாசிரியர்: கலாநிதி ந. இரவீந்திரன்
விலை : ரூ 200/-
வெளியீடு: இலங்கை முற்போக்கு இலக்கிய மன்றம்

# வியர்வை சிந்து !

செபமாலை உருட்டி மந்திரங்கள் ஓதுவதையும்
வேதகீதங்கள் பாடுவதையும் விட்டுத்தள்ளு
கபடங்கள் அடைக்கப்பட்ட
இருண்ட கோயிலின்
ஒரு மூலையில் அமர்ந்து நீ
யாரை வழிபாடு செய்து கொண்டிருக்கிறாய்?
கண்களைத் திறந்து பார்!
உன் கடவுள் உன் முன்னே இல்லை!
அவன்,
ஏர் பிடித்து வன்னிலத்தை உழுது வாழும்
ஏற்றமுள்ள உழவர்தம்
உழைப்பில் உள்ளான்



உழைப்பாளருடன் வெயிலில் காய்வான்
நன்றாய்,
ஊற்றுகின்ற மழைதனிலே நனைவான் - ஆடை
உழைப்பாளர் போல் அழுக்காய் மாறும்
உதறி எறி, உன் புனித மேலங்கி தனை!
அவனைப்போல் இறங்கி வா
புழுதி மண்ணில்!

உன் பூசனையை விட்டுவிட்டு வெளியே வா நீ!
அர்ச்சனை மலர்களையும் நறுமண ஊதுவத்திகளையும்
உதறி எறிந்துவிட்டு வெளியே வா நீ!
உனது புத்தாடை அழுக்கடைந்து கிழிந்தாலென்ன
உழைக்கின்ற அவனோடு சேர்ந்து நில்!
வியர்வை சிந்து!

ரவீந்திரநாத் தாகூர்
தமிழில்: புவியரசு

## தேசிய கலை இலக்கியப் பேரவையின் 40ஆவது ஆண்டு நிறைவு விழா





## புதுவசந்தம் 2013 அறிமுக நிகழ்வுகள்

**யாழ்நகர்**





**சங்கானை**





**வவுனியா**






**மாத்தளை**





